# கட்டுரைக் கோவை

நா. மாணிக்க இடைக்காடர்

# கட்டுரைக் கோவை

நா. மாணிக்க இடைக்காடர்

1986

விலை ரூபா: 10-00

# முன்னுரை

எங்கள் நாட்டில் சில காலத்திற்கு முன்னர் ஆங்கிலத்தில் பேசுவதும், எழுதுவதும், அறிவுடைமைக்கு அழகென்றும், தமிழைப் புறக்கணிப்பது தவறன்றென்றும் அறிவாளர் கருதுவாராயினர்; ஆயினும் இப்பொழுது அத்தகைய கொள்கைகள் அநேகன்று ஒழிய தமிழில் ஆர்வம் உண்டாக தாய்மொழிக் கல்விமுறை உதவுகின்றது.

இந்த மாறிய நிலையில் தமிழ்மக்களின் கல்விமுன்னேற்றத்துக்கு மிக அவசியமானதைப் பொறுப்புடையோர் இன்றும் உணராதிருப்பது வேதனைக்குரியது. பாரதியார் கூறியதுபோல் "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை."

இன்றைய நிலையில் கல்வி முன்னேறுவதற்கு மேலைநாட்டுக் கலைகளை, விஞ்ஞான சிந்தனைமுறைகளை நன்கறிந்து தமிழ் மொழியில் இன்றைய குறைகளை நிறைவுசெய்யும் ஆற்றல் பெற்ற தொண்டு மனம் படைத்த பலர் தேவை.

ஆங்கிலம் கற்ற நல்லறிஞர் இருந்தபோதும், புதிய கருத்துக்களை உணர்த்துவதற்கேதுவான தமிழின் விழுமிய உண்மைகள் அறிந்தவர் சிலரினும் சிலரே.

எம்முடைய தினசரி பத்திரிகையில் இப்பணியைத் தொடக்கி வைக்க வல்லவர் திரு. நா. மாணிக்க இடைக்காடர் M. A (CANTAB), M. Sc (LONDON) ஒருவரே என்றுணர்ந்த நாம்

விடுத்த கோரிக்கையை மனமுவந்து நிறைவேற்றியதற்கு எங்கள் வாசகர் சார்பில் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

இன்று இக்கட்டுரைகள் நூல் வடிவம் பெறுவது இவற்றைப் படிக்கவேண்டியவரின் நல்லதிர்ஷ்டமே.

தமிழ் மக்களின் சங்ககாலமரபு குறிப்பாக புறநானூறு, திருவள்ளுவரின் பொய்யாமொழி, பாரதம், இராமாயணம் போன்ற இலங்கு நூல்களில் வடித்தெடுக்கப்பட்ட அடிப்படை உண்மைகளை அத்திவாரமாகக் கொண்டு, கட்டிஎழுப்பப்பட்ட கட்டுரைகள் ஆசிரியரின் கணிதப்புலமை, புள்ளியியல் திறமை, சிவில் சேவிஸ் உத்தியோகத்தில் கண்டதும் கேட்டதும், ஐ. நா புள்ளியியல் நிபுணரின் கடமையில் செய்த பயணங்களும் அதன் பலாபலன்களும், மேனாட்டு பல்கலைக்கழக அனுபவங்களும், எங்கள் அரசியல், கல்வி சமய, சமூக விவகாரங்களும் மிக இனிமையான தெளிவான தமிழில் பொன்போன்ற கருத்துக்களாக மிளிர்கின்றன.

இத்தகைய கட்டுரைக் கோவை இதுவே முதல் என்று எமக்குப்படுகிறது. எனவே இவ்வரிய முயற்சியை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இந்த நூலைப் படிக்கவேண்டுமென்பதோடு, ஆசிரியர் இவ்வித தொண்டில் தொடரவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஈழநாடு
யாழ்ப்பாணம்.

ந. சபாரத்தினம்
நிருவாக ஆசிரியர்.

# என்னுரை

எனது நண்பனும், மறைந்த எனது மருமகன் பேராசிரியர் கைலாசபதியின் நண்பனும், ஈழநாடு பத்திரிகையின் நிருவாக ஆசிரியருமான திரு ந. சபாரத்தினத்தின் வேண்டுகோளுக்கிணங்க 1983ம் ஆண்டு சில கட்டுரைகளை எழுதலாமென்று ஆரம்பித்தேன். நாலு ஐந்து கட்டுரை வெளிவந்ததும் வாசகர்களும் நண்பர்களும் உற்சாகமூட்டத் தொடர்ந்து எழுதினேன். தற்பொழுது கட்டுரை தொகை நாற்பதைத் தாண்டிவிட்டது.

ஒரு கட்டுரையையோ நூலையோ எழுதும்பொழுது ஆசிரியருக்கு ஒரு இலட்சியம் அல்லது நோக்கம் அடிப்படையில் இருக்கும். இதற்கு நான் விதிவிலக்கல்ல. எங்கள் சமயம் கலாச்சாரத்தில் தற்காலத்தில் ஏற்கக்கூடிய முக்கிய கருத்துக்களையும் மேலைநாட்டு விஞ்ஞானத்தில் எங்கள் நாட்டில் நடைமுறைபடுத்தக்கூடிய கருத்துக்களையும் சேர்த்து எழுதினால் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கலாம் என்பது எனது முக்கிய நோக்கம். வாசிப்பதற்கு மாத்திரம் நான் எழுதவில்லை. ஏற்கக்கூடிய கருத்துக்களை நடைமுறைப் படுத்துவதே எனது அடுத்த நோக்கம். இந்த நோக்கங்களை பிரதிபலிக்கக்கூடியதாக கட்டுரைகள் பலன் கொடுக்கிறதா வென்று வாசகர்களே தீர்ப்புக்கொடுக்க வேண்டும். எனது பணி எழுதுவதும், நேரில் சந்திப்போரை நடைமுறைபடுத்தக் கேட்பதுமே என்று கூறலாம்.

நிரந்தரமாக பெறுமதிவாய்ந்த (perennial values) கருத்துக்கள் ஒரு சமூக வளர்ச்சிக்கு தேவை. அன்றாட வாழ்வுக்கு பெறு

மதியான கருத்துக்கள் மாறிக் கொண்டேயிருக்கும். இதனுல் நிரந்தரமாக பெறுமதிவாய்ந்த கருத்துக்களை அடிப்படையாக வைத்து இக்கட்டுரைகள் எழுதப்பட்டன.

எங்கள் சமூகம் ஒரு விவேகமுள்ள சமூகம். எனது நண்பன் அமரர் சிறிகாந்தா ஒருமுறை "ஒரு நல்ல கருத்தை நடைமுறைப்படுத்த எங்கள் மக்களுக்கு பத்தாண்டு வேண்டும்" என்று கூறினுர். இதை நான் ஏற்கிறேன். ஆனுல் இன்றைய சூழ்நிலையில் பத்தாண்டு கூடிய காலகட்டமாக விருக்கிறது. இதை எப்படியாகினும் குறைக்க வேண்டும்.

வாழ்க்கையில் பலவித கருமங்களை செய்து திருப்தியடைந்திருக்கிறேன். இவைகளில் இக்கட்டுரைகளை எழுதியதும் ஒன்ருகும்.

ஈழநாட்டில் வெளிவந்த இக்கட்டுரைகளை நூல் வடிவத்தில் பிரசுரிப்பதற்கு ஈழநாட்டு நிருவாகத்தினர் கொடுத்த இணக்கத்திற்கு எனது நன்றி உரித்தாகுக.

அச்சுப்பிழையிருந்தால் எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

சிவராசா வீதி, நா. மாணிக்க இடைக்காடர்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
1986.

சமர்ப்பணம்

நான் பிறந்த பூமி

யாழ். மாநிலத்திற்கு

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எளிய வாழ்க்கை முறையும் உயரிய சிந்தனையும் இன்னும் தமிழரின் இலட்சியமா? | ... 1 |
| 2. | நம் முன்னோரும் நாமும் | ... 4 |
| 3. | மாறும் சந்தர்ப்பங்களும், மனித வாழ்வும் | ... 9 |
| 4. | கங்கை கொண்ட சோழபுரம் இன்றைய சமுதாயத்துக்குத்தரும் எழுச்சியான செய்தி | ... 12 |
| 5. | சுற்றமும், உதவியும் | ... 15 |
| 6. | இரு பெரியார் | ... 18 |
| 7. | நேர்மை இன்னமும் செத்துவிடவில்லை | ... 22 |
| 8. | சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்புண்டா? இல்லையா? | ... 26 |
| 9. | ஏட்டுச்சுரக்காய் எதற்கும் உதவாது | ... 30 |
| 10. | எங்களில் இப்படி எத்தனையோ இருக்கிறார்கள்? | ... 33 |
| 11. | தமிழருக்கு இருக்கும் நல்ல பெயரை பாதுகாப்போம் | ... 36 |
| 12. | ரியூட்டறி ஒரு பெரும் பிரச்சனை | ... 41 |
| 13. | வீண் விரயம் வேண்டாம் | ... 47 |
| 14. | நான் கண்ட வன்னி | ... 51 |
| 15. | ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாழ் மத்திய கல்லூரி | ... 58 |
| 16. | புத்தளத்தில் இரு ஆண்டுகள் — கஷ்டமான நிலைமைகளிலும் மக்களுக்கு பணியாற்றலாம் | ... 64 |
| 17. | தெரு வீதிகளில் நம் இளம் பெண்களின் பாதுகாப்பு | ... 69 |
| 18. | சேர் ஒலிவர்—பழகும் கலைபடித்த ஓர் தலைவர் | ... 73 |
| 19. | தாய் குலத்தின் பொறுப்பு | ... 82 |
| 20. | மலேசியா சிங்கப்பூர் விஜயம் | ... 87 |
| 21. | பொறுமை பொல்லாதது | ... 93 |
| 22. | அருச்சுனனும் பிராட்மனும் | ... 98 |
| 23. | விவசாயத்தில் அமரர் "கும்" காட்டிய முன்மாதிரி | ... 102 |
| 24. | நம்பிக்கையின் வல்லமை | ... 106 |
| 25. | வள்ளுவரும் புற நானூறும் வலியுறுத்தும் பண்பு | ... 110 |

அத்தியாயம் 1

# எளிய வாழ்க்கை முறையும் உயரிய சிந்தனையும் இன்னமும் தமிழரின் இலட்சியமா ?

கோலாலம்பூரில் பள்ளிப் படிப்பை முடித்த நண்பரொருவர் இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்வதற்கு கொழும்பு வந்தார்.

அக்காலத்தில் கணிதத்துறைப் பேராசிரியராகத் திகழ்ந்த திரு. சுந்தரலிங்கத்தைக் காணும்படி அவருக்கு ஆலோசனை கூறப்பட்டது. பேராசிரியரின் கறுவாக்காட்டு இல்லத்துக்கு சென்ற போது, வாசலில் மோட்டார் வண்டியை வேட்டிகட்டிய ஒருவர் துடைத்துக்கொண்டிருந்ததை நண்பர் கவனித்தார்.

சாரதியாகவிருக்க வேண்டு மென்று நினைத்துக் கொண்டு போனவரைத் தூய ஆங்கிலத்தில், ''நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்'' என்று உபசரித்து வீட்டுக்குள் கூட்டிச் சென்றவர் சாட்சாத் பேராசிரியரே என்று வெளித்ததும் நண்பர் அதிர்ச்சியடைந்தார்.

இந்த யாழ்ப்பாண மரபுக்கு இன்னொரு உதாரணம்: சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் அக்காலத்துக் கல்வி மாஅதிபர்

(எஸ். எவ். டி. சில்வா) யாழ்ப்பாணம் வந்திருந்தார். ஒரு காரில் வட்டுக்கோட்டைக்குப்போகும் வழியில் ஒரு வயோதிபப் பெண் தெருவிலிருந்து சாணியை அள்ளிக்கொண்டிருந்ததால் கார் விபத்துக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டது; அதனைச் சாதுர்யமாய்த் தவிர்த்த திரு. டி. சில்வா காரிலிருந்து இறங்கி ''ஆச்சி இதென்ன வேலை? வேறு தொழில் ஒன்றும் இல்லையா?'' என வினவினார்.

''என்னுடைய மூத்தவன் பட்டதாரி; கொழும்பில் உத்தியோகம், மற்றவன் பல்கலைக்கழகத்தில் படிக்கிறான். நான் காலத்தை வீணாக்காது இக்கிராம வாசிகளுக்குச்சாணி சேர்த்து இனமாகக் கொடுப்பதில் பொழுதைப் போக்குகின்றேன்'' என்று விடையளித்தார் அப்பெண்.

''தெற்கே இப்படிப்பட்ட பெண் வீட்டிலே நாலு வேலையாட்கள் வைத்துக்கொண்டு வசதியான வாழ்க்கை நடத்துவது வழக்கம்'' என்று திகைத்தார் கல்விமா அதிபதி டி. சில்வா.

இப்பண்பு யாழ்ப்பாணத்துக்கு மட்டும் சொந்தமென்று சொல்லமுடியாது. பல ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்குப் போனபோது ஒளவை சண்முகம் என்னையும் எனது பாரியாரையும் ஏ. வி. எம். ஸ்டுடியோவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு தூரத்தில் ஒருவர் ஒரு ஆணியைச் சுவரில் அடித்துக் கொண்டிருந்தார். அவர்தான் ஏ. வி. எம். (மெய்யப்பன்) அவர்கள் என்று அறிமுகப்படுத்தினார் ஒளவை சண்முகம்.

பெரும் சிந்தனையாளரும், படைப்பாளருமாகிய இவர் இந்தச் சின்னஞ்சிறிய வேலையைத்தானே செய்தார். அது உடனே செய்தாகவேண்டிய வேலை, யாரும் அந்நேரத்தில் அங்கு இல்லை. எனவே எதனையும் சிறிதல்ல என்று நினைப்பவர், நடப்பவர் ஆகையால் அப்படிச் செய்தார்.

எதற்காக உலகப்புகழ் பெற்ற பாரதத்தின் இளைப்பாறிய தலைவர்கள் மூவர் சென்னையைத் தங்கள் இருப்பிடமாக்கினார்கள்? முதலாவது இந்திய மகாதேசாதிபதி ராஜாஜி, தத்துவமேதை கலாநிதி ராதாகிருஷ்ணன், கிரி ஆகிய ராஷ்டிரபதிகள் தமிழகத்தின் எளிய வாழ்வையும் உயரிய சிந்தனையையும் பெரிதாக மதித்தனர்.

உணவு, உடை, வீடுவாசலில் செலவை நாம் வீணாக்குவது கண்கூடு; தேவைக்கேற்றபடி செலவை நன்றாய்க் குறைத்துக் கொள்ளலாம்; உணவைப்பதுக்குதலோ, சேகரிப்பதோ சமூக விரோதமான

செயல்கள் என்று கொள்வது தவறு? மற்றவர்களும் வாழவேண்டு மென்ற உயர்ந்த நோக்கம் எளிய வாழ்வின் அடிப்படையாகும்.

உடையைப் பற்றிப் பேசும் போது அகில இந்தியத் தலைவர் காமராஜரின் சென்னை இல்லம் நினைவுக்கு வருகின்றது. ஒரு வேட்டியும் ஒரு ஷேட்டும் வெளிக்கொடியில் காயும்; மற்றச் சோடியை அணிந்து கொள்வார். திரும்பவும் காய்ந்ததை உடுத்துக் கொண்டு மற்றச் சோடியைத் தோய்த்துக்காய விடுவார் காமராஜர்.

இதற்கு எதிர்மாறாக வாழ்ந்தவர்கள் இந்திய மகாராஜாக் கள்; ஒரு மகாராஜாவின் செயலாளர் (ஆங்கிலேயர்) இடம் மாறிச் சென்றபோது, புது மகாராஜா தம்முடன் உள்ள ஷேட் 2000 என்றும், மற்றவரிடம் 1000 தான் உண்டெனவும் பெருமையாக வெள்ளையரிடம் கூறினார்.

மிக வேடிக்கையாக, வெள்ளையர், ''இரண்டு மடங்கு ஷேட் இருப்பதால் உங்கள் மூளை மற்றவரின் மூளைக்குப் பாதியாய்த்தான் இருக்கவேண்டும்'' என்றார்.

மக்கள் வசிப்பதற்குப் போதிய வீடுகள் இல்லை; அதே நேரத்தில் இருக்கிறவீடுகள் பல அநாவசியமாகப் பெரிதாக இருக்கின்றன. 'சிறுகக் கட்டிப்பெருக வாழ்க' என்ற முதுமொழியில் எத்துணை ஞானம் உண்டு!

எளிமையான வாழ்வு என்றால் சிந்தனையும் அவ்வாறென்பதல்ல. இலட்சிய வாழ்வுக்குத் தேவைகள் குறைவது அவசியம். பொது நலவாழ்வில் சிந்தனை ஆழமாவதால் சொந்த வாழ்வு எளிமையாவது இயற்கை.

அரசாங்க உயர் அதிகாரிகள் உயர்மட்ட வாழ்வில் இன்பங் காண்பதால் பொது மக்களின் தேவைகள் தெளிவாகத் தெரிவதில்லை. அவர்களின் திட்டங்கள் பல தென்னை மரத்தில் புல்லுப் பிடுங்கப்போனவரின் கதைபோல ஆகும்.

இன்றைய காலகட்டத்தில் எழும் கேள்வி, எளிமையான வாழ்வும் உயரிய சிந்தனையும் இன்றும் எங்களிடம் இருக்கின்றதா?

மேனாட்டு நாகரிக மோகம் எங்கள் வாழ்க்கை முறைக்கு முரணானது. அதன் சிறந்த அம்சங்களை எங்கள் பண்பாட்டுக் கேற்ற முறையில் சேர்த்து வாழத்தெரிந்தவர்களே புத்திமான்கள்.

*அத்தியாயம்* **2**

# நம் முன்னேரும், நாமும்

*1938-ம் ஆண்டு கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நான் ஒரு மாணவன். அங்கு சிவில் சேவிஸ் பரீட்சைக்கு சில ஆங்கில வகுப்புகள் பிரத்தியேகமாக நடாத்தினர்கள். நானும் அவ்வகுப்பில் சேர்ந்தேன். வாரத்திற்கு ஒரு தரம் கட்டுரை எழுதினேம். என்னுடைய கட்டுரை ஒன்றில் எங்கள்முன்னேர் எங்களிலும் பார்க்க தேக ஆரோக்கியம் உள்ளவர்கள், மற்றும் எல்லா விதத்திலும் எங்களுக்கு அவர்கள் ஒருபடிகூட என்று எழுதியிருந்தேன். மறுவகுப்பில் அக்கட்டுரையை திருப்பித்தரும்பொழுது பேராசிரியர் எனது கொள்கை மேலைத்தேச நாட்டவர்களுக்குப் பொருத்தமில்லையென்றும், மற்றது தற்போதைய மக்கள் தேக ஆரோக்கியத்திலும், கல்வியிலும், மற்றைய எவ்விடயத்திலும் முன்னேரைவிட ஒருபடிகூட என்றும் கூறினர். உடனே எனக்கு சிறுபிள்ளையில் கேட்கும் எல்லாப் பொது அபிப்பிராயங்களும் உண்மையில்லை என்று புலப்பட்டது. ஏனெனில் என் கட்டுரையில் நான் சிறுவனாக யாழ்ப்பாணத்தில் கேட்டதையே எழுதியிருந்தேன். இச்சம்பவத்தின் பிறகு எவரேனும் முன்னேரைப்பற்றி அதிகம் பேசினல் நான் தீர ஆலோசித்துத்தான் ஒரு முடிவிற்கு வருவேன்.*

*யார் அறிவாளியென்றல், அவன், தான் ஏற்ற எவ்விஷயத்தையும் நன்றாக ஆராய்ந்து, ஆழ்ந்து யோசித்து ஒரு முடிவிற்கு*

வருகிறவன். எம் முன்னேரைப்பற்றியும் இப்படியே நாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். சமயம், சமயஅறிவு, சமயசிந்தனை, தத்துவம், இலக்கியம் போன்ற விஷயங்களை பார்க்குமிடத்து நாம் பெருமைப்பட வேண்டும். வடக்கே ஒரு மனுவும் தெற்கே ஒரு திருவள்ளுவரும் வாழ்க்கை நெறியைத் தொகுத்து கொடுத்தார்கள். சில அரசர்கள் தீர்க்கதரிசிகளாய் இருந்தபடியால் பெரிய கோவில்கள், குளங்கள், வாய்க்கால்கள், பிரமாண்ட முறையில் சிற்பங்கள் (உதாரணமாக மாமல்லபுரம்) இன்னும் எங்களுக்குப் பயன் தருகின்றன. தமிழ் மக்கள் முன்னேரையும், பெரியோரையும், எப்பொழுதும் கனம்பண்ணுவார்கள். ஆகையால் தகுந்த முறையில் எம்முன்னேரை நாம் மதிக்க வேண்டும். ஆனால் இத்துடன் நின்று விடாது இவர்கள் செய்த மாபெரும் விடயங்களை எங்களுக்கு உற்சாகம் தரும் வகையில் பயன்படுத்திக் கொண்டு எதிர்காலத்தைக் ஒரு பொற்காலமாய்க் கட்டி எழுப்ப முற்பட வேண்டும். இந்த எண்ணம் தான் ஒரு சமுதாயத்தின் ஆணிவேர்.

உங்களுக்கு இந்தவிடத்தில் ஒரு சம்பவத்தை கூறுகிறேன். நான் சிவில் சேவிசில் ஊவாமாகாணத்தில் கடமையாற்றும் பொழுது அரசாங்க அதிபர் ஒரு ஆங்கிலேயர். ஒரு றடமகத்மயா (தமிழ் பிரதேசத்தில் முதலியார்.) ஒருவரை நியமிக்க நேர்முகப் பரீட்சை வைத்தார். பரீட்சைக்கு வந்தவர்களில் ஒருவர் உரையாடும் பொழுது அரசாங்க அதிபருக்குத் தன் பேரன் அப்பகுதிக்கு என்ன என்ன செய்தாரென்றும், தனது தந்தை என்ன என்ன செய்தாரென்றும், மற்றும் மூதாதையோர் என்ன நல்ல காரியங்கள் செய்தார்கள் என்றும் கூறினர். இறுதியில் அரசாங்க அதிபர் "இவை யாவும் உங்கள் பரம்பரைக்கதை, உம்மைப்பற்றி ஏதாவது சொல்ல இருக்கிறதா?" என்று கேட்டார். மௌனம் சாதிக்கவே அவரை அவ்வுத்தியோகத்திற்கு தகுந்தவரில்லை என்றுகூறி அனுப்பினர். பழம்பெருமையை சொல்லிக்கொண்டு சீவிக்கிறேமா அல்லது ஒரு நல்ல பொற்காலத்தை சிருஷ்டிக்கிறேமோ என்பதுதான் கேள்வி.

உலகம் போற்றும் விஞ்ஞானி நியூற்றன், சிலவேளைகளில் ஏன் தான் மற்றவர்களிலும் பார்க்க கூடப்பார்க்கக் கூடியதாக இருந்தது என்றல் உயரிய (விஞ்ஞானத்தில்) மனிதரின் தோள்களிலிருந்து உலகத்தைப் பார்த்ததால்தான் என்று கூறுவார். அவருக்கு முன்பிருந்த கொபெனிகஸ், கெப்லர், கலிலியோ போன்ற விஞ்ஞானிகளைத்தான் நியூற்றன் உயரிய மனிதர் என்று கருதினர். நாமும் இந்த இருபதாம் நூற்றண்டில் எல்லா விஞ்ஞானமும் உச்சத்தில் இருப்பதால் இதைப்பயன்படுத்தி நம் முன்னேரி

லும் பார்க்க ஒருபடிகூட ஒரு நல்ல வாழ்க்கை முறையைச் சம்பாதிக்கலாம். இதனுல் காற்சட்டை போடவேண்டுமென்றல்ல, வெள்ளைக்காரனைப்போல் ஆங்கிலம் பேசவேண்டுமென்றல்ல. வீட்டை மேலைநாட்டு ஓவியங்கள் அலங்கரிக்க வேண்டுமென்றல்ல. விஞ்ஞானத்தால் வரும் நன்மையை எங்கள் வாழ்க்கையில் சேர்த்துக் கொள்வதுதான் சிறப்பாக இருக்கும்.

சுகாதாரத்தை எடுப்போமேயாளுல் நாம் இன்று பலவசதிகள் உள்ளவர்களாக இருக்கிறேம். இறப்பு வீதம் படிப்படியாக உலகத்தில் பல நாடுகளில் குறைந்து வருகின்றது. மருத்துவமனை வசதிகள் உண்டு. வைத்தியர்கள் உண்டு. இலவச வைத்தியமும் இருக்கின்றது. பணவசதி உள்ளவர்களுக்கு வசதியான மருத்துவமனை உண்டு. இந்த நன்மைகளைப் பெறும் பொழுது இதனுல் வேறுவசதியீன முண்டாவென்றும் யோசிக்கவேண்டும். இறப்பு வீதம் குறையும் பொழுது பிறப்பு வீதமும் குறையா விட்டால் சனத்தொகை கூடும். இதனுல் உள்ள வசதிகளைப் பங்கிட வேண்டும். அப்பொழுது எமக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் தலா குறையும். ஆகையால் சுகாதாரத்தைப் பயன்படுத்தும்பொழுது இறப்பையும், பிறப்பையும் ஒன்று சேர்த்துக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும்.

உணவு, விவசாயத்தை எடுத்துக்கொண்டால் முன் பல நூற்ருண்டுகளில் பெற்றவிளைச்சலிலும் பார்க்க இந்த நூற்ருண்டில் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. மனிதனுக்கு முக்கியமான உணவுகளான கோதுமை, அரிசி என்பன கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. பொர்லொக், சாண்டலர் போன்ற விவசாய ஆராய்ச்சி மேதாவிகளின் அயராத உழைப்பினுல் அற்புதமான கோதுமை, நெல்விதை இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனுடன் நீர்ப்பாசனவசதி, பசளை வசதி, பணவசதி போன்றவையால் ஒரு பெரிய விவசாய உணவு யுகத்தை கண்டுகொண்டிருக்கிறேம். இந்த விவசாயத்தால் வரும் அதிகப்படியான உணவை சனப்பெருக்கத்தாலும், உணவுப்பங்கீடு முறைகளின் குறைவாலும் பாமர மனிதர் முழுக்க அனுபவிக்க முடியவில்லை என்பது தான் கவலை.

கல்வி இப்பொழுது ஒரு பெரிய சமுத்திரமாகி விட்டது. நியூற்றன் காலத்தில் இந்த மேதாவிக்கு அக்காலத்துக் கணிதம், பௌதீகம், வானசாஸ்திரம் எல்லாம் தெரியும். இப்பொழுது கணிதத்தில் ஒரு மேதாவி என்று குறிக்கும் பொழுது எப்பகு

திக்கென்றும் குறிக்கவேண்டும். இந் நூற்றுண்டில் ஒரு தனி இயலாகிய புள்ளிவிபரமே இப்பொழுது பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. புள்ளி விபரத்திலே மாத சஞ்சிகைகள் ஆலகில் நூற்றுக்கு மேலாக வெளிவருகின்றன. யாரால் இவையெல்லாம் வாசிக்க முடியும். இதனுல் தான் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வருகிறது. இம்முறையிலுள்ள அபாயத்தை சில நாடுகள் அறிந்து இதைதிருத்த வழிவகுக்கிருர்கள். அபாயம் என்னவென்ருல் ஒரு குறுகிய பகுதியிலே நிபுணர் ஆக வரும் பொழுது இவருக்கு வேறு விஞ்ஞானங்களைப் பற்றி அறிவில்லாததால் பெருங்குறைகள் உண்டு. இதற்காக முக்கிய பாடத்துடன் வேறுசில பாடங்களையும் சில நாடுகளில் கற்பிக்கிருர்கள். இத்தகைய குறைக்கு உதாரணமாக சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பட்டதாரி ஆசிரியையுடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது கார்ல் மார்க்ஸ், லெனின் என்பவர்களைப் பற்றிக் கூறினேன். இந்த ஆசிரியை தான் இவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லையென்ருர். ஆகையால் பல்கலைக்கழகங்கள் அனுபவரீதியில் கல்வியில் பரந்த அறிவு கொடுப்பதற்குத்தக்க முறைகளைக் கையாளவேண்டும்.

ஆனுல் மனிதமுன்னேற்றத்திற்கு எல்லா விஞ்ஞானமும் எல்லாவிதத்திலும் முன்னேற்றம் அடைந்து கொண்டு செல்கிறது என்று கூறமுடியாது. நாம் அதை எப்படிப் பயன்படுத்துகிருேமோ அதில்தான் வெற்றியுண்டு. தொலைக்காட்சி மூலம் கல்வியை வளரச் செய்யலாம். அறிவுக்குரிய விஷயங்களைச் சேர்த்துத் தொலைக்காட்சியில் காட்டலாம். அதே வேளையில் தகுதியற்ற படங்களைக் காட்டுவதால் பார்ப்போருக்குக் கெட்ட எண்ணங்கள் தோன்றி படிப்படியாகக் கெட்டுப்போகிருர்கள். உணவை எடுத்துக்கொண்டால் பசிப் பிணியைப் போக்குவதற்கு அதிக உணவு உற்பத்தி வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் நூற்றுக்கு இருபது பேரளவு அமெரிக்காவில் தேவைக்குக் கூடிய உணவையுண்டு பல நோய்களுக்கு ஆளாகிவிடுகிருர்கள். இதைத்தவிர்க்க வேண்டும். நாம் எவ்வளவிற்கு இயற்கை உணவை உண்கின்ருேமோ அவ்வளவிற்கு அது தேக ஆரோக்கியத்திற்கு நல்லது. இவைபோன்ற விடயங்களில் நாங்கள் எம் முன்ஞேரைவிட ஒரு படி குறைவு. சில இடங்களில் வயதுமுதிர்ந்தவர்கள் கூறுவார்கள், 'எங்களைப்போல் இல்லை எங்கள் பிள்ளைகள்' என்று. இதுவுண்மையே.

கவிஞர் கண்ணதாசன் இருபாடல்களை இயற்றினர். ஒன்றில், மனிதன் மாறிவிட்டான் என்றும், மற்றையதில் மாறவில்லை, என்

றும். இரண்டும் உண்மையே! வெளித்தோற்றம், கல்விபோன்ற விடயங்களில் மாறிவிட்டான்; ஒருவிதத்தில் இதுஒரு முன்னேற்றம் என்றே கூறலாம். ஆனால் ஒருவருக்கொருவர் உதவிசெய்யும் மனப்பான்மை, கருணை போன்ற அம்சங்களில் மாறவில்லை. மாறி விட்டான் என்று கூறினல் அது முன்னேக்கித் தான் என்று கூற வேண்டும். சமய உணர்ச்சியிலும் குறைந்துகொண்டு போகிறன் என்றல், இது ஒரளவிற்கு உண்மை. காகம் காலையில் எழுந்து இரைதேடுவதுபோல் இக்காலத்தில் மனிதன் தன் கடமையில் ஓடியாடித் திரிவதால் ஆத்ம சிந்தனைக்கு நேரமில்லை. அமைதி கிடையாது. இதுபோன்ற அம்சங்களில் எங்கள் முன்னேர்கள் பாக்கியசாலிகள் தான். எங்கள் முன்னேர்களின் நல்ல அம்சங்களுடன் தற்பேதைய சூழ்நிலையிலுள்ள நல்ல அம்சங்களையும் சேர்த்து ஒரு நல்ல வாழ்வு வாழ்வோமாயின் இதுவேதான் நாங்கள் எங்கள் பின் சந்ததியாருக்குக் கொடுக்கும் பரிசு.

அத்தியாயம் 3

# மாறும் சந்தர்ப்பங்களும் மனித வாழ்வும்

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு ஆங்கில மாத சஞ்சிகையை வாசித்தேன். இதில் ஒரு அத்தியாயம் அமெரிக்காவில் ஒருசெனட்டரைப்பற்றி இருந்தது. இவர் முதன் முறையாக செனட்டுக்குப் போட்டியிடுகிறார். முதல் கூட்டத்தில் தலையில் நிறைய முட்டையும் தக்காளியும் கிடைத்தன. இதற்கு என்ன பரிகாரம் என்று யோசித்தார். அடுத்த கூட்டத்திற்குப் போகும் முன் அக்கிராமக் கடையிலுள்ள முட்டைகளையும், தக்காளிகளையும் விலைகொடுத்து வாங்கி ஒளித்துவைத்துவிடவில்லை. இப்படிச் சில செனட்டர்கள் செய்வதுண்டு. அப்படியானல் கூட்டத்தில் எறிய முட்டை, தக்காளி இருக்காது.

இதற்குப் பதிலாக முதற்கூட்டத்தில் என்ன மக்களுக்கு அதிருப்தியாக பேசினேரென்று ஆழ்ந்து யோசித்தார். இந்த யோசனையின் பிரகாரம் தன் பேச்சைத் திசைதிருப்பிப் பேசினர். அன்று அவருக்கு அமோகவெற்றி. அப்பொழுது அவர் உலகிற்கே ஒரு பொன்மொழி கூறினர். எவன் புத்திசாலி என்றல் தனக்குவரும் இக்கட்டான நிலையை சாதுர்யத்தால் தனக்கு நன்மை கொடுக்கத் திருப்பக்கூடியவனே என்ருர். நான் இந்த பொன்மொழியை ஏற்றுவாழ்கிறேன். உதாரணமாக பல ஆண்டுகளுக்கு முன்பு நான் அரசாங்க சேவையில் இருக்கும்பொழுது எனது தாயார் யாழ்ப்

பாணத்தில் காலமானர். எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டு புகையிரதத்தில் கொழும்பு திரும்பும்பொழுது நான் எனது மனைவி யாரை 'செனட்டர் சொன்ன பிரகாரம் இந்த இறப்பால் நாங் கள் எவ்வித நன்மை பெறலாம்?' என்று கேட்டேன். மனைவியா ருக்கு கோபமே வந்துவிட்டது. கொழும்பு வந்து சேரமுன் எனக்கு மறுமொழி கிடைத்து விட்டது. நான் எனது மனைவியாருக்கு கூறினேன் முன்பு ஒருமுறை ஐக்கிய நாட்டு தாபன உத்தியோ கம் கொடுக்கமுயன்ற பொழுது தாயாரை விட்டுப்போக மன மில்லாததால் மறுத்துவிட்டேன். இப்பொழுது நான் அதை ஏற் கலாமென்று, அப்படியே இரண்டு, மூன்று ஆண்டுகளில் இலங்கை அரசாங்க சேவையை முடித்துக்கொண்டு ஐக்கிய நாட்டுத் தாப னத்தில் சேர்ந்தேன்.

உலகம் போற்றும் கிரிக்கட்வீரன் டொன்பிராட்மன் எப் பொழுதும் சொல்லுவார் ஒரேமாதிரி பந்து வீச்சுக்கு தான் இரு தரம் ஆட்டம் இழப்பதில்லையென்று. அதாவது ஆட்டம் இழந்த வுடன் பிராட்மன் எதற்காக தான் ஆட்டம் இழந்தாரென்று யோசித்துபிறகு அதுபோல் பந்துவீசினல் அதை சமாளிக்க கற் றுக்கொண்டார். இதற்கும் செனட்டர் கூறியதற்கும் அவ்வளவு வித்தியாசமில்லை.

இன்னுமொரு உதாரணம் என்னுடன் சிவில் சேவிஸில் கடமையாற்றியவர் 1958 கலவரத்திற்கு பின்பு இந்த உத்தியோ கம் சரியில்லை என்று நினைத்து வேலையை விட்டுவிட்டு இப்போது பிரபல வியாபாரியாக இருக்கிறர். சமூகத்திற்கு மிகவும் உதவு கிறர்.

இதையெல்லாம் பார்க்குமிடத்து சந்தர்ப்பம் எல்லாம் எங் கள் கட்டுப்பாடில்லா விட்டாலும் பரிகாரம் எங்கள் கையிலே இருக்கிறது என்று தெரிகிறது. நடந்ததையிட்டு கவலைப்படுவதால் பயனில்லை. எதிர்காலத்தை சமாளிப்பதே சாதுர்யம். இதற்கு பொறுமையும், மூளைவலிமையும், தளராத முயற்சியும் தேவை. இவையெல்லாம் எங்களுடன் போதிய அளவில் இருக்கின்றன தன்நம்பிக்கை வேண்டும். மலையே சரிந்தாலும் மனம் தளர்க் கூடாது இரண்டாம் மகாயுத்தத்திற்குப்பிறகு யப்பான், ஜெர்மனி என்னகோலத்திலிருந்தன. இப்பொழுது என்ன நன்னிலையிலிருக் கின்றன! ஒரு இடத்தில் ஒரு ஜெர்மன் பொறியியலாளர் எனக்கு சொன்னது ஞாபகமாயிருக்கிறது. யுத்தத்தில் ஒரு பெரிய தொழிற் சாலை குண்டினல் நாசமாகிவிட்டது. இதைத் திருப்பிக்கட்ட வேலை தொடங்கிவிட்டது. பாவிக்கும் இயந்திரத்திற்கு ஏறத்தாழ

ஒரு இலட்சம் பாகங்கள் (Parts) இருந்தன. அந்தப்பட்டியல் (List of Parts.) இல்லை. தங்களில் சில பொறியியலாளர் ஒரு இலட்சம் பகுதிகளைப் பத்தாய்ப்பிரித்து பத்துப் பொறியிலாளர்களிடம் ஒப்படைத்தார்கள். ஒரு மாதத்திற்குள் ஒவ்வொருவரும் யோசித்து யோசித்து எல்லாவற்றையும் குறித்துப் பட்டியல் தயார்செய்து முடித்தார்கள். மனித மூளையால் செய்ய இயலாதது ஒன்றுமில்லை. இவ்விடத்தில் ஆர்தர்கிளார்க் சொல்வதைக் கேட்போம்.

"சிந்தனையில் ஒரு விஷயத்தை செய்யலாமென்று ஊகித்து எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் "இது செய்யவேண்டும் என்ற பெரிய அவாவும் இருந்தால் நடைமுறையில் அதனை செய்யலாம்" இதனை ஞாபகத்தில் வைத்து எதிர்காலத்தை துணிச்சலுடன் எதிர்நோக்குவோமாக!

அத்தியாயம் 4

# கங்கை கொண்ட சோழபுரம் இன்றைய சமுதாயத்துக்குத் தரும் எழுச்சியான செய்தி

பன்னிரண்டு பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன், நான் ஜகார்த்தாவில் கடமையாற்றும் காலத்தில் ஒரு நாள் பல்வைத்தியரிடம் சென்றேன். அவர் சீன வம்சாவழியினர். சில நிமிடம் காத்துக்கொண்டிருக்கும் பொழுது 'இந்தியா' என்ற பெயரில் ஒரு பெரியநூல் அங்கு இருந்ததைக் கண்டேன். அதைப்புரட்டிப்பார்த்தேன். 352 படங்கள் கொண்ட அந்த அரிய நூல் மார்டின் குற்லிமான் (Martin Huslimann) என்ற ஜெர்மனியர் தமது மொழியில் எழுதிய நூலின் ஆங்கிலப் பிரசுரம். தேம்ஸ் அண்ட் ஹட்சன் (Thames & Hudson) ஆங்கிலத்தில் பிரசுரித்திருந்த அந்த 352 படங்களில் 64 தமிழ் நாட்டின் சிலைகளின் படங்கள் ஆகும்.

ஒரு சீனக்குடும்பம் இந்த சிறந்த நூலே வாசிக்கிறுர்களே என்று நான் மகிழ்ந்து போனேன். என்னைப் பல்வைத்தியத்துக்கு அழைத்தபொழுது அந்த வைத்தியரை (இவர் ஒரு பெண்மணி) இந்நூலைப் பற்றிக் கேட்டேன். அப்பொழுது அம்மாது அந்நூல்

தன்னுடைய கணவனுடையதென்றும் அவர் ஒரு வைத்தியரென்றும் இந்திய கலைகளில் அதிலும் முக்கியமாகச் சிலைகளில் மிகவும் ஆர்வமென்றும் கூறினர். கணவன் பலமுறை இந்தியா சென்று பலகலைச்செல்வங்களைப் பார்வையிட்டிருக்கிறார் என்றும் கூறினர். உடனே நூலின் விபரத்தை குறித்துக் கொண்டு அப்பொழுது லண்டனில் படித்துக்கொண்டிருந்த எனது மகளுக்கு அந்நூலின் ஒரு பிரதியை அனுப்பும்படி எழுதவும் காலதாமதமில்லாமல் அந்நூல் என்கைக்கு வந்துவிட்டது. இந்நூல் வந்து சேர்ந்ததும் தமிழ்நாட்டு சிற்பங்களின் விபரத்தைக் குறித்துக்கொண்டேன். ஒவ்வொரு முறையும் இந்தியா போகும் பொழுது எனது மனைவியும் நானும் ஒரு சிலவற்றையாவது பார்வையிடுவோம்,

தமிழ்நாட்டு சிற்பங்களில் மிகவும் சிறப்பாக மூன்றைப்பற்றி கூறப்பட்டன:-

(1) தஞ்சாவூர் பெருங்கோயில் (விமான உயரம் 220 அடி)

(2) கங்கை கொண்ட சோழபுரம் (விமான உயரம் 180 அடி)

(3) மாமல்லபுரம் சிலைகள். ஏற்கனவே தஞ்சாவூர் பெருங் கோயிலையும் (பிரிகதீஸ்வர கோயிலையும்) மாமல்லபுரத்தையும் பலமுறைபார்த்து விட்டோம். எஞ்சிய கங்கை கொண்ட சோழ புரத்தை அண்மையில் இருச்சியில் நானும் மனைவியும் தங்கியிருந்த பொழுது பார்வையிட்டோம். கோவிலுக்கும் கிராமத்திற்கும் ஒரே பெயர்தான், பார்வையிட்ட பிறகு நூலாசிரியர் கூறிய "இது சிற்பக்கலையின் ஒரு மாணிக்கம்"? (A gem of plastie art) ஒன்ற வாசகம் நூற்றுக்குநூறு சரியென்று நினைத்தோம்.

தன்னுடைய தந்தையாகிய முதலாம் இராசராச சோழன் கட்டிய தஞ்சாவூர் பெருங் கோயிலைப்போல் தன்னுடைய புதிய இராச தானியாகிய கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலைக் கட்டிவித்தவன் முதலாம் இராசேந்திரன் (இவரது ஆட்சி கி.பி. 1012—1044). இந்தக் கோயிலும் கிராமமும் கும்ப கோணத்திலிருந்து 34 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றன. திருச்சி சிதம்பரம் சாலையின் அருகாமையில் அமைந்துள்ளது. இராசேந்திரன் வடநாட்டுப் படையெடுப்பைத் தொடங்கி கங்கைச் சமவெளிவரை சென்று அங்கு சோழ ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டி வெற்றியோடு திரும்பி வந்தான். இம்மாபெரும் வெற்றியின் நினைவாக காவிரியாற்றின் வடகரையில் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதியதோர் தலைநகரம் நிர்மா ணிக்கப்பட்டது. பிற்காலச் சோழர்களின் பெருமையைப் பறை

சாற்றும் எஞ்சிய கலைச்சான்றாக சரித்திரப்பிரசித்தி பெற்ற இத் திருக்கோயில் இன்றும் மகோன்னதமான மாண்புடன் காட்சி யளிக்கிறது.

இக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி ஆறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இரண்டு நுழை வாயில்கள் இருக் கின்றன. திருச்சி - சிதம்பரம் சாலையிலிருக்கும் வடக்கு வாயி லும் மொட்டைக் கோபுரமாக காட்சி அளிக்கும் கிழக்கு வாயி லும் உள்ளே செல்லும் இரு வழியாகும்.

*பொறியியல் சாதனை*

வாயிலைத் தாண்டினால் பரந்த புல்வெளி கொண்ட 584 அடி நீளமும், 372 அடி அகலமும் கொண்ட வெளிப்பிரகாரம் தெரி கின்றது. மூலவரின் சந்நிதிக்கெதிரே நந்தி அமைந்துள்ளது. திறந்த வெளி மேடையில் 15 அடி நீளமும் 8 அடி அகலமும் 11 அடி உயரமும் உடையதாய் கருங்கற்களால் கட்டப்பட்டது. நந்தியின் நெற்றியில் சில செப்புத்தகடுகள் உள்ளன. பகல் எந்த நேரமாயிருந்தாலும் சூரிய வெளிச்சம் செப்புத்தகடுகளில் பிரதி பலித்து லிங்கத்தை வேறு வெளிச்சமில்லாமல் பார்க்கக் கூடிய தாயிருக்கிறது. மேலும் கருவறையில் கடும் வெய்யில் நேரங்க ளில் குளிர் காற்று உள்ளே வரும். கடும் குளிரில் வெப்பமான காற்று உள்ளே வரும். இதனால் கருவறையில் தரிசனத்துக்கு வருகிறவர்களுக்கும் பூசையில் ஈடுபடுவர்களுக்கும் வசதியாயிருக் கிறது. அக்காலத்து பொறியியல் வல்லுநர் இவைபோன்ற பல கருமங்களைச் செய்திருக்கிறார்கள். பெருவுடையார் என்னும் பெய ருக்கு ஏற்ப மிகவும் பெரியதாக அமைந்துள்ள சிவலிங்கம் ஒரே கல்லிலானது.

அத்தியாயம் 5

# சுற்றமும் உதவியும்

நான் இலங்கை பல்கலைக்கழக மாணவனாக விருக்கும் பொழுது ஒரு லிகிதருடன் சிநேகமாக விருந்தேன். அவருக்கு அவ்வளவு பெரிய உத்தியோகமில்லை. தம்பியாரை முன்னுக்குக்கொண்டு வரவேண்டுமென்ற ஆசை. ஆனால் அந்தக்காலத்தில் பள்ளிக்கூடத்திற்கு மாதா மாதம் சம்பளம்' கட்டவேண்டும். குடும்பத்தைப் பார்ப்பதுடன் இது கஷ்டமாயிருந்தது. தம்பியாரை எப்படியாவது எஸ். எஸ். சி. வரையும் கல்வி கற்கச்சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று நிச்சயித்தார். என்ன நடந்தது? இதற்குத் தேவையான பணத்தை கொடுப்பதற்காகத் தம்பியார் படிக்கும் வரையும் மத்தியான உணவு அருந்தவில்லை. இந்தப்பணத்தைத் தான் தன் தம்பியாருக்கு யாழ்ப்பாணம் அனுப்பினார்.

இன்னுமொரு உதாரணம்:- இரு சகோதரர்கள் மலேசியாவில் லிகிதராயிருந்தார்கள். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தங்கள் எதிர்காலத்தைப்பற்றி உரையாடுவார்கள். தாம் இருவரும் இப்படியேயிருந்து வருவதால் குடும்பத்திற்கு அவ்வளவு பலனில்லை என்று தமையன் கூறினார். ஆகையால் தான் லிகிதராய்க்கடமையாற்றி ஒருபகுதி பணத்தைச் செலவிட்டு தம்பியைப் சிங்கப்பூர் வைத்தியசாலையில் படிக்கவைத்தார். ஆறு ஆண்டுகளுக்கு பிறகு தம்பி ஒரு வைத்தியராகிக் குடும்பத்தின் நிலையை உயர்த்தினார்.

தம்பி எனது நெருங்கிய நண்பர். எனது வேண்டுகோளுக்கிணங்கி சமீபத்தில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு ஒரு பெரும் தொகையை நன் கொடையாகக் கொடுத்தார்.

இவைபோல் பல உதாரணங்களுண்டு. இதிலிருந்து நாமறிவது என்னவென்றால் மற்ற சமூகங்களிலும் பார்க்க எங்கள் சமூகம் உடன்பிறந்தாரை என்ன கஷ்டமிருந்தாலும் முன்னுக்குக் கொண்டுவர எல்லா உதவிகளும் செய்வார்கள். இது போற்றக் கூடிய பண்பாகும். எதிர்காலத்திலும் இதை நாங்கள் பேண வேண்டும். அதோடு உறவினரோடு நின்றுவிடாமல் சமூகத்திற்கும் இயன்ற உதவிகளை அளிக்கவேண்டும். குறைந்த அளவிலான விவசாய வசதியும் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய வாய்ப்புக்களும் அற்ற பகுதியில் சீவிக்கும் மக்களாகிய நாங்கள் இது போன்ற நல்ல பண்பாட்டை பயன்படுத்தி முன்னுக்குவர முயலவேண்டும்.

கஷ்டங்கள் வரும்பொழுது உறவினர்கள் உதவியாலும் மனத் தைரியத்தாலும் ஓரளவு சமாளிக்கக்கூடியதாக விருக்கும். சுற்றத்தோர் இருக்கின்றார்கள்; எனக்கு ஒரு கிராமமிருக்கின்றது என்ற எண்ணங்கள் பேருதவியாயிருக்கும். எனது யுகோசிலாவியா நண்பரொருவர் உரோமாபுரியில் பல ஆண்டுகள் கடமையாற்றி இறுதியில் தனது சொந்த நாட்டுக்குப்போய் விட்டார். அவர் எப்பொழுதும் ரோமாபுரியில் தன்னை அலுவலகத்திற்கு வெளியே ஒருவருக்கும் தெரியாது; ரோமாபுரியில் தனது அந்தஸ்து தான் ஐ. நா. வில் கடமையாற்றும் வரையில்தான் என்று சொல்லுவார். ஆனால் தன் சொந்த நாட்டில் தங்கள் குடும்பத்திற்கு நற்பெயருண்டு என்றும், தன்னையும் குடும்பத்தினரையும் உத்தியோகம் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன ஒரேவிதமாக மரியாதை கொடுப்பார்கள் என்றும் கூறுவர். இவர் குடும்பத்தினர் ஒருவரே தற்பொழுது யுகோசிலாவியாவின் உப ஜனாதிபதியாக இருக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன், எனக்கு இலங்கை பல்கலைக்கழகத்தில் ஆசிரியராயிருந்த ஒருவர் ஒரு சம்பவத்தைக் கூறினார். அது என் மனதில் பதிந்திருக்கின்றது. தனது பிள்ளைகள் தனது கிராமமாகிய புலோலிக்கு முதல்முறை போனபொழுது தனது இனத்தவர்களைப் பார்த்து அவர்கள் தங்களுக்கு ஒரு படி குறைந்தவர்கள் என்ற மாதிரிக் கூறினார்களாம். உடனே அது பிழையென்றும், எல்லோரும் உறவினர்கள் ஆகையால் உயர்வு, தாழ்வு கிடையாதென்றும் வற்புறுத்தினாராம். இதற்கு பிறகு ஒவ்வொரு

ஆண்டும் சித்திரை முழு மாசம் புலோலியில் தங்கினர். பிள்ளை கள் திருந்தி உறவினர்களுடன் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டார்கள். மேற்கு நாடுகளில், முக்கியமாக நோர்வே கவிடினில் வயது முதிந்தவர்கள் தனிமையில் வசிப்ப தால் மனநோய் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. அவர்கள் மேலைத் தேசத்து நாகரீக முறையில் இனத்தவர்களைத் தழுவி நடப்ப தில்லை. பிள்ளைகள் விவாகமானதும் தனிக்குடித்தனம் நடத்து வார்கள். ஆகையால் பிற்காலத்தில் வயதுபோன கணவனும் மனைவியும் தனிக்குடும்பம் நடத்துவார்கள். அப்பகுதியில் சரா சரி வயது எழுபதுக்கும் அதிகமாகும். காலம் போகப்போக இவர் களுக்கு உதவிகள் தேவைப்படும். ஆனல் அது கிடைக்காது. இப்படிப்பட்ட வாழ்க்கையில் கணவன் மனைவியில் ஒருவர் இறந்து விட்டால் மற்றவருக்கு எஞ்சிய காலத்தைத்தனியே எப்படிப் போக்குவதென்று தெரியாமல் தடுமாறுவார்கள். அரசாங்கம் இப் பொழுது வயது முதிர்ந்தோருக்கு இல்லங்களை ஆரம்பித்து அங்கே இவர்களை வசிக்கச் செய்கிருர்கள். இந்தமுறையும் அதிகம் திருப் தியாகவில்லை. ஆனல் எங்களுடைய நாடுகளில் இப்பொழுது இது பிரச்சினையில்லை. ஆனல் பட்டணங்களில் இடையிடையே இந்தப் பிரச்சனை தலைகாட்டுவதைப் பார்த்திருக்கிறேன். ஆகையால் எங் கள் பழைய முறைப்படி சுற்றத்தைத் தழுவி நடந்தால் வயது போனவர்களை அவர்கள் கடைசி காலங்களில் பாதுகாப்பார்கள்.

சுற்றத்தவர்களைப் பேணி நடப்பதால் மற்றவர்களுடன் அன் புடன் நடக்கக்கூடாது என்ற அர்த்தமல்ல. இனத்தவர்களிடம் சில விடயங்களைக் கூசாமல் பேசலாம் - உரிமையுடன் கேட்கலாம். ஒருவர்க்கொருவர் உதவியாயிருக்கலாம். உயர்வு தாழ்வென்றில் லாமல் வாழலாம். ஒரு நெருக்கடி வரும்பொழுது சுற்றத்தவர் கள் இருக்கிருர்களென்று மனத்திடமிருக்கும். மற்றவர்களைப் பேணிநடப்பது எங்களிடையே இருக்கும் நற்பண்பு. அதனல் இதை இழக்கக்கூடாது. சுற்றத்தவர்களுடனும் ஊரவர்களுடனும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வோமாக!

அத்தியாயம் 6

# இரு பெரியார்

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான் இங்கிலாந்தில் படிப்பதற்காகக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் புறப்பட்டேன். அந்தக்காலத்தில் விமானப்பிரயாணம் கிடையாது. மூன்று நாட்களில் பம்பாய் துறைமுகத்தை அடைந்தோம். அங்கு ஆங்கிலேயப் பிரயாணிகளும், இந்தியப் பிரயாணிகளும் எங்களுடன் கப்பலில் ஏறிக்கொண்டார்கள். பம்பாயிலிருந்து புறப்பட்டுச் சில மணி நேரத்தில் இந்தியப் பிரயாணிகளுடன் சிநேகிதமாகிவிட்டோம். இவர்களில் ஒருவர் பெரிய மனிதன்போல காணப்பட்டார். நான் அவருடன் உரையாட ஆரம்பித்தேன். அவர், தான் ஒரு ஐ. சி. எஸ். உத்தியோகத்தர் என்றும், அப்பொழுது இந்திய மத்திய மாகாணத்தில் நிதி ஆலோசகராகக் கடமையாற்றுவதாகவும் கூறினர். இவர்தான் சிந்தாமன்—தேஷ்முக் பிற்காலத்தில் நேரு அரசாங்கத்தில், சிறப்பாக நிதி மந்திரியாகக் கடமையாற்றியவர்.

இவர் பம்பாய் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் படித்து பீ. ஏ. பட்டத்தில் முதல் பிரிவில் சித்தியடைந்தவர். இதன் பின்னர் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் கற்று இதிலும் முதற்பிரிவில் சித்தியடைந்தார். பிறகு ஐ. சி. எஸ்.

சோதனையிலும் சித்தியடைந்து, பின்னர் இந்தியா திரும்பினர். இவர் மனைவி ஒரு தெலுங்கு மாது—துர்க்காபாய் தேஷ்முக்.

தேஷ்முக்கிடம் பழகத்தொடங்கியதும் பல தடவைகள் அவருடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. தான், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கணிதமேதை ராமானுஜமும் படித்தார் என்று கூறினர். ராமானுஜத்தைப்பற்றி பல விஷயங்கள் கூறினர். ராமானுஜத்திற்கு தான் தமிழன் என்று பெருமை என்றும், சோழர்காலத்தில் கங்கை வரையும் படையெடுத்து வென்றேம் என்றும் கூறுவாராம். அதற்குத் தேஷ்முக் தனது இனமாகிய மகாராஷ்டிரரைப் பற்றிப் பெருமைப்பட்டு சிவாஜி எப்படி தெற்கு வரைக்கும் எல்லோரையும் போரில் வென்றார் என்று வாதாடுவாராம். இதற்கு ராமானுஜம் வேடிக்கையாக, "மகாராஷ்டிரர் தமிழருக்கு ஒருபடி மேலென்று ஏற்றுக்கொள்கிறேன். 'வாழைப்பழம்' என்று சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றாராம். தேஷ்முக் தோல்வியடைந்தார். இதனைக்கூறிவிட்டு என்னை 'வாழைப்பழம்' என்று சொல்லும்படி கேட்டார். நான் சரியாக உச்சரித்தேன். இதற்கு தேஷ்முக் மன ஆறுதலாய் "ஏதோ இந்த மனித வாயிலிருந்து தானே இந்த சத்தம் வருகிறது" என்றார்.

கணிதமேதை ராமானுஜம் கும்பகோணத்தில் படித்தவர். ஏதோ பணக் கஷ்டத்தால் மேல்வகுப்புப் படிக்காமல் கலெக்டரின் இலாகாவில் ஒரு லிகிதராகக் கடமையாற்றினர். கலெக்டர் ஒரு ஆங்கிலேயர்; ஐ. சி. எஸ். உத்தியோகத்தர்—கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக கணிதப்பட்டதாரி. ராமானுஜம் அனுப்பும் கடதாசிகளில் அநேகமாக ஒரு கரையில் கணிதம் யாரோ செய்து பழகின மாதிரி காணப்படும். ஒரு தரம் இதை உற்று நோக்கினல், உயர்தரகணிதம். அப்பொழுது ராமனுஜத்தைக் கூப்பிட்டு "இது உம்முடைய வேலையா" என்று கேட்டார். "ஆம்" என்று அவர் கூற அவருடன் உரையாடியதும் ஆங்கிலேயர் திகைத்துப்போனர். ஏனென்றல் தன் பாட்டிலேயே ராமனுஜம் உயரிய கணிதம் கற்றுக்கொண்டிருக்கிறரென்று தெரிந்தது. ராமனுஜத்தைப் பேராசிரியர் "ஹார்டியின் நூலைப் பார்த்தீரா" என்று வினவ, அவர் "ஆம்" என்று கூறினர். ஒரு அத்தியாயத்தில் ஒரு பகுதியை முடிக்காமல், இதற்குமேல் இவ்விடயம் ஆராய்ச்சிக்கு உரியதென்று கூறியிருக்கிறர் ஹார்டி "இதை வாசித்தீரா" என்று கலெக்டர் வினவ, "ஆம், பார்த்தேன். ஆனல் இதிலொரு கஷ்டமுமில்லையே" என்றும், "நானே மிகுதியை நிரப்பினேன"

என்றார் ராமனுஜம். ஆச்சரியம் அடைந்த கலெக்டர் இவருடைய குறிப்பை ஹார்டிக்கு அனுப்பினார்.

(அக்காலத்து ஆங்கிலேயரின் பண்புக்கு பெருமை கொடுக்கும் சம்பவம் இது. ஏனென்றால் உலகத்திற்கு ராமனுஜத்தை அந்நேரத்தில் தெரியாது. ஆங்கிலேயர் அது தன்னுடைய குறிப்பென்றிருந்தால் உலகமே ஒத்துக்கொண்டிருக்கும் ஆனால் இவர் அப்படிச் செய்யவில்லை ) ஹார்டி ராமனுஜத்தின் விவேகத்தை மெச்சி அவருக்கு கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக புலமைப் பரிசிலொன்று பெற்றுக்கொடுத்தார். அவர் அங்கே சில ஆண்டுகள் படித்தார். சைவச்சாப்பாட்டிற்கு அக்காலத்தில் வசதிகுறைவாயிருந்ததால் நோய்வாய்ப்பட்டு தன்படிப்பைப் பூரணமாக முடிக்கும் முன்னர் தாயகம் திரும்பினார். ஒரு ஆசிரியருக்குப் பல மாணவர்கள் இருப்பார்கள். ஆனால் ராமனுஜத்திற்கு இரண்டு பேராசிரியர்கள் கல்வி புகட்டினார்கள். அப்படியிருந்தும் "போதாது, போதாது" என்று கூறுவாராம் ராமனுஜம். கேம்பிறிட்ஜ் கல்லூரியில் ஆகக் குறைந்தது மூன்றாவதாண்டின் தொடக்கத்தில் தான் Fellow (வெலோ) என்ற நியமனம் கொடுப்பார்கள். ராமானுஜத்திற்கோ இரண்டாம் ஆண்டிலேயே றினிரி கல்லூரி இப்பட்டத்தை அளித்தது. ஒருமுறை சுகவீனமாக ஆஸ்பத்திரியில் ராமானுஜம் தங்கியிருக்கும் பொழுது பேராசிரியர்கள் ஹார்டி, லிற்றில்வூட் அவரைப் பார்க்கச் சென்றார்களாம். மேல் வீட்டிலிருந்து ராமானுஜம் இவர்கள் வந்த மோட்டார் வண்டியின் இலக்கத்தை கவனித்துவிட்டு அவர்கள் வந்ததும் இவ்வெண்ணைப் பற்றி ஒரு விரிவுரையே கொடுத்தாராம்.

ஒரு பொழுது ஹார்டி ராமானுஜத்தைப் பற்றிக் கேம்பிறிட்ஜில் பேசும் பொழுது நான் கேட்டிருக்கிறேன். அவர் குறிப்பிட்டதாவது: "ராமானுஜம் தானே கணிதத்தைப் படித்ததால் சில தவறான கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டார். ஆகையால் தான் படிப்பிக்கும் பொழுது ஒருபகுதி நேரம் தவறான கருத்துக்களை திருத்துவதிலும், புதிதான சரியான கருத்துக்களில் மிகுதி நேரத்தையும் செலவழித்தார்." இதை நாமெல்லோரும் கவனிக்க வேண்டும். இதற்கு உதாரணமாக ஒருவர் எம். ஏ. பட்டம் வரைக்கும் தானே படித்து பட்டம் பெற்ற பிறகு அக்காலத்து இலங்கை பல்கலைக்கழக கல்லூரி அதிபரிடம் "தனக்கு வாரத்திற்கு இரண்டு விரிவுரை கொடுக்க முடியுமோ" என்று கேட்டார். "தன்னுடைய கெட்டித்தனம் ஆசான் இல்லாமல் எல்லாம் கற்றதுதான்" என்றார். அதற்கு அதிபர் "இந்த காரணத்திருத்தான் விரிவுரை கொடுக்க அஞ்சுகிறேன்" என்றார்.

தேஷ்முக்கும், ராமனுஜமும் கேம்பிறிட்ஜ், பல்கலைக்கழகத்தில் முதலாம் மகா யுத்த காலத்தில் கல்வி கற்ருர்கள். ஒரு பொழுது ஜெர்மன் செப்பலின் மூலம் இவர்களிலிருந்த பட்டணத்தைத் தாக்கினுர்கள். இருவரும் ஓடி மறைந்து கொண்டார்கள். வெளியே வந்ததும் ராமானுஜம் இது தனக்குத் தகுந்த தண்டனையென்ருர். "ஏனென்று" வினவியதும் அன்று உணவருந்திய பிறகு அறிந்தாராம் உணவில் முட்டை கலந்திருந்ததென்று. தான் சைவ சாப்பாட்டுக்காரன். ஆனபடியால் முட்டை சாப்பிட்டதால் தன்னைத் தண்டிப்பதற்குத் தான் ஜெர்மன் செப்பலின் அனுப்பப்பட்டதாக எண்ணிஞராம்.

இப்பெரியார்களின் வாழ்வில் நாம் அறியக்கூடியது யாது? தேஷ்முக், பலதுறையில் ஒருவர் வல்லுனராக இருக்கலாமென்பதற்கு எடுத்துக்காட்டு. சமஸ்கிருதம், தாவரவியல், நிதி போன்ற துறைகளில் உன்னத நிலையை அவர் அடைந்தவர். மேல் நாட்டு நாகரிகத்தின் நல்ல அம்சங்களை பாரதப் பண்போடு சேர்த்து ஒரு நல்வாழ்வு வாழ்ந்தார். மற்றைய இனத்தின் நற்குணங்களை மெச்சினுர். ராமானுஜம் பிரயாசையாலும், ஊக்கத்தாலும் ஒரு துறையில் சரியான சூழ்நிலை இல்லாமலும் முன்னேறலாமென்று எங்களுக்கு எடுத்துக்காட்டுகிருர். இவ்வுலகத்தில் கணிதம் இருக்கும் வரையும் அவர் பெயர் மறையாது இப்பெரியார்களின் வாழ்வு எங்களுக்கு இரு கலங்கரை விளக்குகளாகப் பிரகாசிக்கட்டும்.

அத்தியாயம் 7

# நேர்மை இன்னமும் செத்து விடவில்லை

பாலைவனமாகிய சூடானில் கடமையாற்றும்பொழுது எங்களைப்போல் அவ்விடத்தில் கடமையாற்றிய தமிழ்நாட்டுப் பேராசிரியரின் மனைவி ஒரு சம்பவத்தை கூறினார். அது என் மனதில் பதிந்திருக்கிறது.

ஒரு தனவந்தரின் மகன், பத்து வயதுக்குள்ளே தானிருக்கும், பம்பாயில் பாடசாலைக்கு பஸ்வண்டி மூலம் போவது வழக்கம். ஒரு பின்னேரம் வீடு திரும்புவதற்குப் பஸ் வண்டியில் ஏறினான் பிழையான வண்டி என்று அப்பொழுது அப்பையனுக்குத் தெரியவில்லை. நன்றாக இருண்டபிறகு வண்டி பம்பாய் பட்டினத்திற்கு அப்பால் ஒரு கிராமத்தில் நிற்பாட்டப்பட்டு எல்லோரையும் இறங்கச் சொன்னார்கள். பையன் இறங்கியதும் அழுதான். அந்த நேரத்தில் ஒரு பால் வியாபாரி அவ்விடம் வந்தான். பையன் தனக்கு நேர்ந்ததைச் சொல்ல அம்மனிதன் அன்றிரவு தன்வீட்டில் தங்கித் தானே அவனை மறுநாள் வீட்டிற்குக்கொண்டு போய் விடுவதாகக் கூறினான். அப்படியே தங்கி மறுநாள் காலையில் பஸ் நிற்கும் இடத்திற்கு போகும்வழியில் பால்வியாபாரியின் சிநேகிதன் மஹாராஷ்டிர மொழிபபத்திரிகை ஒன்றைக்

காட்டினான். இதில் இப்பையனின் படம் போடப்பட்டிருந்தது. பையனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு ஆயிரம் ரூபா இனாமாம்.

வீட்டில் பையனை பாரம் கொடுத்து ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டு வீடு திரும்பி மனைவியிடம் பணத்தை நீட்டினான். என்ன சங்கதி என்று அந்த அம்மாள் கேட்டாள் நடந்ததைக் கூறினான் "ஐயோ, கடவுளே அனாதை போல் அப்பிள்ளை இருந்ததும் நாங்கள் அபயம் கொடுத்ததிற்கும் பணமா? முடியாது. இது இந்து தர்மமில்லை. இப்பணத்தை திருப்பிக் கொடுக்காவிட்டால் உலையை வைக்கமாட்டேன். வேணுமென்றால் இருதடவை பம்பாய்க்கு பஸ் வண்டியால் சென்றதிற்காகிய பணத்தை வாங்குங்கள், இப்பவே பணத்தைத் திருப்பிக்கொடுங்கள்" என்றாள் அந்த தர்மபத்தினி.

அப்படியே அம்மனிதனும் செய்தான். இந்த சம்பவம் இராமாயணத்தில் நடக்கவில்லை, மஹா பாரதத்தில் எழுதப்படவில்லை இந்த இருபதாம் நூற்றாண்டில் சில ஆண்டுகளுக்கு முன் காந்தி அடிகள் வாழ்ந்த பூமியில் நடந்தது. நேர்மையும், தர்மமும் இன்னும் நடமாடுவதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

### 'வெட்கம்' தந்த சம்பவம்

இன்னுமொரு சம்பவம் கூறவிரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன் சென்னைப் பட்டணம் போயிருந்தேன். அப்பொழுது எனது மூத்த மகளுக்கு வீணை வாங்க வேண்டியிருந்தது. ஒரு சிநேகிதனுடன் ஒரு டாக்சியில் வீணைவிற்கும் தாபனத்திற்குச் சென்று வாங்கினோம். வருகிற வழியில் வேறு சில பொருட்கள் வாங்கவேண்டியிருந்ததால் கையோடு வாங்கிப் போகலாமென்றோம். தேவையான கடையை அடைந்ததும் டாக்சியை நிறுத்தச் சொன்னோம் நாங்கள் இறங்கியதும் மோட்டார் வண்டி அவ்விடத்தில் நிறுத்த முடியாததால் தள்ளிப்போய் நிறுத்துகிறேன் என்று கூறிவிட்டு டாக்சி போய்விட்டது. அந்நேரத்தில் வெறொன்றும் யோசிக்காமல் பொருள் வாங்கிக் கொண்டிருந்தோம் அப்பொழுது தான் யோசித்தோம் முன்பின்தெரியாத டாக்சிக்காரன் வீணையுடன் ஓடிவிட்டால் என்ன செய்யலாமென்று. எவ்வளவு கெதியில் பொருள்களை வாங்க முடியுமோ வாங்கிக் கொண்டு சிறுதூரம் நடக்க டாக்சிக் காரனை சந்தித்தோம். அவன் உடனே "நான் இங்கே தான் நிற்கிறேன். பயப்படாமல் வாங்கோ. உங்களுடைய வீணைக்குப் பயந்தீர்களா?

அப்படிப்பட்ட பயம் இப்பகுதியில் இல்லை'' என்று கூறினான். நாங்கள் ஒரு விதத்தில் வெட்கப்பட்டோம். மறு விதத்தில் செலவினயின் நேர்மையை மெச்சினோம்.

## நேர்மையால் வரும் ஊதியம்

இது போன்ற நல்லெண்ணங்கள் நேர்மைக் குணங்கள் உடனே வருவதில்லை. பெற்றோர். ஆசிரியர் அக்கம் பக்கத்தில் இருப்போரிடமிருந்து இளமையில் வித்திட்டு வந்தால் தான் முறையே வளரும். வியர்வை சிந்தி தேடும் பொருள் தான் எங்களுடையது. மற்றப் பொருளுக்கு நாம் உரிய வரல்ல என்று காந்தியடிகள் அடிக்கடி கூறுவார். இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போனமாதிரி நேர்மையால் பெறும் ஊதியத்துடன் நேர்மையில்லாமல் பெறும் ஊதியத்தைச் சேர்த்தவுடன் இரண்டுமில்லாமல் போய்விடும். இந்தக் கசப்பான உண்மையை பலர் உணர்வதில்லை. நாட்டில் பெரியவர் என்று கூறிக்கொள்பவர்கள் பொதுமக்களுக்கு தங்கள் வாழ்க்கையால் உதாரணம் காட்ட வேண்டும். எங்களில் எத்தனை பேருக்கு, மறைந்த இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்த்திரிக்கு ஒரு வங்கிக்கணக்கு இருக்கவில்லையென்று தெரியும் மாதா மாதம் செலவுக்கு தேவையான பணத்தை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளுவார். இந்தத்தொகை அவருடைய மாதாந்த சம்பளத்திற்கு மிகவும் குறைவு அவர் இறந்ததும் அதிகம் பாதிக்கப்பட்டவர் அவர் தாயார், பாரத அரசு அந்தத்தாய்க்கு உதவிப்பணம் வழங்குகிறது.

## பாலித்தீவு அனுபவம்

இந்த இடத்தில் நானும் எனது மனைவியும் பலமுறை பாலித்தீவிற்கு போன அனுபவங்களில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தத்தீவு ஜாவாத்தீவுக்கு கிழக்கேயுள்ளது. சனத்தொகை இருபது லட்சம், தொண்ணூற்றைந்து வீத மக்கள் இந்துக்கள். தலைநகரம் டென்பசாரிலிருந்து பத்துமைல் தொலைவில், பாலித்தீவின் சிறந்த கலைப்படைப்புக்கள் (முக்கியமாக சிலைகள்) விற்பனைக் குண்டு. நாங்கள் போன அன்று விடுமுறைநாள். கடையில் ஒருவருமில்லை. ஆனால் திறந்திருந்தது. அந்த நேரத்தில் ஒருமாது அவ்வழியாக வந்தார். நாங்கள் இந்தோனேஷியா மொழி பேசுவதால் அம்மாதோடு உரையாடினோம்.

''ஏன் கடைதிறந்த படியிருக்கிறது? இவ்வளவு பொருட்களையும் யாரும் திருடமாட்டார்களாவென்று வினவினோம்.'' அதற்கு

அப்பெண்மணி சிரித்துவிட்டு ''இது எங்கள் கடை. அதாவது இக்கிராம மக்களுக்குப் பொதுவான கடை. ஆகையால் நாங்கள் ஏன் திருடப்போகிறோம்? தனியார் கடையாய் இருந்தாலும் திருடுவதில்லை. அந்தப்பழக்கமே இத்தீவில் கிடையாது.'' அத்தீவு மக்கள் எல்லோரும் தனவந்தரில்லை. பொருள் குறைந்தவர்களுமுண்டு. ஆனல் களவு கிடையாது. இவர்கள் இந்தியாவிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்ததாகக் கூறுகிறார்கள். அடுத்தடுத்த தீவுகளில் களவு உண்டு. ஆனல் இத்தீவில் மாத்திரம் கிடையாது. பாலியில் ஓரளவு உணவுண்டு. மற்றும் வசதிகள் கணிசமாகவுண்டு இவர்களுக்கு வாழ்க்கையில் திருப்தி. பகலில் ஏதோ விவசாயத்தில் ஈடுபடுவார்கள். பின்னேரங்களிலும் இரவிலும் ஆண், பெண், பிள்ளைகள் எல்லோரும் நடனமாடுவார்கள். இவர்களின் இராமாயண நடனம் உலகப்பிரசித்தி பெற்றது பகலில் வேலையும் இரவில் நடனமும் மனத்தில் திருப்தியும் இருப்பதால் களவுக்கு இங்கு இடமில்லை. எல்லாருமே நேர்மையானவர்கள். இவை எல்லாவற்றையும் பார்த்த நேருஜீ இத்தீவைப்பற்றி ''இது உலகின் காலை, இது தான் உலகின் கடைசிச் சுவர்க்கம்'' என்று கூறினர்.

நாமேன் யாழ்ப்பாணத்தை ஒரு பாலியாக மாற்ற முடியாது? பேராசைகள் வேண்டாம். திருப்தி வேண்டும். வியர்வை சிந்தாமல் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதை மனதிலிருந்து அகற்ற வேண்டும் காந்தி அடிகளின் அறிவுரைகளை மதித்து வாழவேண்டும். மற்றவர்கள் எங்களைப் பார்த்து மதிக்கவேண்டும் நாங்கள் எங்களைப் பற்றி யோசித்து மதிக்கக்கூடியவர்களாக வாழ்கிறோமா வென்று உணரவேண்டும். பலருக்கு பிரசங்கம் செய்யத் தேவையில்லை. ஒவ்வொருவரும் நேர்மையுடன் வாழ்ந்தால் போதும்.

அத்தியாயம் ௨

# சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்புண்டா இல்லையா?

நான் யாழ்ப்பாணத்தில் சிறு பிள்ளையாயிருக்கும் பொழுது ஒரு கதை கேட்ட ஞாபகம். ஒருவர் மேடையிலிருந்து பேசினார். எங்களிடம் ஏதாவது பொருள் மிதமிஞ்சியிருந்தால் அதே நேரத்தில் எங்கள் அயலில் யாருக்கும் இப்பொருள் தேவையாயிருந்தால் பங்கிட்டுக் கொள்ளுங்கள், என்று பேச்சாளர் முழங்கினார். ஒரே கரகோஷம். திருப்தியாக வீடு திரும்பினார். வந்ததும் வீட்டிலே யிருந்த நாற்காலிகள் சிலவற்றைக் காணவில்லை. மனைவியை வினவினார். அதற்கு மனைவி ''நானும் கூட்டத்திற்கு வந்தேன். நீங்கள் கூறியபடி மிதமிஞ்சிய சில நாற்காலிகளை அடுத்த வீட்டுக் காரருக்குக் கொடுத்துவிட்டேன்,'' என்றார். இதற்குப் பேச்சாளர் கோபத்துடன் நான் கூறியது மற்றவர்களுக்கே. உனக்கு நான் சொல்லவில்லையேயென்றாராம். மனிதரின் பலபிரச்சனைகளில் இதுவும் ஒன்று. அதாவது சொல்லுவதில் எவ்வளவு பங்கைச் செயலில் சொல்பவர் காட்டுகிறார் என்பதே முக்கியம். இதற்கும் ஒரு கல்குலஸ் (Calculus) தேவைபோலிருக்கிறது.

இன்னுமொரு உதாரணம் கூறவிரும்புகிறேன்; பல ஆண்டுகளுக்கு முன் ஒரு மாகாண அரசாங்க அதிபராகக்கடமையாற்றி

னேன் அப்பொழுது ஒரு கிராமத்தில், தங்களுக்கு மது அருந்தத் தவறனை வேண்டுமென்று ஒரு சாராரும், வேண்டாமென்று இன்னுமொரு சாராரும், கேட்டார்கள். இதற்குச் சட்டரீதியாக கிராமத்தில் வாக்கெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட தினமன்று கச்சேரியில் லிகிதராகக்கடமையாற்றிய அந்தக்கிராம வாசி ஒருவரை எனக்கு உதவிக்குக் கூட்டிக் கொண்டு கிராமத்திற்குச் சென்றேன். தவறணை தேவையானவர்களே வாக்களிக்க வேண்டும். காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நானும் எனது உதவியாளரும் குறிக்கப்பட்ட நிலையத்தில் காத்திருந்தோம். ஒருவர் கூட வாக்களிக்க வரவில்லை. முடிவை நான் மக்களுக்கு சட்டமுறைப்படி பகிரங்கமாக கூறினேன். இதையடுத்து பலபேர் பேசினார்கள். இக்கிராம மக்களுக்கு பல காலமாக மதுபானத்தில் வெறுப்பு. இதையே இவ் வாக்கெடுப்பு எடுத்துரைத்ததென்றார்கள். மறு நாள் என்னுடன் கடமையாற்றிய லிகிதர் கச்சேரிக்கு நேரத்துக்கு வரவில்லை. தாமதமாக வந்ததும் என்ன காரணமென்று கேட்டேன். அதற்கு அவர் தவறணை வேண்டாமென்ற தீர்மானத்தின் வெற்றிக்காக நடந்தது என்றார். கிராமத்தில் முதல் நாள் இரவு பெரிய கொண்டாட்டம் லிகிதரின் முகத்தில் ஒரு சோர்வு தெரிந்தது. இதன் காரணமென்ன வென்று கேட்டதும், கொண்டாட்டத்தில்; தான் அதிகம் மதுபானம் அருந்தினேன் என்று கூறினார். வெளியுலகிற்கு மதுவிலக்கான கிராமமென்று பெயர் வாங்க வேண்டும். ஆனால் இரகசியமாக எவ்வளவும் குடிக்கலாம் இங்கே சொல்லுக்கும் செயலுக்கும் என்ன தொடர்பு? நேர்மாறான தொடர்புதான்: ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதற்குச் சொல்லை ஒரு கருவியாகப் பாவிக்கிறார்கள்.

வாழ்க்கையில் பல சொற்களைக் கேட்கிறோம். அந்தச் சொற்களுக்குச் சம்பந்தமில்லாத செயல்களைப் பார்க்கிறோம். கவலைக்குரிய நிலை இருந்தும் சோர்வடையத்தேவையில்லை. ஆங்காங்கே சொல்வதையே செய்பவர்களுமுண்டு. இதைப்பார்த்ததும் மனித குலத்தில் இன்னும் நம்பிக்கைவரும். நம்பிக்கை கொடுக்கும் சில சம்பவங்களைப் பார்ப்போம்..

இந்து சமயத்தில் எல்லாச் சமயத்தாலும் ஒரு ஒரே கடவுளை அடையலாம் என்ற நம்பிக்கை உண்டு. பல நதிகள் எவ்விதமாக ஒரே கடலை அடைவது போல் எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளை அடையும் என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் பலமுறை கூறியிருக்கிறார். ஐந்து ஆண்டுகளுக்கு முன் நாங்கள் லண்டனில்

இருந்தோம். அப்பொழுது பம்பாய்பவன் ஸ்தாபனத்தார் ஒரு கிளையை லண்டனில் ஸ்தாபித்தார்கள் (இந்தஸ்தாபனம் பம்பாயி லும் மற்ற இந்திய நகரங்களிலும் இந்து சமயத்திற்கு சேவையாற்றுகிறது.) இந்தக்கிளை ஸ்தாபனத்தை அந்தக்காலத்து பிரிட்டிஷ் பிரதமர் கலஹன் திறந்து வைத்தார். திறக்கு முன்னர் ஸ்தாபனத்தை பவன் சார்பில் மவுண்ட் பாற்றன் பிரபு கலஹனை சுற்றிக் காண்பித்தார். கட்டிடத்தில் ஒரு சுவரில் சிலுவையிருப்பதை கவனித்து கலஹன் "இது இங்கே எப்படி வந்தது?" என்று கேட்டார். மவுண்ட் பாற்றன் விளக்கமளித்தார். "இந்த இடத்தில் ஒரு கிருஸ்தவ கோவிலிருந்தது. பவன் தாபனம் இந்நிலத்தை வாங்கி கட்டிடத்தை இடித்து இந்து ஸ்தாபனத்திற்கு இணங்க கட்டிடம் வகுத்தார்கள். சிலுவையிருக்குமிடம் வரையும் இடித்து விட்டார்கள். சிலுவையைப் பார்த்ததும் "எம்மதமும் சம்மதமே" என்று நாம் எல்லாவிடமும் பேசுகிறோம். ஆகையால் எப்படி சிலுவையை உடைப்பது என்று ஆலோசித்து சிலுவையை அப்படியே விட்டு விட்டு மிகுதியை இடித்துக் கட்டிடத்தை பூர்த்தி செய்தார்கள். இதை மவுண்ட் பாற்றன் கூறிவிட்டு இந்திய நாகரீகமும் இந்து சமயத்தவருமே இது போன்ற செயலை உலகில் செய்யக் கூடியவர்கள் என்று கூறிப் பெருமைப்பட்டார். என்னே இந்தச் செயல்! சொல்லும் செயலும் ஒன்று என்பதற்கு எவ்வளவு பொருத்தமான உதாரணம்.

இன்னுமொரு சம்பவத்தைக் கூறவிரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் தங்கியிருந்த பொழுது விமான நிலையத்திற்குப் பொழுதைப் போக்கச் சென்றேன். அப்பொழுது விமானநிலையத்தில் ஒரே பரபரப்பு ஏனென்று விசாரித்த பொழுது சிங்கப்பூர் பிரதமர் லீ வந்திருக்கிறார் என்றார்கள். ஆனால் ஏன் இந்தப்பரப்பு என்று விசாரித்த பொழுது பிரதமரைக் கண்டதும் நிலைய அதிகாரிகள் வி. ஐ. பி. (V.I.P) அதாவது பிரமுகர்கள் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவர் அங்குபோக மறுத்து விட்டார். தான் தனது மகனை லண்டனில் படிப்பதற்கு வழியனுப்ப வந்ததாகவும், தான் பிரதமராக அங்கு வரவில்லையென்றும் கூறினார். பொதுமக்கள் எங்கே நின்று வழியனுப்புவார்களோ அதேயிடத்திலிருந்து வழியனுப்பச் சென்று விட்டாரென்றும் கூறினார்கள். என்று பிரதமர் லீ அடிக்கடி சொல்லுவார். "கடமையில்லாத நேரங்களில் தான் ஒரு சாதாரண சிங்கப்பூர் பிரஜை." அவர் சொல்லும் செயலும் ஒன்றே.

இவற்றைப் பார்க்குமிடத்து சாதனையிலும் போதனையிலும் ஒற்றுமை கண்ட பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். நாமே ஒற்றுமையையும் வேற்றுமையையும் தோற்றுவிக்கிறோம். இளமையில் வீட்டிலும் பாடசாலையிலும் சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமையை வற்புறுத்தினால் நல்ல சமுதாயத்தை உருவாக்கலாம். அப்பொழுது நாம் கேட்பதும் வாசிப்பதும் உண்மையென்றறிவோம். இல்லையேல் எதை நம்புவது எதை நம்பக்கூடாது என்றறிவதில் எங்கள் நேரம் போய்விடும். சொல்லுக்கும் செயலுக்கும் தற்பொழுது உள்ள இடைவெளியை எவ்வளவு குறைப்போமோ அப்பொழுது தான் நாங்கள் பண்புள்ள மக்களாக வாழ்வோம்.

அத்தியாயம் 9

# ஏட்டுச் சுரக்காய் எதற்கும் உதவாது

அந்தக் காலத்திலே கண்டியில் கதலி வாழைப்பழம் ஒரு சதம். ஆகக்கூடினால் இரண்டு சதம். கல்வி அதிகாரி ஒருவர் கண்டியில் ஒரு கல்லூரிக்கு விஜயம் செய்தார். கணிதம் நடக்கும் வகுப்புக்குள் நுழைந்தார். 'நான் ஒரு கேள்வி கேட்கிறேன்; கெதியில் பதில் சொல்லுங்கள்' என்றார். நான் சந்தைக்குப் போய் 100 பழமுள்ள வாழைக்குலையை ஆறு ரூபாய்க்கு வாங்கினால் ஒரு பழத்தின் விலை என்ன' என்று கேட்டார். 'பக்' என்று எல்லாப் பிள்ளைகளும் சிரித்தார்கள். அதிகாரிக்குக் கோபம் வந்துவிட்டது. ஏனென்று வினவினார். துணிந்த பையனொருவன் "அப்படிப்பட்ட வாழைக்குலை கண்டிச் சந்தையில் இல்லை ஐயா" என்றான். அதிகாரி தலைகுனிந்தார். கணக்கில் பிழையொன்றுமில்லை. ஆனால் அன்றாட வாழ்க்கையில் அது நடக்கிற சம்பவமல்ல. இதுபோன்ற கேள்விகளைக் கேட்டால் பிள்ளைகள் ஏட்டுச் சுரக்காய் முறையில் கல்வி பயின்று தங்களுக்கும் சமுதாயத்திற்கும் அவ்வளவு பயன் அளிக்கக் கூடியவர்களாய் வளரமாட்டார்கள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் இதுபற்றி ஒரு சிறந்த உதாரணம் கூறினார். ஒரு பண்டிதரும் சிலரும் கங்கை நதியை ஒரு வள்ளத்தில் கடக்கவிருந்தார்கள். போகும் வழியில் பண்டிதர்

தனக்கு வேதங்கள்தெரியும்; உபநிஷதம், மனுசாத்திரமெல்லாம் தெரியுமென்று பெருமை பேசினர். நடு ஆற்றில் புயல்வந்து வள்ளம் புரண்டது. அப்பொழுது வள்ளத்தில் இருந்த மக்கள் "எங்களுக்கு வேதம் உபநிஷதம் தெரியாது; ஆனல் நீந்தத்தெரியும்" என்று கூறினர்கள். நீந்தித் தப்பிவிட்டார்கள். ஆனல் ஆற்றைக் கடக்கும் பொழுது முக்கியமாகத் தேவையான நீச்சல் பண்டிதருக்குத் தெரியாது. அவர் தண்ணீரில் மூழ்கினர். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றல், வாழ்வில் எவ்விஷயத்திலும் கொண்டு செலுத்தக் கூடிய நடைமுறையை (practical approach) பரீட்சித்து, அதன் படி நடந்தால் பண்டிதருக்கு நடந்த கதி எங்களுக்கு நடக்காது பண்டிதர் வேதம், உபநிஷதம் படித்ததோடு நின்று விடாமல் நீச்சலும் பழகியிருக்க வேண்டும்.

இதைக் கையாள்வதற்குக் கூர்மையான அவதானம் (keen observation) வேண்டும். எனது தாயார் அடிக்கடி முறையாக நான் இளமையில் கல்வி கற்கவில்லை; ஆனல் அட்டைக்கு எத்தனை காலிருக்கிறதென்று சொல்லுவேன் என்று கூறுவார். இதனல் நான் இளமை தொட்டு என்ன விஷயத்தையும் கூர்மையாக அவதானித்து அதனல் வரக்கூடியநல்லபயனை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திவிடுவேன். இம்முறை எனக்குப் பயன் கொடுத்தது; கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதை எனக்கு வயது குறைந்தவர்களுக்கு ஒரு புத்திமதியாய்க் கூறி வருகிறேன்.

நாம் பொது மக்களை அதிகம் அவதானித்துப் பயன் அடையலாம். ஒரு சாதாரண வன்னி விவசாயியிடமிருந்து ஒரு மெச்சத்தக்க கொள்கையை அவதானித்தேன். ஒரு முறை நான் வவுனியா அரசாங்க அதிபராயிருந்த பொழுது அக்காலத்துப் பாராளுமன்ற அங்கத்தவராகிய பெரியார் சுந்தரலிங்கத்துடனும் சில விவசாயிகளுடனும் உரையாடிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் திரு. சுந்தரலிங்கம் தான் எப்படிப் புதிய கல்வி மசோதாவின் குறைகளைப்பற்றிப் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டி ஒரு பெரு வெற்றி பெற்றரெனக் கூறினர். கேட்டுக்கொண்டிருந்த ஒரு விவசாயி "ஐயா, நீங்கள் இப்படி மசோதாவைப் பற்றி முழங்கினதால் வன்னி மக்களாகிய எங்களுக்கு என்ன பயன்?" என்றர். அப்பொழுது நானும் விவசாயியுடன் சேர்ந்து, "இம்மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய சொற் பொழிவுகளை நிகழ்த்துங்களேன். எவ்வளவுக்கு பொதுமக்களுடன் சேர்ந்து வாழ்கிறேமோ அவ்வளவுக்குப் பயன்தரக்கூடிய எண்ணங்கள் எங்கள் மனதில் உதித்துப் பயன்தரக் கூடிய செயல்கள் செய்வோம்" என்றேன்.

நாங்கள் எந்தக் கருமத்தையும் செய்யும் பொழுது ஒரு நோக்கம் (objective) வைத்திருக்க வேண்டும். அதற்கேற்றதாக கருமங்கள் செய்யவேண்டும். பல ஆண்டுகளுக்குமுன் ஜப்பானுக்கு நான் போயிருந்த பொழுது ஒரு தொழிலதிபரைச் சந்தித்துப் பயனுள்ள சம்பாஷணை நடத்தினேன். அவர் கூறினார் "ஒரு தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், அதன் முக்கிய அம்சம் யந்திரங்களே (machinery) என்ன பொருளை உற்பத்தி செய்யப் போகிறோமோ அதற்குகந்த யந்திரமே முதற்தேவை (first priority). யந்திரத்திற்கே நூற்றுக்கு அறுபது எழுபது வீதம் ஆரம்பத்தில் செலவழிக்க வேண்டும் யந்திரங்கள் வெய்யில் மழை படாமல் இருப்பதற்கு ஏதோ சில கட்டிடங்கள் தேவை. ஆனால் கட்டிடங்களில் அதிக பணம் செலவு செய்யக்கூடாது. சில நாடுகள் அனாவசியமாக யந்திரத்தில் அதிக முதலீடு செய்யாமல், கட்டிடங்களில் முதலீடு செய்து, இலாபகரமாகத் தொழிற்சாலையை நடாத்தக் கஷ்டப்படுகிறார்கள்" என்று குறிப்பிட்டார். இது போன்ற அறிவுரைகளை நாம் வாழ்க்கையில் பல விதங்களில் உபயோகித்துப் பயன் அடையலாம். இந்த அறிவு தனியே நூல்களிலிருந்து பெறமுடியாது. அனுபவத்தால் தான் பெறலாம். இதற்கு அவதானமும் மற்றவர்களிடமிருந்து அறிவைப் பெற வேண்டும் என்ற மனப் பான்மையும் வேண்டும். இப்படிப்பட்ட மனப்பான்மை ஏற்படுவதற்கு 'நான் ஒரு மாணவன; எப்பொழுதும் படிக்கத்தயார்; தெரியாததைக் கேட்க வெட்கப்படமாட்டேன்; உலகத்தில் எனக்குத் தெரியாத விஷயங்கள் பல இருக்கின்றன' என்று நாம் உணர வேண்டும். இந்த மனப்பான்மை எங்கள் மத்தியில் இருக்கின்றது. எதிர் காலத்திலும் இதைப் பேணிக்காக்க வேண்டும். இந்தப் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவரிலும் தங்கியிருக்கிறது.

"உலகிலே சிறந்த நூல் நிலையங்களிலுள்ள நூல்கள் எல்லாவற்றையும் வாசித்தபிறகும் ஒருவர் அறிவிலியாக இருக்கலாம்" என ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் கூறினார். இதில் எவ்வளவோ உண்மையுண்டு. தனி வாசிப்பிலும் பார்க்க, வாசிப்பதில் எவ்வளவை நாம் உட்கொள்கிறோமென்பது தான் முக்கியம். உட்கொள்வதில் எவ்வளவைப் பயனளிக்கக் கூடிய முறையில் கையாளுகிறோமோ அது இதைவிட முக்கியம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை மனதில் வைத்துக் கொண்டு, 'எங்களுக்குக் கலகலப்பு வேண்டாம் பல காரம் தான் வேண்டும். விளம்பரம் தேவையில்லை; பயனுள்ள செயல்கள் தான் தேவை' என்று மன உறுதியுடன் எதிர்காலத்தை நோக்குவோமாக. அப்பொழுது தான் சமுதாயத்திற்கு ஆக்க பூர்வமான கருமங்களைச் செய்ய எம்மால் முடியும். இவ்வாறு ஆக்கபூர்வமான கருமங்களைச் செய்து நாம் முன்னேறிச் செல்வோம்.

அத்தியாயம் 10

# எங்களில் இப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள்?

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகக் கடமையாற்றியவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராவ்பஹதூர் சின்னத்தம்பிப்பிள்ளை ஆவார். அந்தக் காலத்தில் தான் சென்னை பச்சையப்பன் கல்லூரி ஸ்தாபிதமானது. ஸ்தாபகர் பச்சையப்பா அவர்கள் ஒரு ஆங்கிலேயரை முதலாம் கல்லூரித் தலைவராக நியமித்தார். இந்தக் கல்லூரிக்குக் கணிதப் பேராசிரியர் தேவைப்பட்டது.

இருபது பேருக்கு மேற்பட்டோர் இப்பதவிக்கு மனுச் செய்தார்கள். அநேகமானோர் எம். ஏ. பட்டதாரிகள். சின்னத்தம்பிப்பிள்ளையும் மனுச் செய்தார். ஆனால் இவர் பி. ஏ. பட்டதாரி. தெரிவு செய்யும் குழுவிற்குத் தலைமை தாங்கிய அதிபர், எம். ஏ. ஒருவரைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்றார். மற்றைய அங்கத்தவர்கள் சின்னத்தம்பிப்பிள்ளை பி. ஏ. பட்டதாரியாக இருந்த பொழுதிலும் பல வருட அனுபவமுள்ளவரென்றும், மற்றவர்கள் எம். ஏ. ஆக்இருந்தாலும் அநேகமானோர் இவருடைய மாணவர்களென்றும் குறிப்பிட்டார்கள். இவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி அதிபர், சின்னத்தம்பிப் பிள்ளையை நியமித்தார். குறிக்கப்பட்ட திகதிக்குக் கடமை பார்க்க பிள்ளையவர்கள் வந்தார். அதிபர், அவருடைய கடமைகளை விவரித்துவிட்டு, "அட்டவணையின்படி இன்று உமக்கு நாலாம் வருட மாண

வர்களின் விரிவுரை; ஆயத்தமில்லாவிட்டால் நாளைக்கு வரலாம்'' என்று ஒருவித கேலியாகக் கூறினர். உடனே சின்னத்தம்பிப்பிள்ளை ''நான் இப்பொழுதே விரிவுரைக்குத் தயார்'' என்றார். இவருக்கு வகுப்பைக் காட்டிவிட்டு, வகுப்பிற்கு வெளியே, சின்னத்தம்பிப் பிள்ளைக்குத் தெரியாத இடத்திலிருந்து அவரது விரிவுரையை அதிபர் கேட்டுக் கொண்டிருந்தார். அதிபர் முன்னைய கணிதப் பேராசிரியர் ஆகையால் நடந்துகொண்டிருக்கும் விரிவுரைபற்றி எடைபோடக்கூடியதாக இருந்தது. ஒருமணி நேரம் முடிந்து பிள்ளை அவர்கள் வகுப்பிற்கு வெளியே வந்ததும் அதிபர் ஓடிச் சென்று அவரது கையைக் குலுக்கி அற்புதமான விரிவுரையென்று பாராட்டினர். தாம் அவர் நியமனத்திற்கு, எதிர்ப்புத் தெரிவித்ததற்கு மன்னிப்பும் கேட்டார். பின்பு அவர்கள் நல்ல நண்பர்களாயிருந்தார்கள். இதை எனக்குப் பதினைந்து வயதில் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் வந்த பொழுது கூறினர். இதிலிருந்து நாம் அறியும் தத்துவம், ஒரு பெரியவர் பிழை செய்தால் அதை ஏற்றுக்கொள்வார். பிழையை எவர் ஏற்றுக்கொள்கிறரோ அவருக்கே உயர்ந்த உள்ளம் உள்ளது. அதனுல் அவரும் அவருக்கருகே இருப்போரும் நலன் பெறுவார்கள் என்பதாகும்

## *பெரிய மனது வேண்டும்*

மேதாவி நியூற்றனின் பேராசிரியரின் பெயர் பரோ (Barrow) 1665ம் ஆண்டு நியூற்றன் பி. ஏ. பட்டம் பெற்றர். இரண்டு மூன்று, ஆண்டுகளில் பேராசிரியர் பரோ நியூற்றனின் உயர்ந்த அறிவு, ஆற்றலை அறிந்துகொண்டார். 1669ம் ஆண்டு பரோ தமது பதவியை ராஜிஞமாச் செய்துவிட்டு நியூற்றனைப் பேராசிரியராக நியமனம் செய்தார். தமது மாணவன் தம்மிலும் ஒரு படி கூடியதும் அவருக்கே பேராசிரியர் பதவி தம்மிலும் பார்க்க ஏற்றதென்று பரோ நியூற்றனுக்கு விட்டுக் கொடுத்தார். இது ஒரு பெரிய மனிதனின் பெரிய மனத்தைக் காட்டுகிறது. எங்களில் எத்தனைபேர் இப்படிப்பட்ட காரியம் செய்யக் கூடியவர்கள்?

எக்காரியத்தையும் பெரிய மனதுடன் செய்ய வேண்டும். அப்பொழுது எந்த மனிதனும் பெரியவனுவான். இவனைப்பார்த்து மற்றவர்களும் தம்மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வார்கள். எதிரி என்று கருதுபவருடன் பெரிய மனதுடன் நடந்தால் சிறிது சிறிதாக எதிரியும் சிநேகிதனுகி விடுவான். இதற்கு நேர்மாருக சிறியமனதுடன் ஒரு நண்பனுடன் நடந்தால் சிநேகம் குன்றிப் போய்விடும்.

பல ஆண்டுகளுக்கு முன் நாங்கள் பிறநாட்டில் கடமையாற்றும் பொழுது இலங்கைக்கு விடுமுறைக்கு வந்தோம். ஒரு சிநேகிதர் வீட்டிற்குப்போனதும் நாம் எங்கே தங்குகிறோம் என்று அந்த வீட்டிலிருந்த சிறுபையன் விசாரித்தான். நாம் பதிலளித்ததும் நாங்கள் இருக்கும் வீடு வசதியில்லாவிட்டால் இங்கே தங்கலாமேயென்றான். அதற்கு நான் 'உங்களிடம் போதிய கட்டிலில்லை; அப்பொழுது என்ன செய்யப் போகிறீர்' என்று பாதி வேடிக்கையாகக் கேட்டேன். அந்தப்பையன் 'நாங்கள் உங்களுக்குக் கட்டிலைக் கொடுத்துவிட்டுக் கீழே படுப்போம்' என்று உடனே சொன்னான். இச்சிறு பையனுக்கு இளம் வயதிலேயே பெரிய மனது வந்துவிட்டது. பெற்றோரிடம் பையனில்லாத நேரத்தில் அவனது நற்குணத்தைப் போற்றினோம். இவ்விடத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு பொழுதும் பிள்ளைகளை வைத்துக்கொண்டு அவர்களை அதிகம் புகழக்கூடாது. இது அவர்களின் எதிர்காலத்திற்கு நல்லதில்லை.

## *மூன்றுவகை மனிதர்கள்*

வாழ்க்கையிலேயே மூன்றுவிதமான மனிதர்களை நாம் சந்திப்போம். எங்களிலும் இளையவர்கள், எங்கள் ஒத்தவயதானவர்கள், எங்களுக்கு மூத்தவர்கள். இளையவர்களுடன் நடப்பதற்கு 'சிறியோர்செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே' என்ற முறையைக் கையாளுதல் வேண்டும். ஒத்த வயதுள்ளவர்களுடன் ஏதாயினும் வித்தியாசமான அபிப்பிராயங்களிருப்பின் உரிமையுடன் வாதாடி மனவேதனையின்றிச் சமரசம் காணலாம். வயதிற்கு மூத்தவர்களுடன் கவனமாக நடக்க வேண்டும். பெரிய மனதுள்ளவர்களென்றால் ஒரு பிரச்சனையும் இல்லை. இல்லாவிடில் ஏதோ எங்கள் சிறிய அறிவிற்கு இப்படித்தான் தோற்றுகிறதென்று தயவாய்ப் பேசலாம். இதற்கிணங்காவிட்டால் பெரியமனதுடன் நாங்கள் விட்டுக்கொடுக்கலாம். அல்லது மௌனமாக இருக்கலாம். மௌனம் ஒரு சிறந்த குணம். முக்கியமாகப் பிடிவாதக்காரருடன் மௌனமாயிருத்தல் சிறந்தது.

மனிதனை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் வழிகளில் ஒன்று பெரிய மனதுடன் வாழ்வதாகும்.

அத்தியாயம் 11

# தமிழருக்கு இருக்கும் நல்ல பெயரை பாதுகாப்போம்

"தமிழர் முயற்சியுள்ளவர்கள் என்று ஓரளவுக்கு நல்ல பெயர் உண்டு; அதை எதிர்காலத்திலும் பாதுகாக்கவேண்டும்''

கவியோகி சுத்தானந்த பாரதியார் தனது ஜப்பானிய விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வழியில் கொழும்பில் ஒரு பிரசங்கம் வைத்தார். நான் அந்தக் கூட்டத்திற்குச் சமூகமளித்தேன்.

மத்தியான உணவிற்காகக் கொடுக்கும் ஒரு மணி நேரத்தில் சில நிமிடங்களில் உணவை அருந்திவிட்டு ஜப்பானிய பெண் ஊழியர் ஆடை பின்னிக்கொண்டிருப்பதை சுத்தானந்தர் கவனித்து இது ஏன் என்று விசாரித்தார். அதற்கு ஒரு பெண்மணி, ''நாங்கள் சோம்பலாயிருந்தால் ஜப்பான் தேசமே சோம்பலாகிவிடும். ஒரு நிமிடமும் ஜப்பான் தேசம் நித்திரைகொள்ள முடியாது. அதற்காகத்தான் நாங்கள் ஒரு பொழுதும் சும்மாவிருப்பதில்லை'' என்றார். இதுபோன்ற மக்களால் தான் இரண்டாம் மகாயுத்தத்தில் படுதோல்வி அடைந்த ஜப்பான் இப்பொழுது

முன்னணியிலிருக்கும் நாடுகளில் ஒன்றாகிவிட்டது. நாங்கள் சோம்பலாயிருந்தால் எங்களுக்கு மாத்திரம் கெடுதலல்ல; முழு நாட்டிற்குமே கெடுதல் ஆகும்.

தீர்க்கதரிசியாகிய மகாகவி பாரதி, ''ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'' என்று எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிறார். சில வேளைகளில் சில மனிதர் நேரமில்லையென்று நொண்டிச்சாட்டுக் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அப்படி யொன்றும் இல்லை. சுறுசுறுப்பானவனுக்கு ஒரு நாளில் 24 மணி நேரமுண்டு. மற்றவர்களுக்குக் குறைவான நேரம் தான் உண்டு. இளைஞனாகவிருக்கும் பொழுது காந்தியடிகளுக்கு பகவத்கீதையை மனப்பாடஞ்செய்ய ஆசை ஆனால், அக்காலத்தில் அவருக்கு நிறையக் கடமைகள் இருந்தன. இதையொன்றும் பொருட்படுத்தாமல் ஏதோ வழியில் பாடமாக்கி முடிக்கவேண்டுமென்ற பிடிவாதம் இருந்தது. உடனே ஒரு முடிவுக்கு வந்தார். காலையில் பல் துலக்கப்போகும்பொழுது ஒரு சிறுகடதாசியில் ஒரு சுலோகத்தை எழுதி பல் துலக்கும் இடத்துச் சுவரில் ஒட்டிவிட்டு பல் துலக்கிக்கொண்டிருக்கும் பொழுது மனப்பாடம்செய்து பல்துலக்கி முடிய சுலோகத்தை மனப்பாடம் செய்து முடித்து விடுவார்.

சிறு துளி பெருவெள்ளம்: முழுக் கீதையும் இப்படி மனப்பாடம் செய்தார் அண்ணல். இது போல் தொடர்ந்து ஒரு கருமம் செய்வதற்கு, இன்னுமொரு உதாரணம் கொடுக்கிறேன். சென்னையில் ஒரு நீதியரசர் இருந்தார். இந்து தத்துவத்தில் ஒரு கடல். ஒருவர் அவரை, எப்படி நீதியரசர் கடமையோடு இதெல்லாம் கற்றீர்கள் என வினவியபொழுது அவர் கூறினார், ''என்ன வேலையிருந்தாலும் காலையில் இரண்டு மணி நேரம் நான் இந்து தத்துவத்தை வாசிப்பேன். இதை ஆண்டில் 365 நாளும் செய்வேன். பல ஆண்டுகள் இப்படிச் செய்ததும் எனக்குப் போதிய அறிவு வந்துவிட்டது. எனினும் இந்த நல்ல பழக்கத்தைப் பிறகும் கைவிடவில்லை'' என்றார். இதைக்கேட்ட நாட் தொடக்கம் நானும் காலையில் சமயத்தைப் பற்றி ஒரு அரைமணி நேரம் வாசிப்பேன். விமானத்தில் பிரயாணம் செய்தாலும் ஒரு சமய நூலைக் கொண்டு சென்று வழக்கம்போல் காலையில் வாசித்து

விடுவேன். சிங்கப்பூர் நீதியரசர் எனது நண்பர். எங்களுடன் ஜகர்த்தாவில் சில நாட்கள் தங்கியிருந்தார். நான் காலையில் வாசிப்பதைபார்த்து விட்டு அவரும் இந்த சந்திப்புக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் காலையில் நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னர் சமயத்தைப்பற்றி ஏதாவது வாசிப்பார். தொற்று நோய் பரவுவதுபோல் நல்ல பழக்கங்களும் பரவலாமென்பதற்கு இதுவொரு நல்ல சான்ருகும்.

## நித்திரைக்குப் போகுமுன்

ஒவ்வொரு இரவும் நித்திரைக்குப் போகுமுன் 'இன்று நான் முழு நேரத்தையும் சரியாகப் பயன்படுத்தினேனு?' என்ற கேள் வியை எழுப்பவேண்டும். இப்படிச்செய்தால் மறுநாள் சோம்பலை குறைத்துக்கூட சுறுசுறுப்பாக இருக்க எத்தனிப்போம். இராம கிருஷ்ண பரமஹம்சர் தனது இஷ்ட தெய்வமான காளியை அடையும் வரையும் மாலை நேரத்தில் காளிகோவில் மணியடித் ததும் 'தாயே, காளியே இன்னுமொருநாள் உன்னைக் காணுமல் போய்விட்டதே'' என்று புலம்புவாராம். இதனுல் தன் சாதனைக் குறைவை உணர்ந்து சாதனைகளில் கூட ஈடுபட்டு அதிக நாட் கள் செல்லமுன் காளிதேவியே பிரசன்னமாகி காட்சி கொடுத் தாள் என்பது வரலாறு. நான் சில ஆண்டுகள் முன்னை நாள் தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகாவுடன் கடமை யாற்றினேன். அக்காலத்தில் அவர் உணவு விவசாய மந்திரி. சேர். ஒலிவர் ஒவ்வொரு இரவும் நித்திரைக்குப் போகுமுன் தான் அன்று ஏதாவது பலன் தரக்கூடியதைச் செய்தாரா அல்லது வீணுக ஆட்களுடன் பேசிக் கொண்டிருந்தாரா வென்று யோசிப் பதாக எனக்கு பல தடவை கூறியிருக்கிறுர். இப்படி யோசித்தால் மறுதினத்தை பயனுள்ளதாக்கலாம்.

என்னவேலை பார்க்கிறது? இருக்கிற வேலையே போதுமே என்று யோசிக்கக்கூடாது ஒன்றில் தனது தொழிலிலுள்ள நுட்ப மானவையை ஓய்வு நேரத்தில் பார்க்கலாம் அல்லது வேறு விருப் பமான கருமம் செய்யலாம். முன்னுள் பிரிட்டிஷ் பிரதமர் சேச் சில் ஒரு நல்ல மேசன். ஓய்வு நேரங்களில் தனது இல்லத்துக்கு

தேவையான மேசன் வேலையைச் செய்வார். ஒரு தனி அறை யையே அலங்காரமாக கட்டி முடித்தார்.

எனது சினேகிதர், என்னுடன் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத் தில் படித்தவர், போலந்தில் பிரிட்டிஷ் தூதுவராக கடமை யாற்றிய பொழுது விடுமுறைக்கு லண்டனுக்கு வந்தார். அச் சமயம் நானும் மனைவியும் அவர் லண்டன் இல்லத்திற்கு சென் ருேம். என் நண்பர் ஒரு வெள்ளை நீட்டு கோட் அணிந்து வீட் டுக்கு வெள்ளையடித்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி சமைத் துக் கொண்டிருந்தார். எங்களைச் சில நிமிடம் காத்திருக்கச் சொல்லிவிட்டு கை முகம் கழுவிவந்தார்கள். அவர்கள் பெரிய தனவந்தர்கள்; பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அப்படி யிருந்தும் சுறுசுறுப்பாயிருப்பதற்குத் தங்கள் வேலைகளைத் தாங் களே செய்து கொள்வார்கள்.

*யாழ்ப்பாணப் பெண்கள்*

யாழ்ப்பாணக் கிராமங்களில் அனேகமாக பெண்கள் பல வேலை செய்வார்கள். ஆனல் பட்டணங்களிலுள்ள பெண்கள் போதிய பலன் தரக்கூடிய வேலை செய்கிருர்களென்று சொல்வ தற்கில்லை. இவர்கள் பலவித சிறுகைத்தொழில்களை செய்யலாம். கிராமங்களில் ஓய்வு நேரங்களில் பாய், பெட்டி, கடகம் முத லியன பனை ஓலையிலிருந்து செய்யலாம். நான் சிறுவனுயிருக்கும் காலத்தில் எனது தந்தையார் ஒரு ஆசிரியர். அவருடன் சேர்ந்து எங்கள் வளவில் விழும் தென்னோலையை கிடுகாகப் பின்னுவோம். இப்படி எவ்வளவோ சிறுசிறு பலன்தரக்கூடிய வேலைகளுண்டு.

உதாரணமாக எங்கள் விவசாயத்திற்கு சிறு உழவுயந்திரம் பூச்சிமருந்து அடிக்கும் சிறுயந்திரம் (tractors, sprayers) போன்ற வையை திருத்த எல்லோரும் பழகியிருக்க வேண்டும். இந்த யந் திரங்களைத் திருத்த தூர இடத்திற்குக் கொண்டுபோனல் நேரம் போய்விடும். விவசாயத்தைப் பாதிக்கும். ஆகையால் அவசர சிறு திருத்த வேலைகளை தோட்டத்திலே, வயலிலே செய்யவேண்டும். மற்றுமொன்று; மத்திய கிழக்கிலிருந்து மின்சார தளபாடங்கள் பலவற்றை எங்கள் மக்கள்கொண்டு வருகிருர்கள். இதில்

சிலவற்றைக் கொண்டுவரவேண்டுமா என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாகும். எனினும் கொண்டுவருகின்ற பொருட்களை நாங்களே திருத்தப் பழகவேண்டும். இதெல்லாம் சிறு வேலைகள். எவரும் செய்யலாம்.

ஒரு இனம் மிகவும் பிரயாசையுள்ளது நம்பிக்கையுள்ளது என்ற பெயர் வாங்குவது கஷ்டம். ஓரளவில் எங்களுக்கு அந்த நற்பெயர் உண்டு. ஆனல் அந்த நற்பெயரை எதிர்காலத்தில் பாதுகாப்பது தான் கஷ்டம். நாங்கள் சுறுசுறுப்பாக விருந்து இந்நற் பெயரை பாதுகாப்போமாக!

அத்தியாயம் 12

# ரியூட்டறி ஒரு பெரும் பிரச்சனை

*(சனல் பிராக்டிஸ் முறையை பாடசாலை ஆசிரியர்களுக்கும் கொடுத்தால் என்ன?)*

பல ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு விடுமுறையின்போது வந்தபொழுது வழக்கம்போல் யாழ்ப்பாணம் வந்திருந்தேன். அப்பொழுது என்னைக் காண்பதற்கு ஓர் ஆசிரியர் வந்திருந்தார். உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது சமீபத்தில் கல்வி அதிகாரியிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்திருந்ததென்றும் அதில் ஆசிரியர்கள் ரியூட்டறிகளின் (Tutories) படிப்பிக்கக்கூடாதென்றும், ரியூட்டறிகளில் படிப்பது உசிதமில்லையென்றும் பாடசாலை மாணவர்களிடம் கூறுமாறும் மகாவித்தியாலய அதிபர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாக அந்த ஆசிரியர் என்னிடம் கூறினர். ஆனல் சுற்றறிக்கை அனுப்பிய கல்வி அதிகாரியே ஒவ்வொரு நாளும் தனது மகளை மோட்டார் வண்டியில் தானே கொண்டு சென்று ரியூட்டறியில் விடுபவர். இதுதான் தற்போதைய ஊர் நடப்பு என்று கூறினர் ஆசிரியர். வழிகாட்ட வேண்டிய மனிதனே முரணான கருமத்தைச் செய்தால் மற்றத் தாய்தந்தையர் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

ஏதோ பாடசாலைப் படிப்பில் குறையிருப்பதால்தான் இவர் போன்ருேர் இம்மாதிரி நடக்கிருர்கள் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. பாடசாலைப் படிப்பில் குறையிருந்தால் ஒன்றில் பாடசாலை அக்குறையை நிவர்த்திசெய்யவேண்டும். அல்லது ரியூட்டறி போன்றவிடங்களில் தஞ்சமடையவேண்டும். நான் விசாரித்தளவில் முக்கியமான பட்டினங்களில் உயர்தர க. பொ. த. மாணவர்கள் பாடசாலைப் படிப்புடன் ஒன்றில் ரியூட்டறியில் படிக்கிருர்கள். அல்லது (Private tuition) தனிப்பட்டபாடம் கேட்கிருர்கள். இதனுல் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. பாடசாலைப் படிப்புடன் பரீட்சைக்குச் சென்ருல் கூடிய சித்திக்கு வாய்ப்பில்லை. இங்கே சித்தியென்று குறிப்பிடும்பொழுது மறு பரீட்சைகளில் சித்தியடைவது மாதிரியல்ல. இங்கே, பல்கலைக் கழக அனுமதியும் சேர்ந்திருக்கிறது. ஒரு விதமாகப்பார்க்குமிடத்து பாடசாலைகளில் சாதாரண சித்திக்குப் படிப்பிக்கிருர்கள் என்றும் ரியூட்டறிகளில் பல்கலைக்கழக அனுமதித் தராதரத்திற்குப் படிப்பிக்கிருர்கள் என்றும் தோன்றுகிறது. இப்படியானுல், இதை ஏற்றுக்கொண்டு பாடசாலையில் க. பொ. த. உயர்தர வகுப்புகளில் முக்கிய விடயங்களை மாத்திரம் கற்பித்துவிட்டு மிகுதியை ரியூட்டறியில் கற்கவிட்டால் என்ன? அவ்வாருனல் இந்த முறையைச் சீர்திருத்த வழி பிறக்கும்; இரு படிப்பையும் ஒன்றிணைக்கலாம். இது சிந்தனைக்குரிய விடயம்.

இந்த ஒன்றிணைப்பினுல் எவ்வளவோ நன்மைகளுண்டு. ஒரே பாடத்தை இரண்டிடத்தில் கேட்கக் கெட்டிக்காரப் பிள்ளைகளுக்குச் சலிப்புத்தட்டும். ஒரு பாடத்தைப் பாடசாலைகளில் ஒரு குறிப்பிட்ட திகதியில் படிப்பித்தால் அதே பாடத்தின் நுணுக்கத்தை ஒரு சில தினங்களுக்குப்பின் ரியூட்டறியில் படிப்பிக்கலாம். பாடசாலை வகுப்புகள் காலையிலென்ருல், ரியூட்டறி வகுப்புகளைப் பின்னேரம் வைக்கலாம். இப்போது என்ன நடக்கிறதென்ருல் காலை நாலு ஐந்து மணி தொடக்கம் இரவு ஒன்பது பத்து மணிவரையும் மாணவர்கள் அங்குமிங்குமாய் அலைகிருர்கள்.

### பாடசாலைப் போதனை பாதிக்கப்படும்

ரியூட்டறி ஆசிரியர்கள் விசேட திறமையுள்ளவர்களாயிருப்பார்களென்ற கருத்துடனேயே இதனைத் தெரிவித்தேன். அதாவது, இவர்கள் சிறப்புப் பட்டம் அல்லது அதிக அனுபவமுள்ளவர்களாயிருப்பார்கள். அல்லது இளைப்பாறிய தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் என்றே கருதினேன். ஆனுல் பல ரியூட்டறிகளில்

பாடசாலையில் படிப்பிக்கும் அதே ஆசிரியர் அதே பாடத்தை டியூட்டறியில் படிப்பிப்பதென்றால் அது வரவேற்கத்தக்கதல்ல. ஒருவர் ஒருவித வேலையை இரட்டிப்பாகச் செய்வது கஷ்டம். பாடசாலையில் எப்படிப் படிப்பித்தாலும் மாதாந்தச் சம்பளம் கிடைக்கும். ஆனால் ரியூட்டறியில் தரம் குறைந்தால் மாணவர்கள் வருகை குறைந்துவிடும். இதனால் வருவாய் குறையும். ஆகையால் ஆசிரியர் தமது திறனை ரியூட்டறியில் தான் கூடக் காட்டுவார். இதனால் பாடசாலையில் இவர் கல்வி புகட்டுதல் குறைந்துவிடும்.

## ஒரு மாற்றுமுறை காண்போமா?

இப்படியான சூழ்நிலையில் என்ன செய்யலாம்? ரியூட்டறிக்குக் கொடுக்கும் பணத்தை ஏதாவது ஒரு முறை வகுத்து ஆசிரியர்களுக்குக் கொடுத்து மாணவர்களை அங்கும் இங்கும் அலைய விடாமல் ஒரே இடத்தில்—அதாவது பாடசாலையில் கல்வி புகட்டலாம். அரசாங்க வைத்தியருக்கு கொடுத்திருக்கும். வசதியை (channelled practice) போல ஆசிரியர்களுக்கும் கொடுத்தால் என்ன? இதைக் கல்வி அதிகாரிகளால் செயற்படுத்த முடியுமோவென்று கூறமுடியவில்லை.

பாடசாலை உயர்தர மாணவர்களுக்கு நடக்கும் பயிற்சி பற்றியே மேலே கூறினேன். ஆனால் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது தொடரத்தான் வேண்டுமா? என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். ஒரு வேளை பல்கலைக்கழக அனுமதி முறையாலே இம் மாதிரிக் கல்வி கற்க வேண்டியிருக்கிறது என்று நாம் வாதாடலாம். இல்லாவிட்டால் ரியூட்டறிகளே தேவையில்லை எனலாம். ரியூட்டறிகள் மூலம் பரீட்சையில் சித்தியடையலாம். ஆனால் மாணவர்கள் சிந்திக்கும் வல்லமையை ஓரளவு இழந்து விடுவார்கள். பல்கலைக்கழகங்களில் சில பரீட்சை முறைகளால் சிந்திக்கும் வல்லமை குறைவதானால் ரியூட்டறியின் முறையைப் பற்றி என் சொல்வது? இந்த உதாரணத்தைப் பாருங்கள்: கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு முறையை மாற்றவேண்டி நேரிட்டது. விசேஷ கணித பி. ஏ. பட்டத்தில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தால் 'ரங்கிளர்' (wrangler) என்றொரு சிறப்புப்பட்டம் கிடைக்கும். இரண்டு நூற்றண்டுகளாக வருடாந்தப் பட்ட விழாவில் கணிதப்பட்டதாரிகளில் முதலாம் பிரிவில் முதலாவதாக சித்தியடைந்தவரை சிரேஷ்ட 'ரங்கிளர்' (senior wrangler) என்று அழைத்தார்கள். இது கணிதம் படிப்போர் அடைய விரும்பிய பெரியபட்டம் இந்நூற்றண்டுத் தொடக்கத்தில் இந்த

முறையைப்பற்றி ஆழ்ந்து யோசித்தவிடத்து மிகவும் சிறந்த ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தவர்கள் சிரேட்டருங்கிளர்கள் அல்ல என்றும் இரண்டாம், மூன்ரும் ருங்கிளர்களே சிறந்த கணித மேதாவிகள் என்றும் தெரியவந்தது. சிரேட்ட ருங்கிளர்கள் மிகத்திறமைசாலிகளாயிருந்தாலும் அவர்கள் பரீட்சை முறையில் முழுமனதை விட்டதாலும் நுணுகிய ஆராய்ச்சி சிந்தனையில் மனதை ஈடுபடுத்தாததாலும் பிற்காலத்தில் அவ்வளவு பெரிய மேதாவிகளாகவில்லை. இதன் விளைவாக சிரேட்ட ருங்கிளர் பட்டம் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். இதுபோல் நாங்களும் இப்பொழுது இருக்கும் முறைகள் சரியில்லையென்ருல் அவற்றை மாற்றவேண்டும்.

## *பாடசாலைக் கல்வியும் ரியூட்டறிக் கல்வியும் ஒன்றிணைக்கப்படுமா?*

வயிற்றுப் பிழைப்புக்குத் தான் கல்வியென்ருல் இன்று நடக்கும் நடைமுறையைத் தொடரவிடலாம். ஆனுல் ஏதாவது சிறு சிந்தனையாளர்களும் உதயமாக வேண்டுமென்ருல் இருக்கும் கல்வி முறைகளில் மாற்றம் தேவைப்படும். நான் ஒரு கல்வி நிபுணன் அல்ல. ஏதோ ஐந்து ஆறு பல்கலைக்கழகங்களில் கடமையாற்றிய அனுபவத்தைக் கொண்டு சில கருத்துக்களைச் சொல்கின்றேன்.

இந்தக்கட்டுரையை வாசிக்கும் கல்வி நிபுணர்கள். கல்விமான்கள் இதனைத் தொடர்ந்து பயன் தரக்கூடிய யோசனைகள் கூறுவார்கள் என்பதே இக்கட்டுரையின் முக்கிய காரணம் அமெரிக்காவில் சிந்தனை வாவி (Think . tank) என்று குறிப்பிடும் முறையில் இது போன்ற அபிப்பிராயங்களை ஒருவர் தொடக்க, மற்றவர்கள் தொடர்வர், இதன் மூலம் பயன் தரக்கூடிய முடிவை எடுக்கக்கூடியதாக இருக்கும். அது போன்று இக்கட்டுரையும் ஒரு ஆரம்பமாக இருக்கட்டும்.

## *வயிற்றுப் பிழைப்புக்காக பல்கலைக்கழகத்தில் கல்வி பெற வேண்டுமா?*

வயிற்றுப் பிழைப்புக்குத்தான் கல்வியென்ருல் அதனைப் பல்கலைகழகங்கள் மூலம் தான் பெறவேண்டுமா என்பதையும் யோசிக்க வேண்டும். புத்தியுள்ளசமூகம் சூழ்நிலைக்குத்தகுந்ததாக, போகும் திசையைத் திருப்பலாம். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் பொறியியலாளர்களைத் தங்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து ஐரோப்பா முழுவதற்கும் அனுப்பிக்கொண்டி

ருக்கும் பொழுது டென்மார்க் போன்ற ஒரு சின்ன நாடு போட்டி யிடாமல் அவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து சிரேட்ட மேற் பார்வையாளர்களை (Foremen) வருடாவருடம் ஐரோப்பாவுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. சிலகால அனுபவத்திற்குப் பிறகு இவர்களும் பொறியியலாளர்கள் ஆவர்கள். நாங்களும் க.பொ.த சாதாரண படிப்புடன் இப்படிப்பட்ட படிப்புக்கள் படிப்பித்தா லென்ன என்று யோசிக்கலாம். அப்படிப்பயானால் அதற்கு வசதி கள் உண்டா? இல்லாவிட்டால் சில ரியூட்டறிகள் வழக்கமான படிப்பை நிறுத்திவிட்டு இதுபோன்ற படிப்புக்கு வசதி செய்து கொடுத்தாலென்ன? காலக்கிரமத்தில் இந்தக் கல்வியாலும் ரியூட் டறிகளுக்கு வருவாய் கிடைக்கும். வருவாய்போதாதென்ற பயம் ரியூட்டறிகளை நடத்துகிறவர்களுக்கு இயல்பாக எழக்கூடும். ஆனல் இது குறித்துப் பயப்படத்தேவை இருக்காது.

## சனப் பெருக்கமும் தேவைகளும்

கல்விக்கு மாத்திரமல்ல மற்றைய எல்லா விடயங்களிலும் எங்கள் நாடுபோன்ற நாடுகளில் உள்ள பிரச்சனை சனப்பெருக் கம் ஆகும். இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் இருக்கும் பிரச்சனைகள் கூடிக்கொண்டே போகும். அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில் (Developing Countries) ஏற்கனவே தேவைக்கும், (Requirements) கிடைக்கும் சேவைகளுக்கும் (Available Services) இடைவெளி இருக்கிறது. அத்துடன் வருடாவரு டம் சனப் பெருக்கத்தால் தேவைகள் கூடிக்கொண்டே போகும். அதனல் அதிகரித்துக்கொண்டு செல்லும் இடைவெளியை நிரப் புவது மிகவும் கஷ்டம். இதை முன் வைத்து இந்நாடுகள் சனப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன் நின்றுவிடாமல், சனத் தொகையை ஒரு நிலையில் ஏறவிடாமல் வைத்திருக்க எத்தனிக்க வேண்டும். இலங்கையில் 1963ம் ஆண்டுக்கும் 1980ம் ஆண்டுக்கு மிடையில் பாடசாலை செல்லும் மாணவர்கள் தொகை மூன்றில் ஒன்றல் கூடியிருக்கிறது. இது எவ்வளவு பிரமாண்டமான தொகை! இந்த அதிகரிப்பிற்கு ஏற்றபடி வசதிகள் செய்ய முடி யுமா? ஓரளவில் ஆசிரியர்களை நியமித்தாலும் கல்வித்தரம் (Quality) எப்படி மாறுமென்று ஊகிக்கலாம். ஆய்வுகூடம், நூல் நிலையம், மற்றைய வசதிகள் செய்ய முடியுமா என்று உணர்ச்சி வசப்படாமல் ஓர் இடத்திலிருந்து சிந்தித்தால் பயங்கர மாயிருக்கும். இதற்கு ஏற்ற பரிகாரம் யாது? இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் (Traditional) முறைகள் போதுமா? போதா விட்டால் புரட்சிகரமான முறைகளைக் கையாளவேண்டுமா? இதற்குக் கல்வியில் அனுபவமுள்ள சிந்தனையாளர்களின் புத்தி

மதி தேவை வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். ரியூட்டறிகளை உபயோகித்துப் பல்கலைக்கழகப்படிப்பை ஒரு வருடம் குறைத்தால் கூடிய மாணவர்களைப் பல்கலைக்கழகங்கள் அனுமதிக்கலாம் அல்லவா? இதற்கு தக்க நூலக, ஆய்வுகூட வசதிகள் ரியூட்டறிகளில் உள்ளனவா? இது போன்ற எண்ணங்களைத்தான் சிந்தனையாளர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

இவற்றையெல்லாம் பார்க்குமிடத்துப் பின்வரும் எண்ணங்கள் மனதில் எழுகின்றன.

(1) இப்பொழுது இருக்கும் கல்வி முறைகளை எதிர் காலத்திலும் கடைப்பிடிப்பதாயின் பாடசாலைக் கல்வியையும்' ரியூட்டறி கல்வியையும் ஒன்றிணைத்தல் பயன்தருமா?

(2) பல்கலைக்கழகங்களுக்குக் கூடிய மாணவர்களை அனுமதிப்பதற்கு ரியூட்டறிகளில் பல்கலைக்கழக முதலாம் ஆண்டுக் கல்வி போதிக்கலாமா?

(3) இருக்கும் கல்வி முறைகள் மாறும் உலகத்தில் மாற்றம் பெறவேண்டுமா?

இவை போன்ற விஷயங்களைக் கவனத்துக்கெடுக்கும் போது ஆசிரியர்களின் நிலைமை பற்றியும் ஆலோசிக்க வேண்டும். தெரிவு செய்யும் முறைகள், அவர்களின் சம்பளம் போன்றவிடயங்கள், போதனாமுறைகள், மாணவர்கள் தேவைகள் பற்றியும் ஆராயப் படவேண்டும்.

அத்தியாயம் 13

# வீண் விரயம் வேண்டாம்

மூன்று ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புகையிரதத்தில் பிரயாணம்செய்தேன். சாவகச்சேரிக்கு வண்டி வந்திருக்கும்பொழுது மலசலகூடத்திற்குச் சென்றேன். தண்ணீர் குழாயிலிருந்து ஓடிக்கொண்டிருந்தது. பைப்பைப் பூட்டிப் பார்த்தேன், முடியவில்லை. வெளியே வந்து ஒரு பலசாலியான இளைஞனைக் கூப்பிட்டேன். என்னென்று கேட்டுவிட்டு, ''தண்ணீர் ஓடினுல் ஓடட்டும்'' என்று சொல்லிப் பின்வாங்கினுர். மாங்குளம் போகுமுன் உள்ள தண்ணீர் ஓடிவிட்டது. இதற்குப்பிறகு பிரயாணிகள் புகையிரதம் நின்றபொழுது புகையிரத நிலையங்களில் இறங்கித் தேவையான நீரைப் பெற்றுர்கள். சிலவேளை நாம், தன் பொருளாயிருந்தால் இந்த இளைஞன் இப்படிச் செய்திருப்பாரோ வென்று நினைக்கக்கூடும். யார் பொருளாயிருந்தாலும் இது மன்னிக்க முடியாதது. தண்ணீர் ஒரு பெறுமதியான பொருள். சும்மா பயனற்றமுறையில் சிந்தக் கூடாது. விவசாயத்திற்கு மாத்திரமல்ல மனித தேவைக்கும் தண்ணீர் இன்றியமையாதது. அதோடு சனத்தொகை பெருக தேவையான தண்ணீருக்குத் தட்டுப்பாடுவரும். உதாரணமாக சென்னைப் பட்டணத்தை பாருங்கள். அங்கு தீராத தண்ணீர்ப்

பஞ்சம். காரணம் ஐம்பது ஆண்டுகளில் ஆறு இலட்சமாயிருந்த சனத்தொகை இப்பொழுது நாற்பது இலட்சத்திற்குக் கூடி விட்டது.

நான் பதுளையில் உபஅரசாங்க அதிபராயிருக்கும்பொழுது அங்கிருந்த அரசாங்க அதிபர் ஒரு ஆங்கிலேயர். நாங்கள் இருவரும் ஒரு அரசாங்க உணவு ஆலையைப் பார்வையிடச் சென்றோம். நாங்கள் ஆலைக்குள் நுழையும்பொழுது ஒரு குழாயிலிருந்து தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அதிபர் ஓடிப்போய்க் குழாயைப் பூட்டிவிட்டு, ஆலை உத்தியோகத்தரை ஏன் இப்படித் தண்ணீரை ஓடவிடுகிறீரென கேட்டார். அதற்கு அந்த உத்தியோகத்தர் இது வாடகைக்கு எடுத்த கட்டிடம். தண்ணீருக்கு அரசாங்கம் பணம் கொடுப்பதில்லை. இதனால் அரசாங்கத்திற்கு எவ்வித நஷ்டமுமில்லை என்றார். அதிபருக்குக்கோபம் வந்து விட்டது. இப்படிப்பட்ட விரயம் உலகத்திற்கே ஒரு பெரிய கஷ்டமென்று ஒரு பிரசங்கமே செய்தார். இவர் முன்னேற்ற மடைந்த நாட்டிலிருந்து வந்தவர். இப்படிச் செய்வதால் எவ்வித நட்டமும் ஏற்படாது என்று நினைப்பது தவறென்று கூறினார். எனக்கு அப்பொழுது வயது இருபத்தியெட்டு. அவர் புத்திமதி என்மனதில் அப்படியே பதிந்துவிட்டது.

தண்ணீருக்குப் பின் உணவைப் பார்ப்போம் அரிசியே எங்கள் முக்கிய உணவு. நெல்லாயிருக்கும்பொழுது விரயமுண்டு. அதேபோல் அரிசியிலும் விரயமுண்டு. பயிராயிருக்கும் பொழுது, நெல்லைப் பாதுகாக்க வேண்டும். பிறகு அறுவடையிலும், சூடுமிதிப்பதிலும், சேகரிக்குமிடங்களிலும் (in storage) அரிசியாக்கும் பொழுதும் (Milling), கொண்டு செல்லும்பொழுதும் (Transport) விரயமுண்டு. கடைசியாகச் சமைத்து உண்ணும்பொழுதும் விரயமுண்டு சில பிள்ளைகள் சோறு மிச்சம்விடுவது வழக்கம். எனது தாயார் கூறுவார் எவ்வளவு தேவையானாலும் சாப்பிடுங்கள். ஆனால் மிஞ்சம் விடக்கூடாதென்று திருவள்ளுவரையும் மனைவி வாசுகியையும் பற்றி எங்கேயோ வாசித்தது ஞாபகத்திற்கு வருகிறது. உணவு கொடுக்கும்பொழுது ஒரு ஊசியும், ஒரு கிண்ணத்தில் தண்ணீரும் வைக்குமாறு வள்ளுவர் மனைவிக்கு உத்தரவிட்டார். ஆனால் ஒரு நாளும் ஊசியையோ கிண்ணத்தையோ பயன்படுத்தவில்லை வள்ளுவர். இருவருள் வாசுகி முதல் இறக்கிறார். வள்ளுவர் புலம்பும்பொழுது "சாதமிடும் பொழுது ஏதாவது சிந்தினால் ஊசியாலெடுத்துக் கிண்ணத்தில் கழுவி சாப்பிடலாமென்று தான் நான் உத்தரவிட்டிருந்தேன். இவை ஏன் என்

றும் கேட்கவுமில்லை. பாவிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கவுமில்லை. நீயே மாதரில் மாணிக்கம்'' என்று கூறினர். உணவை விரயப்படுத்தக் கூடாதென்று எங்களுக்கு அந்தக்காலம் தொட்டே நல்ல பண்பு இருந்து வருகிறது.

சிலவேளைகளில் தவிர்க்க முடியாமல் பொருள் விரையமாகிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் புத்திசாதுரியத்தால் விரையமான பொருளை மீண்டும் உபயோகிக்கலாம். உதாரணமாக மலேசியாவில் நான் கண்ட சம்பவத்தைக் கூறுகிறேன். கோலாலம்பூர் பட்டிணத்திற்கு மிகவும் சமீபத்தில் பத்துமலை என்ற முருகன் தலமுண்டு. ஒவ்வொரு ஆண்டும் தைப் பூசத்திற்கு பல்லாயிரக்கணக்கானோர் சுவாமிதரிசனத்திற்கு வருவார்கள். இவர்கள் எல்லோருக்கும் அந்தத் தலத்திலே அன்னதானம் கொடுப்பது வழக்கம். ஒருமுறை நானும் என் மனைவியும் சென்றிருந்தோம். சுவாமி தரிசனத்திற்குப்பின் மலையிலிருந்து இறங்கும்பொழுது ஒரு வாய்க்காலில் ஒரு சீன வயோதிபரும் இரு இளைஞர்களும் ஏதோ எடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது மலாய் மொழியில் என்ன செய்கிறீர்கள் என நாங்கள் கேட்டோம். வயோதிபர் என்ன சொன்னார்? ''இவ்வளவு மக்களும் உணவுக்குப் பின் கைகளைக் கழுவ, கைகளிலுள்ள சோறு தண்ணீருடன் இந்த வாய்க்கால் வழியால் ஓடும். நாங்கள் இங்கே இரும்பு வலையால் மறித்து சோற்றைச் சேர்த்துச் சாக்குகளில் கட்டி லொறியில் ஏற்றிக்கொண்டுபோய் எங்கள் பன்றிகளுக்கு உணவாய்க் கொடுப்போம். வருடா வருடம் இதை செய்கிறோம்'' என்றார்கள். என்னே இந்த மக்களின் உணர்வு! உலகமே மெச்சக்கூடிய வகையில் சீனமக்கள் எஞ்சிய பொருளைக் (waste) கூட விரயமாகவிட மாட்டார்கள். மலத்தைக்கூட பயன்படுத்துகிறார்கள். உரமாக வயல், தோட்டங்களுக்கு உபயோகிக்கிறார்கள். சீன நாட்டில் வெளியே எறிவதற்குப் பொருளுமில்லை; கழிவுப் பொருளுமில்லை.

வீடுகளில் அனுவசியமாகப் பொருள்கள் வைத்திருப்பதும் ஒருவித விரயம்தான். நாலு நாற்காலிகள் போதுமாயின் ஏன் ஆறு நாற்காலிகள் வைத்திருப்பான்? எங்கள் உடையும் இது போல்தான். பணவசதியுள்ளவர்கள் தேவைக்கு மிஞ்சிய உடை வாங்கி வைத்திருப்பார்கள். நான் எனது நண்பர்களுடன் கடைகளுக்குப் போனால் அவர்களுக்குக்கொடுக்கும் புத்திமதி; ஒரு பொருளை வாங்குமுன் இது இல்லாமல் சமாளிக்க முடியுமாவென்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளவேண்டும். அப்படிக்

கேட்டால் சில பொருள்கள் வாங்கத் தேவையில்லையென்று எமக்குத் தெரியவரும்.

ஒரு தற்காலிகத் தட்டுப்பாட்டை ஹிட்லர் எப்படி சமாளித்தாரென்று பார்ப்போம். சேட்துணி சண்டைக்காலத்தில் குறைவாயிருந்தது. இதற்கு ஹிட்லர் ஜெர்மன் மக்களுக்கு ஒரு உத்தரவிட்டான். சேட் முன்பக்கத்து நீளமளவுக்கு பின்பக்கமுமிருக்க வேண்டுமென்று; சாதாரணமாக சேட் பிற்பக்கம் முற்பக்கத்திலும் பார்க்க இரண்டு மூன்று அங்குலம் கூடவிருக்கும். இந்த முறையால் எத்தனையோ கோடி மீட்டர்துணியை சேகரித்துத் தட்டுப்பாட்டை நீக்கினார். இந்த வெற்றியைக் கண்டதும் இந்த முறையிலேயே சேட் எதிர் காலத்தில் அணிய வேண்டுமென உத்தரவு பிறந்தது. எங்கள் பிடி அரிசிமுறையும் இதே மாதிரி. சமைக்குமுன் ஒருபிடி அரிசியையெடுத்து புறம்பாக ஒரு பானையில் சேகரித்தால் சில வாரங்களில் பானை நிறைந்துவிடும். இதெல்லாம் விரயத்தைத் தடுக்கும் முயற்சிகள் ஆகும்.

உணவு, நீர், உடை மனிதனின் வாழ்க்கைக்கு முக்கியமானவை. இந்த விடயங்களையிட்டு சில குறிப்புகள் எழுதியிருக்கிறேன். அதேபோல் எங்களுக்கு மற்ற விடயங்களிலும் வீண் விரையம் வேண்டாம். விரயத்தைப்பற்றி எங்கள் மக்களுக்கு அதிகம் சொல்லத்தேவையில்லை. எனினும் நாம் செய்யும் ஒவ்வொரு கருமத்திலும் நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளிலும் விரயமில்லாமல் சீவிக்கப் பழக்கவேண்டுமென்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருத்தல் நல்லது. சில விடயங்களில் விரயத்தைத் தவிர்க்க அறிவு போதாது. இவ்விடத்து அறிவை வளர்க்கவேண்டும். தெரிந்த விடயங்களில் உறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் வாழவேண்டும்.

அத்தியாயம் 14

# நான் கண்ட வன்னி

ஊவா மகாணத்து உபஅரசாங்க அதிபராகக் கடமையாற்றும் பொழுது உள்நாட்டு அமைச்சின் நிரந்தரச் செயலாளர், சேர். வேலுப்பிள்ளை குமாரசுவாமி தன்னைக் கொழும்பில் காணும்படி எழுதியிருந்தார். எதற்காக வென்று ஓரளவு ஊகிக்கக் கூடியதாயிருந்தது. ஏனென்றால் சிலகாலமாக வவுனியாவுக்கு என்னை அரசாங்க அதிபராக அனுப்புவதென்று யோசிக்கப்பட்டு வந்தது. சேர். வேலுப்பிள்ளையைக் கொழும்பில் சந்தித்த பொழுது என்னை வவுனியாவுக்கு அனுப்ப அரசாங்கம் யோசிக்கிறதென்றார். நல்லதென்று நான் கூறினேன். சில நிமிடம் மௌனம். பிறகு சேர். வேலுப்பிள்ளை நான் மிகவும் கஷ்டமான பிரதேசத்திற்குப் போவதற்கு விருப்பமில்லை என்று கூறினால், தான் அனுப்புவதற்கு என்னென்ன காரணங்கள் கூறத்தயாராக இருந்தாரென்றும், அதற்கு இப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு சிவில் சேவிஸ் உத்தியோகத்தர் செல்லமறுப்பது வழக்கமென்றும் இதற்கு எதிர்மாறாக நான்சம்மதித்ததால் தனக்கு சொற்ப நேரம் பேசத்தயக்கமாகவிருந்தது என்றார். நான் சில காரணங்களுக்காக இரண்டுமாதம் தவணை கேட்டேன். அது கொடுக்கப்பட்டது.

இந்த இரண்டுமாதமும் வன்னியில் என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது காந்தி அடிகளின் இராமராச்சியம் மனதில் பட்டது. அன்பால் மக்களைக்கொண்டு நடத்தலாம், நிர்வகிக்கலா மென்று என் மனதில் உதித்தது. ஏது செய்ய வேண்டுமென்று யோசித்தபொழுது மன நம்பிக்கையுடன் போதியவருவாய் பெறும் மக்களாய் வன்னி மக்களை மாற்ற வேண்டுமென்று முடிவெடுத்தேன். நெருக்கடியான யாழ். குடாநாட்டிலிருக்கும் மக்களை வன்னியில் குடியேற்றவும் யோசித்தேன்.

இடமாற்றத்திற்கு இரண்டு நாள் முந்தியே வவுனியாவுக்குக் குடும்பத்துடன் சென்றேன்.

அன்று, மாறிப்போகும் அரசாங்க அதிபருக்கு பிரியாவிடை. இந்த வைபவத்திற்கு என்னையும் அழைத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பலபேரைச் சந்தித்தேன். ஆனால் இரு விவசாயிகள் தங்களுக்குள் பேசியதுதான் எனக்கு மனதில் பதிந்தது. தேநீர் அருந்தும் பொழுது எனக்குப்பின் இருந்த விவசாயி மற்றவருக்கு, 'மாறிப்போகும் அரசாங்க அதிபரை பார்த்தியா? எவ்வளவு, இலட்சணமாக வீற்றிருக்கிறார்'' என்று கூறினார். இதற்கு உடன் பதில் வரவில்லை. சில நிமிடத்திற்குப் பிறகு மற்ற விவசாயி, ''இவருக்கு இதுதான்தெரியும் வேறென்ன இவருக்குத் தெரியும்'' என்றார். இந்தக் குறிப்பு ஒரு வேதவாக்கியம் போன்றது. பொது மக்களுக்கு உத்தியோகத்தரைப்பற்றி அபிப்பிராயமுண்டு. அநேகமாக இதுவே சரியான அபிப்பிராயம். மாறிப்போகும் அதிபரின் வேலையில் குறையிருப்பதாகப் பேசியது உண்மையென்று இரண்டு நாளில் தெரிந்தது. என்னிடம் கச்சேரியைப் பாரம் கொடுக்கும் பொழுது அவர் ''இங்கே ஒரு வேலையும் இல்லை. நான் கச்சேரிக்குப் போகும்பொழுது ஒவ்வொருநாளும் ஒருநாவல் கொண்டு போய் வாசிப்பேன். ஒருநாளைக்கு நாலு கடுதாசி (File) தான் வரும்'' என்றார். எனக்கு இது பிடிக்கவில்லை. நாவல் கச்சேரியில் வாசிப்பதற்கு எனக்கு சம்பளம் வாங்கவிருப்பமில்லை.

இரு நாள் கச்சேரியில் வேலை செய்ததும் ஒவ்வொருநாளும் காலை 7 மணிக்கு கச்சேரி ஜீப் (Jeep) வண்டியில் புறப்பட்டு பத்து மணிவரையும் பார்க்கக்கூடிய குளங்களைப் பார்வையிட்டேன். இதேபோல் முல்லைத்தீவில் தங்கி அவ்விடமும் பார்வையிட்டேன். மூன்று நாலு மாதங்களுள் வவுனியா மாவட்டத்திலுள்ள 450 குளங்களையும், 400 கிராமங்களையும் பார்வையிட்டு முடித்தேன். நான் பார்க்காத குளமுமில்லை; போகாத கிராமமுமில்லை. மக்களின் தேவைகளைப் பார்வையிட்டு ஆவன செய்து

கொண்டு போகும்பொழுது வேலையும் கூடிக்கொண்டே போனது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை வாரத்தில் இருந்த தென்றே தெரியவில்லை. அரசாங்கமே தமிழ் மக்களுக்குச் சேவைசெய்யக் கொடுத்த வாய்ப்பை எவ்வளவு அதிகம் பயன்படுத்த முடியுமோ அவ்வளவும் பயன்படுத்தினேன். இதனால் வாரத்திற்கு ஏழு நாட்களும் கந்தோர் நேரம் பாராமல் வேலைசெய்தால் தான் தொடங்கின கருமங்கள் முடிக்கலாமென்று உதவி ஒத்தாசை கொடுத்த உத்தியோகத்தர்களுடன் கருமங்களைப் பார்த்தேன். இது தொடர்பாக ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு விடுமுறை நாள். எனது நண்பன் அருட்பிரகாசம் புத்தளம் அரசாங்க அதிபர். யாழ்ப்பாணம் போகும் வழியில் எங்கள் வவுனியா வாசஸ்தலத்திற்கு வந்தார். எங்கே நான் என்று அவர் வினவியதும், எனது மனைவி கச்சேரியிலென்றார். எனது நண்பர் இதை வேடிக்கையாகக் கருதினார். உண்மை தெரிந்ததும் அவர் கச்சேரிக்கு வந்தார். பல உத்தியோகத்தருடன் நானும் வேலை செய்ததைக் கண்டு திகைத்துப் போனார். என்னப்பா செய்கிறீர்களென்றார். அதற்கு நான் பலநூற்றாண்டுகளாகத் தேடுவாரில்லாமல் கவனிக்கப்படாத பகுதியையும் மக்களையும் முன்னேற்றுவதாயின் விடுமுறை பார்க்க முடியாது; அதோடு எவ்வளவு காலம் அரசாங்கம் என்னை வவுனியாவில் கடமையாற்ற விடுமோவென்று தெரியவில்லை. ஆகையால் ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்படுத்தி ஆக்கபூர்வமான வேலைகளைத் துரிதமாகச் செய்கிறேனென்றேன்.

வவனியாபோய் இரண்டொரு மாதத்தில் புதுக்குளம் என்ற கிராமத்திற்குச் சென்றேன். அங்கு நாகமுத்து என்ற விவசாயி வன்னியின் வாழ்க்கைக் கஷ்டங்களை ஒரே வரியில் கூறினார். ''வண்ணான் வந்தாலும் நெல்லைக் கொடுக்கிறோம்; நாவிதனுக்கும் நெல்லு; பிள்ளைகளுக்குப் புத்தகம், உடுபிடவை என்றால் அதற்கும் நெல்லுவேண்டும்; கடைசியாகச் சாப்பிட நெல்லில்லை.'' எனக்கு வன்னி விவசாய மக்களின் பிரச்சனை விளங்கிவிட்டது. ஒன்றில் தற்பொழுது கிடைக்கும் நெல் விளைவை மேலும்அதிகரிக்க வேண்டும்; அல்லது நெல்லை உணவுக்கு வைத்துக்கொண்டு வேறு முயற்சியால் வருவாயைக் கூட்டிக்கொள்ள வேண்டும் இதுதான் சவால்!

இதையிட்டுப் ஆழமாக யோசித்துக்கொண்டிருந்தேன். அத் தருணத்தில் பின்னேரம் உலாவப்போன பொழுது வவனியா நகர எல்லைக்குள் ஒரு விவசாயி எருதுகளை உபயோகித்துத் தண்

ணீர் இறைத்துக் கொண்டிருந்ததைக் கவனித்தேன். அந்த விவசாயிடம் விசாரித்த பொழுது, தான் மலைநாட்டிலிருந்து வந்ததாகவும், ஆழக் கிணறுகளைக் குளத்தின் அலைகரையில் வெட்டினல் சுமாராகத் தண்ணீர் கிடைக்குமென்றும், அந்த நீரை உபயோகித்து யாழ்ப்பாண முறையில் வெங்காயம், மிளகாய் பயிரிடலாமென்றுர். புதுக்குளத்தில் உள்ள கஷ்டங்களை நிவர்த்தி செய்ய ஒரு பரிகாரத்தை உடனே கண்டேன். அதாவது, நெல் வருவாயுடன் வேறு வருவாய் எப்படிக் கிடைக்குமென்ற வழி தெரிந்தது.

இதற்குப்பிறகு கிணறு வெட்டுவதை உற்சாகப்படுத்தினேன். தேவையான காணியை கொடுத்துப் பணவசதியும் செய்து கொடுத்து பலநூறு கிணறுகள் வெட்டப்பட்டன. வெங்காயம், மிளகாய் என்பன பயிரிடப்பட்டன. முதலில் வன்னி மக்கள் சிறிது பிற்போக்காக இருந்தார்கள். நாளடைவில் மலைநாட்டிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வந்தவர்கள் செய்வதைப் பார்த்து தாங்களும் தோட்ட விவசாயம் செய்ய தொடங்கிவிட்டார்கள். காலம் போக தண்ணீர் இறைப்பதற்கு நீர் இறைக்கும் யந்திரம் (Pump) உபயோகிக்கத் தொடங்கினுர்கள். வவுனியாவில் இருந்து மாறி நான் உணவு உற்பத்தி அதிபராகக் கொழும்பில் இருக்கும் பொழுது கிணறு வெட்டுவதற்குக் கூடிய பணம் கொடுத்து முன்னேற்றம் கண்டோம். முத்து ஐயன் கட்டுக் குளம் திருத்தி திரு. கனகரெத்தினம், மேற்பார்வையில் நெல் அல்லாத இதர பயிர்கள் செய்ய தொடங்கிய பொழுதுதான் இதன் முழுப்பயனும் தெளிவாகத் தெரிந்தது.

நெல்லே வன்னியின் உயிர். இந்த உயிரை வாழவைப்பது குளம். குளத்திற்குத் தேவை தண்ணீர். ஆகையால் எனது முழுமனமும், இருக்கும் குளங்களைத் திருத்துவதும் பாழாகவிருக்கும் குளங்களை புனர் அமைப்பதுமே. இதை உற்சாகப்படுத்த ஒரு சம்பவம் நடந்தது. குமுளமுனை என்னும் கிராமத்திற்குச் சென்றேன். அங்கே பழைய விதானையாராகிய மாணிக்க ஐயரை சந்தித்தேன் (ஐயர் என்றுல் பிராமணரென்று நினைக்கவேண்டாம்.) யார் இந்தக் கிராமத்திற்கு வந்தாலும் அவரைக்காண வேண்டும். அவர் கொடுக்கும் கோப்பியைக் குடிக்க வேண்டும். இதுதான் ஊர் வழக்கம். கோப்பியை குடித்ததும் எப்படி இந்தப் பகுதியை திருத்தலாமென்று கேட்டேன். அவர் தண்ணிமுறிப்புக் குளத்தைப் பற்றிச் சொல்லி பல நூற்றுண்டுகளாக குளம் முறிந்து காடாகிவிட்டது, இதைத் திருத்தினுல் தங்களுக்கு

உய்வுண்டென்ருர். ஆனுல் உரோசம் வரக்கூடிய முறையில் இப்படி புதிதாக வருகிற அதிபர்களுக்கு சொல்வதும் அவர்கள் கேட்பதும் பிறகு ஒன்றும் நடப்பதில்லே. இதைத்தான் முப்பது வருடமாக பார்க்கிறேனென்ருர். நான் சவாலே ஏற்றுக் கொண்டேன். என்னுடைய தொடர்ந்த முயற்சியாலும் பொறியியலாளர் ஆறுமுகத்தின் உதவியாலும் பாராளுமன்ற அங்கத்தவர் பெரியார் சுந்தரலிங்கத்தின் ஒத்துழைப்பாலும் அக்காலத்து காணி விவசாய அமைச்சர் டட்லி சேனநாயகாவை அழைத்துக் குளத்தைக் காட்டி பணம் பெற்று சில ஆண்டுகளுக்குள் குளத்தைத் திருத்தி மக்களே குடியிருத்தி இப்பொழுது பல் ஆயிரம் மக்களுக்கு உணவு கொடுக்கும் பூமியாக்கிவிட்டோம். (நான் தொடக்கி வைத்தேன். எனக்குப் பின் வந்தோர் பூர்த்திசெய்தார்கள்).

குளங்களே நல்ல முறையில் பராமரித்தால் அல்லது புணர் அமைத்தால் கூடிய தண்ணீர் வசதியுண்டு. இதனுல் புதுக்காணியை நெல் வயலாக்கலாம். குளங்கள் திருத்திக் கொண்டு போக அரசாங்கக் காணிகள் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் கூடிய தண்ணீரை பயன்படுத்தலாம். முதலில் வன்னி மக்களுக்குக் காணி கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் இந்த மாவட்டத்திற்கு அருகேயிருக்கும் மாவட்ட மக்களுக்குக் கொடுப்பதே அப்போதைய அரசாங்க முறை. இதன் பிரகாரம் வன்னி மக்களே திருப்தி செய்த பின்னர் அணித்தேயுள்ள யாழ். மாவட்டத்திலிருந்து சில மக்களுக்குக் கொடுத்து அவர்கள் குடியேறினுர்கள். பிற மாவட்டங்களிலிருந்து பண வசதியுடையவர்கள் சில தோட்டக் காணிகளே எடுத்துப் பலவகைப் பயிரை பயிர்செய்தார்கள்.

வன்னி மக்களுடன் வாழ்வது ஒரு இன்பம். பெருமை உள்ளவர்கள். இதனுல் மற்றவர்களேக் குறைவென்று கருதுபவர்களில்லே. பண்டாரவன்னியனே என்றும் நினேத்து பெருமைப்படுபவர்கள். எல்லா விஷயங்களிலும் அவர்களுடன் ஒளிவு மறைவில்லாமல் நான் உரையாடுவேன். இதற்கு உதாரணமாக, ஒரு நாள் வேறு இலாகாவைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தர் வீட்டு வளவில் நானும் மனேவியும் உத்தியோகஸ்தருடனும் அவர் மனேவியுடனும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தோம். அந்நேரம் புதுக்குளத்து மக்கள் சிலர் அருகிலிருக்கும் தெருவால் நடந்து சென்ருர்கள். அவர்களின் பார்வை ஒரு விதமாகவிருந்தது. மறுமுறை புதுக்குளம் சென்றதும் இவர்களே ஒரு புறம் கூப்பிட்டு ''ஏன் அன்று அப்படிப் பார்த்தீர்கள்'' என்று கேட்டேன்.

அவர்கள் அதற்கு "உங்களில் எங்களுக்குப் பெருமதிப்புண்டு. ஆனல் அந்த உத்தியோகஸ்தரின் கை அசுத்தம். அவர் வீட்டில் உங்களைக் கண்டதும் எங்களுக்கு விசனமாகவிருந்தது'' என்றார் கள். உடனே மக்களின் மனநிலை எனக்கு நன்கு விளங்கியது. இதன் பிறகு சந்தேகமான முறையில் நடக்கும் உத்தியோகஸ் தர்கள் வீடுகளுக்கு போவதை நிறுத்திக்கொண்டோம். உத்தி யோகபூர்வமான தொடர்பை நல்ல முறையில் வைத்துக்கொண்டு அவர்கள் இல்லம் போகாமல் சீவித்தோம். இராமராச்சியம் எனது இலட்சியமாகையால், மக்கள் சொல்வது சரியென்றல் அதனைக் கேட்கத்தானே வேண்டும்.

வன்னிகண்ட முன்னேற்றத்திற்கு மிகவும் உழைத்தவர் அக் காலத்துப் பாராளுமன்ற உறுப்பினரான பெரியார் சுந்தரலிங் கம் அவர்கள். அவர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் எனது பேராசிரியராக இருந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து செல் லும் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கையும் தலைநிமிர்ந்து நிற்ப தற்கு உற்சாகமும் கொடுத்த பெரியார் இவர். இவருடன் சேர்ந்து வன்னியை முன்னேற்றமடையச் செய்த முயற்சிகளைப் பார்த்துச் சிலர் ஆச்சரியப்பட்டார்கள். ஏனென்றல் இவரோடு ஒத்துழைப்பது கஷ்டமென்று சிலர் யோசித்தனர். இவர்களில் ஒருவர் அக்காலத்து சபாநாயகர் சேர் அல்பற் பீறிஸ். இவரு டைய நாத்தாண்டிய இல்லத்தில் எங்களில் சிலர் உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுது சேர் அல்பற், "என்னென்று சுந்தர லிங்கத்துடன் சமாளிக்கிறீர்கள்? எனக்குப் பாராளுமன்றத்தில் நெடுகத் தொல்லைகள் கொடுக்கிறரே,'' என்றார். நான் கொடுத்த பதில் 'அன்பு' என்பதாகும். பெரியார் சுந்தரலிங்கத்திற்கு என் மேல் விசுவாசம் இருந்தது. எங்களுக்குள் பரஸ்பரம் அன்பு இருந்தது. இதனல் எவ்விடயத்திலும் ஒற்றுமை இருந்தது. வேற்றுமையிருக்கும் சந்தர்ப்பங்களில் "இதை என்னிடம் விடுங் கள் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்றல் உடனே சம் மதித்து விடுவார். பெரியாருக்கும் என்னைப்போல் வன்னியின் எதிர் காலத்தில் முழு நம்பிக்கை இருந்தது. இந்தப் பிரதேசமே எங் களெல்லோருக்கும் உணவு கொடுக்கும். குடாநாட்டின் சன நெருக்கடியையும் குறைக்க உதவும். இதுவே எங்கள் அசை யாத நம்பிக்கை. இதற்கு யாழ்ப்பாண மக்களும் வன்னி மக்க ளும் வித்தியாசங்கள் இன்றி வாழவேண்டும்.

இருபத்தெட்டு மாதமுடிய எனக்கு இடமாற்றம் வந்தது. அந் தச் வன்னியில் கிராமங்கள் தோறும் பல பிரியாவிடைவைபவங்கள்

நடந்தன. எனக்கு மறக்கமுடியாதது முள்ளியவளை வைபவம் அவ்விடம் ஒரு பேச்சாளர், ''இராமராச்சியத்தைப் பற்றி வாசித்திருக்கிறோம். சேர சோழ பாண்டிய நல்லரசுகளைப் பற்றிக் கேள்விப்பட்டோம். இவை எப்படியிருந்திருக்குமென்று கடந்த இரண்டு வருடம் கடந்த நிர்வாகத்தைப் பார்த்து ஊகிக்கக் கூடியதாகவிருக்கிறது'' என்று கூறினர். இந்தக் குறிப்பு எனது மனதிற்கு திருப்தியைக் கொடுத்தது. இடம்மாறிய பின்னும் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்திற்கு வருடா வருடம் சென்று அங்கு நடக்கும் ஆக்கபூர்வமான வேலைகளைப் பார்வையிடுவது எனது வழக்கம்.

வன்னியில் கண்ட அனுபவங்கள் பல. சரியான முறையில் அதிகாரிகள் நடந்து கொண்டால் மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். அதிகாரிகள் நேர்மையுடனும் பண்புடனும் நடக்க வேண்டும். பேச்சும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டும். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அதிகாரிகள் ஒரு கால் வன்னியிலும் மற்றக்கால் யாழ்ப்பாணத்திலும் வைத்துக் கொண்டு ஒருக்காலமும் திருப்திகரமாகக் கடமையாற்ற முடியாது. வன்னி மக்களை ஏதோ குறைந்தவர்கள் என்று கருதப்படாது. அவர்கள் நல்ல முறையில் நடந்து கொண்டால் தங்களில் ஒருவராக வன்னி மக்கள் கருதுவார்கள். இப்படிக் கருதினல்தான் ஆக்க பூர்வ வேலைகள் சித்தியடையும். வன்னி ஒரு செழிப்பான பூமி. நல்ல மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் என்றென்றும் சிறப்புடன் வாழவேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. வன்னியில் எனக்குக் கிடைத்த சித்திக்கு அங்கே கடமையாற்றிய அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் பெரும் பங்குண்டு.

(வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் என்று இப்பொழுது கூறும் இரு மாவட்டங்களையும் சேர்த்து, அக்காலத்தில் வவுனியா மாவட்டம் என்று அழைத்தார்கள்.)

அத்தியாயம் 15

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாழ். மத்தியக்கல்லூரி

மூன்று ஆண்டுகள் நான் யாழ் கில்னர் கல்லூரியில் படித்து விட்டுப் பின்பு யாழ் மத்திய கல்லூரியில் சேர்ந்தேன். அச்சமயம் எனது தந்தையார் மலாயா போயிருந்தபடியால் தனது நண்பர் ஒருவரிடம் என்னைக் கல்லூரியில் சேர்க்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். 1926ம் ஆண்டு டிசம்பர் மாதம் எனது தந்தையாரின் நண்பன் யாழ். மத்தியகல்லூரித் தலைமையாசிரியர் ஜே. கே. சண்முகம் வீட்டிற்கு என்னைக் கூட்டிக்கொண்டுபோய் அறிமுகப்படுத்தினர். அத்தருணம் ஆசிரியர் சண்முகம், ''எங்களுடைய நாகமுத்து மாஸ்டர் மகனு? சரி, கல்லூரி தொடங்கிற அன்று வா. நேரே கந்தோருக்குப்போய் அங்கே உனது சொந்தக்காரரர் லிகிதர் வைத்திலிங்கம் இருப்பார். அவர் ஆவன செய்வார்,'' என்றார். 1927ம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் பாரத்தில் (2nd from) சேர்ந்தேன். எங்களுடைய வகுப்பாசிரியர் ஜி. டபிள்யூ. தம்பர் (ஏ. ஈ. தம்பரின் தந்தையார்) புது மாணவர்களின் பெயர்களைச் சொல்லச் சொன்னர். நான் எனது பெயரைக் கூறியதும், ''ஓகோ, நாகமுத்து மாஸ்டர் மகனு? எம். ஏ., எம். எஸ்சி., சரவணமுத்து தானே உனது சித்தப்பா?'' என்றார். இது எனக்கு ஒரு பெரிய வரவேற்பாயிருந்தது.

சாதாரணமாகப் படிப்பு நடந்துகொண்டிருந்தது. என்னை லத்தீனுக்குப் பதில் சமஸ்கிருதம் படிக்கும்படி என் தந்தையார்

கட்டளையிட்டார். இதுபெரிய பாக்கியம் என்று பிற்காலத்தில் தான் அறிந்தேன். பிற்காலத்தில், சமஸ்கிருதம் படித்திருந்த தால் மலாய், இந்தோனீஷியாமொழி, வேறும் சில மொழி களைக் கற்பதற்குச் சுலபமாகவிருந்தது, முதல்முறையாகப் பண்டி தர் இராமசாமி சர்மாவை 1927ம் ஆண்டு சந்தித்தேன். இவர் தான் எங்கள் சமஸ்கிருத ஆசிரியராக இருந்தார். அவர் சிவன் கோவிலடியில் இருந்தார். எனது வீடும் வண்ணார்பண்ணையில் இருந்ததால் காலையில் கல்லூரிக்குப் போகும்பொழுது அநேக மாக இவரைச் சந்திப்பேன்.

போகும்பொழுது பலதும் பேசுவோம். இவையெல்லாம் அறி வுரைகள் என்று பிற்காலத்தில்தான் அறிந்தேன். சமஸ்கிருத வகுப்பில் அவர் மனதில் படியக்கூடிய ஒரு புத்தியைக் கூறினார். ஏதாவது ஒரு பாடத்தைப் படித்துவிட்டு எல்லாம் தெரியு மென்று நினைக்கக்கூடாது, என்பதற்குச் சான்றாக ஒரு கதை சொன்னார்; ''ஒரு தமிழ் மாணவன் தெலுங்கு படிக்கத் தொடங் கினான். தெலுங்கு ஆசிரியர் முதல் சொல்லிக் கொடுத்தது, ஆனைக்குத் தெலுங்கு அரம். மாணவன், வேறு தெலுங்கு படிக் கத் தேவையில்லை என்றான். அப்பொழுது ஆசிரியர் குதிரைக்கு தெலுங்கு என்ன வென்று வினவ, ''குரம்'' என்றான்.'' பண்டி தர் சர்மா ''ஆனைக்கு அரமென்றால் குதிரைக்குக் குரமல்ல; இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.'' என்பார். இதில் நாமறியக்கூடியது என்ன வென்றால், ஒரே ஒரு உதாரணத்தை எடுத்துக்கொண்டு எல்லாம் இப்படித்தான் இருக்கும் என்று எண்ணுவது தவறு. எனது பொது அறிவுக்கு வித்திட்டவர் களில் பண்டிதர் சர்மாவும் ஒருவர்.

கல்லூரியில் அந்த ஆண்டு மறக்க முடியாதது, காந்தி அடி கள் யாழ்ப்பாணம் வந்த பொழுது கல்லூரிக்கு வந்தமையா கும். அண்ணல் உட்கார ஒரு நாற்காலியும் முன்னுக்கு ஒரு மேசையுமிருந்தன. காந்தியடிகள் வந்ததும் மேசையிலே ஏறி காலை மடித்துக்கொண்டு உட்கார்ந்தார். அவர் அருகில் ராஜாஜி தமிழில் மொழிபெயர்த்தார். கல்லூரி கிறிஸ்தவக்கல்லூரி என் பதால், கிறிஸ்தவ வாழ்க்கை எப்படியிருக்கவேண்டுமென்பதே அவரது பேச்சாக இருந்தது. அடுத்த ஆண்டு எனக்குப் பதி னொரு வயது. மூன்றாவது பாரத்திற்கு வந்துவிட்டேன். கேம் பிறிட்ஜ் பல்கலைக்கழகக் கணிதப் பட்டதாரி கிபன் (Gibbon) எங்களுக்குக் கணிதம் படிப்பித்தார் அற்புதமாகப் படிப்பிப் பார். கணிதத்திற்கு அவர் உயிர் கொடுத்தார் என்றே சொல்ல

வேண்டும். வகுப்பில் பத்துப்பதினைந்து நிமிடம் ஒரு விடயத்தை விளங்கப்படுத்திவிட்டு, நான்கு அல்லது ஐந்து கணக்குகள் கொடுப்பார். பத்து நிமிஷம், கூடினால் பதினைந்து நிமிடத்தில் முடித்து விட்டு முதலாவதாகக் கணக்கைக் காட்டுவேன். அநேகமாக எல்லாம் சரியாயிருக்கும். அந்த வகுப்பு மேடையில் என்னை ஏற்றிப் புகழ்மாலை சூட்டுவார். இதுவே என் கணித மோகத்தின் ஆரம்பம். இதன் விளைவாகச் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தனியக் கணிதமே படிப்பேன். கணித ஆசிரிய ரான எனது தந்தையாரிடமிருந்து சந்தேகமான விடயங்களைக் கேட்டு அறிவேன். கடைசியாக ஆறுவருடம் படிக்க வேண்டிய கணிதத்தை நான் மூன்று ஆண்டுகளில் படித்து முடித்தேன். இதனால் மேல் வகுப்புகளில் மற்றப் பாடங்களுக்குக் கூடிய நேரத்தைச் செலவழிக்கக் கூடியதாயிருந்தது. ஆசிரியர் கிபன் மாற்றலாகிக் கண்டிக்குப்போக இன்னுமொரு சிறந்த ஆசிரியர் கே. ஸி. ஜேகப் (Jacob) எனக்குப் படிப்பித்து உற்சாகம் ஊட்டினர்.

## வாரமொருதினம் ஆங்கில உச்சரிப்பு

எங்களுடைய கல்லூரி அதிபர் காஷ் (Cash) வாரத்திற்கு ஒரு நாள் எங்களுக்கு ஆங்கில உச்சரிப்புப் படிப்பித்தார். பிழையான உச்சரிப்புக்களைச் சரியான வயதிலே எங்களுக்குத் திருத்திச் சொல்லிக் கொடுத்தார். பிற்காலத்தில் இவரையும் இவர் பாரியாரையும் நான் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் பொழுது அவர்களது பர்மிங்காம் (Birmingham) இல்லத்தில் சந்தித்து அவர்களுடன் இரண்டு நாள் தங்கினேன். இந்தத் தம்பதிகளின் அபிப்பிராயம், 'யாழ்ப்பாணம் போன்ற இடம் எங்கும் இல்லை; தமிழர்போல் நல்லவர்களில்லை' என்பதாகும், காஷ் அதிபராயிருந்தபொழுது மத்தியகல்லூரியில் மொத்தம் நாநூற்று இருபத்தைந்து மாணவர்கள். அதிபர் எல்லா மாணவர் வீடுகளுக்கும் போயிருக்கிறார். அநேகமான மாணவர்களின் குடும்பங்களை அவருக்குத் தெரியும்.

ஆசிரியர் ஏ. ஈ. தம்பர் எங்களுக்குப் பௌதிகம் கற்பித்தார். சுமாராகப் படிப்பித்தார். ஆனால் பாடத்திற்கு வெளியே பொது அறிவு ஊட்டுவதில் ஆசிரியர் தம்பருக்கு நிகரானவர் ஒருவரு மில்லை. ஒருமுறை நான் அவரை "என்ன சேர் கொழும்புக் கல்லூரிகளிலிருந்து கேம்பிறிட்ஜ் ஜூனியர், சீனியர் சோதனைகளில் ஏழு எட்டு டிஸ்ரிங்ஷன் எடுக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து நாங்கள் இரண்டிற்கு மேல் டிஸ்ரிங்ஷன் எடுப்பதில்லை. இதற்கு

என்ன செய்யலாம்'' என்று கேட்டேன். அதற்கு அவர், ''கவலைப்படவேண்டாம்; உங்கள் எல்லோருக்கும் மூளையைச் சரியாக உபயோகிப்பதற்குத்தக்க முறையிலே எல்லாப் பாடத்திலுமுள்ள முக்கிய அம்சங்களை மாத்திரம் இங்கே படிப்பிக்கிறேம். இதனுல் மிகுதிப் பாடத்தை உங்கள் மூளையைப் பாவித்துப் படிக்கிறீர்கள். இப்பொழுது அவ்வளவு சித்தி கிடைக்கா விட்டாலும் மேற் படிப்பில் நீங்கள் எல்லோரும் நன்ருக முன்னேறுவீர்கள்'' என்று சொன்னுர். அவர் சொன்னது சரியே. கல்லூரிப் படிப்பு முடிந்து பல்கலைக்கழகம் சென்றதும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மாணவர்கள் மிகவும் சிறந்து விளங்கினுர்கள்.

ஆசிரியர் தம்பரையும் ஆசிரியர் நவரத்தினத்தையும் (பிற் காலத்தில் கலைப்புலவரானவர்) பின்னேரங்களில் வண்ணை மேற்கில் காணலாம். அக்காலத்தில் யோகர் சுவாமி வண்ணுர்பண்ணையில் வசித்துவந்தார். இவர்கள் சுவாமியை அடிக்கடி தரிசித்து வந்தார்கள். ஆசிரியர் நவரத்தினம் மத்திய கல்லூரியில் வர்த்தக வகுப்பொன்று நடாத்தினுர். திரு. தம்பரும் கலைப்புலவரும் பெரிய தேசபக்தர்கள். வேட்டி தான் கட்டுவார்கள். அக்காலத்தில் அனேகமான ஆசிரியர்கள் கால்சட்டை, கோட் அணிந்து கல்லூரிக்கு வருவார்கள். ஆசிரியர் தம்பரும் கலைப்புலவரும் வேட்டியுடன் வருவதைப் பார்த்து மத்திய கல்லூரியின் வேறுபல ஆசிரியர்களும் வேட்டி அணியத் தொடக்கினுர்கள். இவர்களின் நடைமுறையைப் பார்த்த மாணவர்களுக்குத் தேசபக்தியென்று ஒன்றிருக்கிறதென்று தெரிந்துகொண்டார்கள்.

எனக்குப் பன்னிரண்டு வயதாயிருந்திருக்கும். எங்கள் வகுப்பறைக்கு அரைச்சுவரே இருந்தது. யாரும் கல்லூரிக்கு வந்தால் நாங்கள் வகுப்பிலிருந்து திரும்பிப்பார்த்தால் அவர்களைத் தெரியும். ஒரு நாள் பிராமணக் கொடுக்குடனும், நீளமான மூடிய கோட்டுடனும் ஒருவர் வருவதைக் கவனித்தோம். யார் என்று வினவியதும் ''இவர்தான் எம். ஏ. முத்துக்குமாரு'' என்ருர்கள். இவர் மேல்வகுப்புகளுக்கு ஆங்கிலம் படிப்பித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் நானும் மேல் வகுப்புக்கு வந்ததும், இவரிடம் படித்தேன். இவரிடம் ஷேக்ஸ்பியர் படிக்கிறதென்ருல் அது ஒரு தனி இன்பம். அவர் வாழ்க்கையிலிருந்து பல உதாரணங்கள் கூறுவார். இவர் எனது சிறிய தந்தையார் சரவணமுத்து எம். ஏ. எம். எஸ். ஸி. யுடன் கல்கத்தாவில் படித்தவர். அடிக்கடி கல்கத்தா வாழ்க்கை பற்றியும் பல பயன் தரக்கூடிய அனுபவங்களைப் பற்றியும் எடுத்துக் கூறுவார். ஒவ்

வொரு சனிக்கிழமை காலையிலும் இவரை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் காணலாம். சனிகாலை கிளிநொச்சிக்குப் போய்த் தன்னுடைய விவசாயத்தைப் பார்த்து, மற்றப் பொதுமக்களுக்குத் தேவையான அலுவல்களையும் பார்த்துவிட்டு ஞாயிறு இரவு திரும்பி வருவார். குடாநாட்டுக்கு வெளியே விவசாயம் செய்ய வேண்டுமென்பது அவரது திடமான நம்பிக்கை. இவர் விவசாய முன்னேற்றத்திற்கு ஒரு முன்னோடியாக விளங்கினார்.

எதிர் காலத்தில் வரப்போகும் மாறுதல்களை ஓரளவு ஊகித்த கல்லூரி அதிபர், மேல் வகுப்பில் முன்னர் பிரத்தியேகமாக இருந்த சமய பாடத்தை, அதாவது கிறிஸ்தவ பாடத்தை மாற்றி மற்றச் சமயங்களையும் சேர்த்துக் கொண்டார். இந்து சமய வகுப்பில் என்னை ஒரு கட்டுரை வாசிக்கச் சொன்னார். அதிபர் எங்கள் குடும்பம் ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷனுடன் சம்பந்தப்பட்டிருந்ததால் ஒரு சாதாரண மாணவனுக்குத் தெரிந்த அறிவிலும் பார்க்க எனக்குச் சிறிதளவாயினும் இராமகிருஷ்ணரைப் பற்றி அதிகமாகத் தெரியும். றொமயின் றோலண்ட் (Romain Rolland) இராமகிருஷ்ணரைப்பற்றி எழுதிய நூலைப் படித்துவிட்டு ஒரு கட்டுரை எழுதி வகுப்பில் வாசித்தேன். இராமகிருஷ்ணரைப் பற்றிப் பல தேசங்களில் பிற்காலத்தில் சொற்பொழி வாற்றினேன், இதெல்லாவற்றுக்கும் அத்திவாரம் மத்திய கல்லூரியில் பதினைந்தாம் வயதில் நான் வாசித்த கட்டுரைதான்.

எனது வீடு வண்ணார்பண்ணையில் ஆதலால் மத்தியான உணவு கல்லூரிக்குப் பக்கத்தில் ஏதாவது ஒரு போசனசாலையில் சாப்பிடவேண்டியிருந்தது. நான் பிறநாட்டிற்குப் போவதற்கு முன் சைவச்சாப்பாடு மாத்திரம் தான் உட்கொண்டேன். இதற்காக ஒரு சைவச்சாப்பாட்டுக் கடையைத் தேட நேர்ந்தது. கடைசியில் ஒரு சைவ போசனசாலை கிடைத்தது. இது பாங்ஷால் வீதிக்கும் (Bankshall Street) கடற்கரை தெருவுக்கும் (Beach Road) நடுவே இருந்தது. இந்த இடத்திலே பல நெல், அரிசிக் கிட்டங்கிகள் இருந்தன. அதனால் அரிசி மூடைகள் ஏற்றுவது, இறக்குவது, கணக்குப் பார்ப்பது எல்லாம் என் கவனத்திற்கு வந்தன. சாப்பாட்டுக்குப்பிறகு அரைமணி நேரமிருந்ததால் இவற்றையெல்லாம் கவனிக்கக்கூடியதாயிருந்தது. கிட்டங்கி முதலாளிமாருடனும் கணக்குப் பிள்ளைகளுடனும் உரையாடிவந்தேன். இந்த அனுபவம் பிற்காலத்தில் அரசாங்க சேவையில் உணவுப் பொருட் களஞ்சியங்களை [Stores] மேற்பார்வை செய்வதற்கு உதவியது. கிட்டங்கிக் குந்திலிருந்து பார்த்தால் சில காலங்

களில் மண்டைதீவுக்கு அப்பால் கடலிலே பல உருக்கள் தெரியும். இது பற்றி விசாரித்த பொழுது இவையெல்லாம் றங்கூனிலிருந்து அரிசியை எங்கள் மாலுமிகளே கொண்டுவந்த சிறு கப்பல்கள் என்று தெரியவந்தது. கப்பல் ஓட்டிய தமிழனின் பெருமையை பத்து வயதிலே நான் உணர்ந்தேன்.

அக்காலத்துக் கல்லூரிகளில் மத்திய கல்லூரி பல விதத்திலும் ஒரு சிறந்த கல்லூரியாக விளங்கிற்று. நல்ல ஆசிரியர்கள் இருந்தார்கள். கல்வி புகட்டியதுடன் மட்டும் விடாமல் மாணவரின் எதிர் காலத்திற்கு அவர்கள் உற்சாகம் அளித்தார்கள்; பொது அறிவு புகட்டினுர்கள். நாங்களும் அடங்கமான மாணவர்களாக இருந்தோம். ஆசிரியர்களும் மாணவர்கள் மரியாதை கொடுக்கக்கூடிய முறையில் கல்வி கற்றுக்கொடுத்தார்கள்; வாழ்ந்தார்கள். பழைய கல்வி முறையையும் புதுக்கல்வி முறையையும் பார்க்குமிடத்து அக்காலத்தில் படித்துக்கொண்டு போகும் பொழுது பரீட்சைகள் வந்தன. அவை ஒரு விதத்தில் தேவையாயிருந்தன. ஆனுல் இப்பொழுதோ பரீட்சைக்காகவே மாணவர்கள் படிக்கிறுர்கள். இதில் பழையதிற்கும் புதியதிற்கும் ஒரு இடைவெளியிருக்கிறது. இதை எதுவிதத்திலும் நிரப்பவேண்டும். பரீட்சை மோகத்தோடு சிறிதாவது சிந்தனையும் சேர்ந்தால் எங்கள் தலைசிறந்த பலமாகிய மூளை வலிமையைப் பேணிக் கொள்ளலாம்; வளர்ச்சியடைய வைக்கலாம்.

அத்தியாயம் 16

# புத்தளத்தில் இரு ஆண்டுகள்! கஷ்டமான நிலைமைகளிலும் மக்களுக்கு பணியாற்றலாம்

1942ம் ஆண்டு பிற்பகுதியில் புத்தளத்திற்கு அரசாங்க அதிபரின் கந்தோர் உதவியாளராக [Office Assistant] கடமையாற்றச் சென்றேன். அக்காலத்தில் பத்தள மாவட்டத்திற்கு ஐந்து பிரிவுகள் இருந்தன. புத்தளம் பற்று, கல்பிட்டி என்று இரண்டு தமிழ் பேசும் பகுதிகள், தெமள்ஹைத்பத்து (தமிழ் எழுபகுதிகள் என்ற அர்த்தம்) கண்டிச் சிங்களவர் பகுதியும், வேறு சிங்களப் பகுதிகள் இரண்டும் (பிரிகல் கோறலே வடக்கு, தெற்கு) முனேஸ்வரம் பிரிகல் கோறலே வடபகுதிக்கு சேர்ந்தது. உடப்பு எனும் தமிழ் பேசும் பெரிய கிராமமும் இப்பகுதிக்குள் அடங்கும். தலவிலு என்னும் கத்தோலிக்கத் தலம் கல்பிட்டிக்குச் சேரும்.

என்னை வீட்டில் வந்து முதலில் கண்டவர் எனது நண்பர் நயினுமரிக்கார் (உப நிதி அமைச்சர்) அவர்களின் தந்தை ஜனுப் நயினு மரிக்கார் அவர்கள். என்னுடன் நயினுமரிக்கார் கொழும்பிலும் கேம்பிறிஜ்சிலும் படித்தவர். மகனின் சிநேகிதன் என்ற முறையில் தந்தை என்னை அடிக்கடி சந்திப்பார். ஒரு முறை அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது நான் ஏதோ சொன்னதற்கு இவர் ''ஆம் ஆம் எங்களுடைய பாட்டியாரும் இப்படித்தான் சொன்னுர்'' என்ருர். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்னவென்று நான் வினவியபோது தாம் ஔவைப்பிராட்டி

யாரைப் பற்றித் தான் குறிப்பிட்டதாகக் கூறினர். இவரது இல்லத்திற்கும் தமையனர் [அவரை ஆங்கிலேய அரசாங்கம் Heacl Moorman என்றழைத்தார்கள்] இல்லத்திற்கும் நானும் என் மனைவியும் போவது வழக்கம். எங்கள் வீடுகளில் நடக்கும்முறைப் படியே அங்கும் எல்லாம் நடந்தன. சமயத்தில் வித்தியாசமே தவிர வேறு ஒரு விதத்திலும் அவர்கள் வேறு மக்கள் என்ற எண்ணம் எங்கள் மனதில் எழுந்ததில்லை.

கச்சேரிக்கடமைகள் கவர்ச்சியாக இருந்தது. அரசாங்க அதிபர் ஒரு ஆங்கிலேயர். அவருக்கு உட்கார்ந்திருந்து வேலை செய்ய விருப்பமில்லை. எந்நேரமும் "சேர்க்கிட்" என்று சொல்லி மாவட்டம் முழுவதும் மோட்டார் வண்டியில் ஓடித்திரிவார். இது ஓரளவில் எனக்கு வசதியாகவிருந்தது. ஏனென்றல் எல்லா கந்தோர் வேலையையும் நான் நன்கு பழகிக் கொண்டேன். கச்சேரியில் வேலைசெய்யும் சொற்பநாட்களில் பின்னேர வேலை முடிய ஒருமணித்தியாலம் முன்னர் அதிபர் வீடு போய்விடுவார். போகும் போது எனது அறையைத் தாண்டிச் செல்ல வேண்டும். அப்பொழுது எனது மேசையைப் பார்த்து இப்படித்தான் துரிதமாக வேலை செய்ய வேண்டும்; மேசையில் அதிகம் கோப்புகள் இல்லையென்று பாராட்டுவதுடன் எனக்கு முந்தியவரின் மேசையில் கடுதாசிகள் குவிந்து தலை மட்டத்திலிருக்குமென்றும் கூறி எனது சுறுசுறுப்பை மெச்சுவார்.

அரசாங்க அதிபர் எனக்குக் கச்சேரிக்கு வெளியே போக அதிக சந்தர்ப்பம் கொடுக்காததால் புத்தளத்துக்குப் பத்து மைல்களுக்குள், பின்னேரங்களில் கிராமங்களைப் பார்வையிட்டு மக்கள் தேவைகளைக்கேட்டுப் பூர்த்திசெய்வேன். நான் உப்பளங்களையும் மேற்பார்வையிடுவதால் அங்கே வேலை செய்வோரின் தேவைகளை இயலுமளவு பூர்த்திசெய்வேன். உப்பள வேலை செய்வோருக்கும் மற்றவர்களுக்கும் புத்தளத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் கொழும்பு தெரு அருகில் தில்லையடி என்ற சிறு கிராமத்தை விசாலப்படுத்தினேன். தேவையான காணிகளைக் கொடுத்து கிணறு வெட்டப் பணஉதவியும் கொடுத்து பன்னிரண்டு குடும்பங்களைக் குடியிருத்தினேன். ஒருவரின் உதவியுமின்றி இளம் வயதில் நான் செய்த வேலையைக் கேள்விப்பட்டு பிரதம செயலாளர் மிகவும் சந்தோஷப்பட்டார். இன்றும் தில்லையடி சிறப்பாகவிருக்கின்றது. பிற்காலத்தில் ஊவா மாகாணத்திலும், வன்னியிலும் ஆயிரமாயிரம் ஏக்கர் காணிகளை மக்களுக்குக் குடியிருப்பதற்கும் விவசாயத்திற்கும் கொடுப்பதற்கு இது ஒரு தொடக்கமாயிருந்தது.

## மனப்பான்மை மாறிவிட்டது

ஒருமுறை தெமலஹத் பத்துவில் மாட்டுவண்டியில் அரசாங்கத்திற்காக குரக்கன் வாங்க ஒரு காட்டுப்பகுதிக்கு போகும் பொழுது ஒரு துவிச்சக்கர வண்டியில் ஒரு இளைஞன் உமலில் ஏதோ கட்டிக் கொண்டு வந்தான். விதானையாரை இவ்விளைஞன் என்ன செய்கிறுன் என்று கேட்டேன், அதற்கு விதானையார் ''இவன் ஒரு நாடார் பையன், இந்தக் கிராமங்களில் போத்தல்கள் வாங்கி சேகரித்து கொழும்புக்கு அனுப்புவான். இவன் போல் பல நாடார் இளைஞர்கள், இப்படிச் செய்கிறுர்கள். எங்களால் இப்படிப்பட்ட வேலை செய்யமுடியாது. அவன் செய்கிறுன். செய்யட்டும்'' என்றுர், இருபது ஆண்டுகளுக்குப்பின் புள்ளி விபர அதிபராக கொழும்பில் கடமையாற்றும் பொழுது இக் கிராமத்திற்கு ஜீப் வண்டியில் சென்றேன். அப்பொழுது பழைய விதானையாரின் மகன் புதுவிதானையார். அப்பொழுதும் வழியில் போத்தல்களோடு ஒரு நாடார் பையனைச் சந்தித்தோம். எனக்கு ஒன்றும் தெரியாதுபோல் புதுவிதானையாரை இவன் என்ன செய்கிறுன் என்று கேட்டேன். அதற்கு விதானையார் ''இவன் போல் ஆட்கள் எங்களை பிழைக்கவிடாமல் எங்கள் வயிற்றில் அடிக்கிறுர்கள்'' என்றுர். இருபது ஆண்டுகளில் இப்பகுதி மக்களின் மனப்பான்மை மாறுபட்டதை இது எனக்கு எடுத்துக்காட்டியது.

## காரியாதிகாரி கூறிய கதை

கல்பிட்டியில் முதலியார் இளைப்பாறி; புதிய முறையின் படி காரியாதிகாரி (D. R. O.) நியமிக்கப்பட்டார். ஒரு முறை காரியாதிகாரி பழைய முதலியாரைப் பற்றி ஒரு கதை சொன்ஞர். மாசத்திற்கு ஒருமுறையாவது விதானைமார் முதலியாரைச் சந்திக்கவேண்டும் கல்பிட்டியில் சந்திக்கும்பொழுது முதலியாருக்கு ஏதாவது கொண்டுவந்து கொடுப்பார்கள். இப்பொருள்களை விற்பதற்கு முதலியார் கல்பிட்டி மார்க்கெட்டில் ஒரு சிறு கடை வைத்திருந்தார். அநேகமாக ஒரு விதானையாராவது ஒரு வாழைக்குலை அன்பளிப்பார், உடனே வாழைக்குலை முதலியார் வீட்டுப் பிற்பக்கத்தால் கடைக்குப் போய்விடும், யாரும் ஒரு விதானையார் வெறுங்கையுடன் வந்தால் முதலியார் ''என்ன வெறுங்கையோடயாய் வந்தாய் போய்சந்தையில் ஒரு வாழைக்குலை கொண்டுவா'' என உத்தரவிடுவார். முதலியாரின் கடைக்குப்போனல் முதலியாரின் பையன் விலையை உயர்த்தி விடுவான். என்ன செய்வது முதலியார் ஆசைப்படுகிறுரென்று நினைத்துக்

கொண்டு விதானேயார் வாங்கி வந்து முதலியாரிடம் கொடுப்பார். பின்பும் வீட்டின் பிற்பக்கத்தால் வாழைக்குலை கடைக்குப் போய்விடும் இப்படி இரண்டு மூன்று தரம் வாழைக்குலை முதலியார் வீட்டுக்கும் கடைக்குமிடையே கொண்டு செல்லப்பட்டு கடைசியில் உண்மையாக விலைப்படும்.

*ஒரு நிபுணர்*

நான் புத்தளம் கச்சேரியில் ஆறுமாதம் கடமையாற்றியதும் அரசாங்க அதிபர் மாறிப்போக புது அதிபர் (டேவிட்சன்) வந்தார். இவர், தானும் கடுமையாக உழைப்பார். மற்றவர்களையும் கடுமையாக வேலைசெய்விப்பார், வெளிவேலை அவருக்கு அவ்வளவு விருப்பமில்லை இதனுல் எனக்கு மாவட்டத்தைச் சுற்றிப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் கச்சேரி வேலையில் ஒரு நிபுணன், என்னை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு லிகிதர் மேசையிலிருக்கும் கடுதாசிகளை அரை மணி பார்த்து அவர்கள் வேலைகளை எல்லாம் பழகச் சொன்னுர். இதன் நன்மையை நன்முக உணர்ந்தேன்.

ஒருநாள் காலை நான் கச்சேரிக்கு போகும்பொழுது அரிசி மொத்த வியாபாரிகள் கச்சேரியிலிருந்து வெளிவருவதைக் கண்டேன். ஏன் என்று கேட்க "உணவுக் கட்டுப்பாட்டு வேலைபார்க்கும் லிகிதர் லீவிலிருப்பதால் எங்களுக்கு இன்று அரசாங்க கிட்டங்கியிலிருந்து அரிசிக்கு உத்தரவு கிடைக்கமாட்டாது; இதனுல் இன்று போய் நாளைவருவோம்" என்முர்கள். "மக்களின் உணவு விடயத்தில் நாம் இப்படி நடந்து கொள்ளக்கூடாது. வாருங்கள் நானே எல்லாம் எழுதித்தருகிறேன்" என்று சொன்னேன். ஏற்கனவே இந்த வேலையையும் நான் கற்றிருந்தபடியால் செய்யக்கூடியதாயிருந்தது. இந்த சம்பவத்தின்பின் ஒரு லிகிதரின் வேலையை இன்னுமொரு லிகிதர் தெரிந்திருக்க வேண்டுமென்று உத்தரவிட்டேன். ஒரு தாபனமோ ஒரு கச்சேரியோ ஒருவரில் தங்கியிருக்கக்கூடாதென்று அதிபர் அடிக்கடி சொல்லுவார்.

அக்காலத்தில் இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தது. உணவுக்குத் தட்டுப்பாடு. கூப்பனுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு கொத்து அரிசிதான். எவ்வளவு கோதுமை மா கொடுத்தாலும் மக்கள் அக்காலத்தில்கூட அரிசியைத்தான் விரும்புவார்கள். நெல்வயல் உள்ளவர்களுக்கு அவர்கள் குடும்பத்திற்கு ஒருவருக்கு ஒருவாரத்திற்கு இரண்டு கொத்து அரிசியின்படி நெல் வைத்துக்

கொள்ளச் சொல்லிவிட்டு விதை நெல்லுக்கும் ஒரு கணக்குப் போட்டு, மிகுதியை அரசாங்கம் கட்டாயமாக வாங்கியது. இதில் எப்பொழுதும் விவசாயிகள் விளைவை குறைவாகக்கூறி அரசாங் கத்திற்கும் ஏதோ விற்றுவிட்டு மிகுதி நெல்லை கள்ள மார்க் கெட்டில் கூடிய விலைக்கு விற்பார்கள். கூப்பன் அரிசியுடன் சமா ளிக்க முடியாதோர் கள்ள மார்க்கெட்டில் வாங்கினார்கள். எனது வீட்டிலும் கஷ்டம். எங்கள் குடும்பம் மரவள்ளி கோதுமை மாவு டன் சமாளித்தாலும் வீட்டு வேலைக்கு உதவிக்கிருப்போர் சோறு கொடுக்காவிட்டால் விட்டுவிட்டுப்போகிறோம் என்று கூறுவார் கள். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளில் நானும் ஒருவன். ஆகை யால் கள்ள மார்க்கெட்டில் வாங்குவதைப்பற்றி யோசிக்கவே இடமில்லை. வேறுவழியில்லாமல் ஒரு வயலைக் குத்தகைக்கெடுத்து ஒருவரின் உதவியால் நெல் பயிரிட்டு அதில் வந்த நெல்லால் உணவுக் கஷ்டத்தை நிவர்த்தி செய்தேன்.

அக்காலத்தில் புத்தளத்தில் மின்சாரத்தை காலையில் ஒரு மணி நேரமும், இரவில் மூன்று மணிநேரமும் தான் நகரசபை வழங் கியது. இதனால் பகலில் மின்சார விசிறி பாவிக்க முடியாது. கச்சேரியில் அரசாங்க அதிபருக்கும் எனக்கும் பெரிய இரு விசிறி களும் அவற்றை கயிற்றால் கட்டி முன்னும் பின்னும் அசைப்ப தற்கு இரண்டு ஆட்களும் அரசாங்கம் கொடுத்தது. வெய்யில் காலத்தில் வெப்பம் அதிகம். அரசாங்க அதிபர்கள் ஆங்கிலேயர் கள். இந்த விசிறிமுறையை கையாண்டார்கள். எனக்கு இந்த முறையில் அவ்வளவு விருப்பமில்லை. எனக்கு கொடுத்த ஆளை ஒரு பியோனாக பாவித்தேன். அக்காலத்தில் புத்தளத்தில் குழாய்த் தண்ணீருமில்லை. கிணறும் இல்லை. குளிப்பதற்கும் வேறு தேவை களுக்கும் ஒவ்வொரு நாளும் தண்ணீர் விலைக்கு வாங்கினோம். இப் படி அக்காலத்தில் வாழ்க்கை அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. இருந்தும் செய்யவேண்டிய கடமைகளை செவ்வனே செய்தேன்.

இங்கே கடமையாற்றியதால் சில நல்ல அனுபவங்களைப் பெற்றேன். கஷ்டமான பட்டணத்தில் கடமையாற்ற வேண்டி வந்தால் அதனை வெறுக்காமல் அந்தப்பகுதியிலிருக்கும் மக்களைப் போல் நாங்கள் வாழப் பழக வேண்டுமென்பதை அறிந்தேன். பொதுமக்களுடன் பழகுதல், ஒத்துழைத்தல், அவர்கள் கஷ்டங் கள் என்னவென்று கேட்டு நிவர்த்தி செய்வது ஒரு புனித செயல் என்று அறிந்தேன். வெள்ளையர் ஆட்சியிலும் மக்களுக்குச் சேவை செய்யலாம். அவர்களில் பலர், பொது மக்களுக்காகப் பாடுபட் டார்கள். அயராத உழைப்புக்கு வேறொன்றும் நிகரில்லையென்றும் அறிந்தேன். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்றபடி மாறும் சூழ்நிலைகளில் செய்யும் கருமங்களைச் சமாளித்து வாழ்க் கையை முன்னேற்றலாம்.

அத்தியாயம் 17

# தெருவீதிகளில் நம் இளம் பெண்களின் பாதுகாப்பு

பல ஆண்டுகளுக்கு முன் எனது நண்பன் குருநாகலே அரசாங்க அதிபரின் பிறந்ததினம் அந்த நன்நாளில் அவர் வாசஸ்தலத்தில் ஒரு மத்தியான விருந்து நடந்தது. விருந்துக்கு முன் பலர் கூடி பேசிக்கொண்டிருக்கும்பொழுது அக்காலத்து பிரதமர் சேர் ஜோன். கொத்தலாவலே வந்து சேர்ந்தார். வழக்கம்போல் பல கதைகள் சொல்லி எல்லோரையும் மகிழ்வித்தார். அத்தருணத்தில் ஒரு அதிகாரி ஏதோ எங்களுடைய பெரிய பண்பென்று (பழைய) பெருமைகளை பேசத்தொடங்கினுர். சேர் ஜோன் கொத்தலாவலே அவர் கதையை நிற்பாட்டித் தனது அபிப்பிராயத்தை கூறினுர். ''எந்தநாட்டிலே ஒரு இளம் பெண் வீதியில் இரவில் தனியே பயமில்லாமல் போகமுடியுமோ அந்த நாடு தான் பண்புள்ள நாடு. இப்படிப் பார்க்கும்போது, எங்கள் நாடு பண்புள்ளதா'' வென்று கேட்டார். ஒரே மௌனம். ஒருவரும் வாய் திறக்கவில்லே. இப்பொழுது மறைந்த பிரதமர் இருப்பாராகின் தன்னுடைய கூற்றை திருத்தி ''இரவிலும் சரி. பகலிலும் சரி வீதியிலும் சரி, வீட்டிலும் சரி'' என்று கூறியிருக்கக் கூடும்.

சற்று எங்களேப்பற்றி நாங்களே சிந்திப்போம். பல மாதங்களுக்கு முன் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு கூட்டத்தில் இளம் பெண் ஒருவர் தான் தன் தொழில் சமபந்தமாக அதிகம் பஸ் வண்டியில் பிரயாணம் செய்வதென்றும், இளேஞர்கள் வீதியிலும்

சரி பஸ்வண்டியிலும் சரி நடக்கிறமுறை சகிக்கக்கூடியதாகவில்லை யென்று கூறினார். சென்றவாரம் எனக்கு மருமகள் முறையான இளம்பெண் தான் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே பஸ் வண்டியில் பிரயாணம் செய்வதானால் பகல் வண்டியில் முதலாம் அல்லது இரண்டாம் ஆசனத்தில் மாத்திரம் பயணம் செய்வதாகச் சொன்னார். இரவு பஸ் வண்டியிலும் முதலாவது இரண்டாவது தவிர்ந்த மற்றைய ஆசனங்களில் பிரயாணம் செய்தால் அருகில் ஒரு இளைஞன் இருந்துவிட்டால் பலவிதமான சேட்டை விடுவானென்று கவலையுடன் கூறினார்.

## இராமாயணத்தில்

இதையெல்லாம் எங்கிருந்து கற்றார்கள், எங்கிருந்து பழகினார்கள் எனத் தெரியவில்லை. எங்கள் பழைய பண்பாட்டைப் பார்த்தால் இராமயணத்தில் இராவணன் அரண்மனையில் இரவில் அனுமான் சீதையைத் தேடியது ஞாபகத்திற்கு வருகிறது. தேடுமுன் அனுமான் கடவுளை வணங்கி தான் செய்யப்போகும் முறையில்லாச்செயலை மன்னிக்கும்படி கேட்கிறார். பெண்கள் நித்திரை செய்யுமிடத்திற்கு கட்டாயமாக ஆண்கள் போகப்படாதென்று தெரிந்தும் சீதாபிராட்டியாரை தேடுவதற்காகவேதான் இப்படி அரண்மனை அந்தப்புரத்தை தேடுவதென்றும் புலம்பி கடவுளை மன்னிப்புக் கேட்டார், ஆஞ்சநேயர். இதுபோல் ஓர் இரவு அர்ச்சுனன் தற்செயலாக அரண்மனைப் பூங்காவிற்கு செல்ல நேரிட்டது அப்பொழுது தனது தமயனாரான தர்மபுத்திரன் அந்நியோன்யமாக மனைவி திரௌபதியுடன் இருப்பதை தற்செயலாக காண நேரிட்டது. இதை ஒரு தகாதகாரியமாக அரிச்சுனன் கருதினான். இந்த பாவத்தைத் தீர்க்க யாத்திரை சென்றானென்று மகாபாரதம் கூறுகிறது. இன்னுமொரு உதாரணமாக மஹாராஷ்டிர மன்னன் சிவாஜியை எடுத்துக்கொள்ளுவோம். ஆக்ரா பட்டினத்திலிருந்து மொகலாயப் படைவீரர்கள்ராஜகுடும்ப இளம் பெண்ணை பல்லக்கில் ஏற்றிக் கொண்டு டில்லிபோய்க் கொண்டிருக்கும் பொழுது சிவாஜியின் துருப்புக்கள் வழி மறித்து மொகலாயரோடு சண்டையிட்டு வென்று பல்லக்குள் பார்த்தால் ஓர் அழகிய இளம்பெண் இருக்கின்றாள். எங்கள் மன்னனுக்கு உகந்தவள் என நினைத்து சிவாஜியிடம் கொண்டு சென்றார்கள். மன்னன் பல்லக்கை திரைநீக்கிப் பார்த்தான்; பதினாறு வயதுள்ள அழகிய பெண் இருந்ததைக் கண்டான். ஏற இறங்கப் பார்த்து விட்டு இவள் எனக்குத் தாயாயிருந்தால் நான் எவ்வளவு அழகுள்ளவனாயிருந்திருப்பேனென கூறி அவளைப் போதிய பாதுகாப்புடன் டில்லிக்கு மஹாராஷ்ட்டிர பெண்கள் சிலரது துணையுடன்

அனுப்பி வைத்தான். எங்கள் பழைய பண்புக்கு வேறு சான்று வேண்டுமா? சிவாஜியின் வீரம் மறைந்தாலும் இதுபோன்ற அவனது பண்புகள் அழிவதில்லை.

## காவற்காரனாக மாற வேண்டும்

இந்தப் பண்புப் பரம்பரையில் வந்த மக்கள் தான் நாம். வீதியில் ஒரு இளம்பெண்ணைக் கண்டால் எந்த ஆடவனும் வயோதிபனாயிருந்தாலென்ன வாலிபனாயிருந்தாலென்ன அவளுக்கு ஒரு காவற்காரனாக மாறவேண்டும். துணையில்லாது செல்லும் பெண் என்ற எண்ணம் மனதில் உதிக்க வேண்டும். தனது தாய் சகோதரி மகள் என்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். ஒரு இளைஞன் தெருவிலே போகும் இளம் பெண்ணுக்கு தகாதது கூறிவிட்டு வீடு போகும் பொழுது தனது சகோதரிக்கு இப்படி நடந்தால் ''வா தங்கச்சி அந்தத் துட்டனைக் காட்டு அவனை ஒரு கை பார்க்கிறேன்'' என்பான். அதாவது தனது சகோதரிக்கு அடாதது மற்றவன் சகோதரிக்கு பொருந்துமா? இதைத்தான் நாம் பார்க்க வேண்டும். எங்களுக்கு ஒரு கோட்பாடு மற்றவர்களுக்கு வேறு கோட்பாடு அல்ல.

## யப்பான் வழிகாட்டுகிறது

தற்காலத்தில் யப்பான் இந்த விஷயத்தில் உலகத்திற்கு ஒரு வழிகாட்டியாயிருக்கிறது. எனது இந்திய நண்பன் சில ஆண்டுகளுக்கு முன் டோக்கியோவில் குடும்பத்துடன் சீவித்தார். அவரது மகள் அவ்விடம் ஒரு பல்கலைக்கழகத்தில் படித்தார். பகல் நேரம் யப்பானிய மொழியிலும் இரவில் ஆங்கிலத்திலும் விரிவுரை நடைபெற்றது. இதனால் இந்த இளம்பெண் இரவில்தான் விரிவுரைக்கு போவார். வீடுதிரும்ப நள்ளிரவு செல்லும். பஸ் வண்டியால் இறங்கி ஒரு கூப்பிடு தூரம் நடக்க வேண்டும். ஒரு நாளாவது தனக்கு ஒன்றும் நேரவில்லையென்றும் பெண்கள் பயமில்லாமல் டோக்கியோ வீதிகளில் பகலோ இரவோ போகலாமென்றார். இதல்லவோ மனிதப்பண்பு. ஏன் எங்களால் இப்படி சீவிக்க முடியவில்லை? பண்பு பண்பென்று மேடையில் பேசுகிறார்களே பெண்கள் தனியே வீதியில் பயமில்லாமல் செல்லமுடியாவிட்டால் பண்பின் அர்த்தமென்ன?

ஆண்கள் நல்ல முறையில் நடப்பார்களென எதிர்பார்த்துக் கொண்டு பெண்கள் சும்மா இருக்கக் கூடாது. தேவை வந்தால் தங்களைப் பாதுகாப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். கராத்தே போன்ற சில தற்காப்பு முறைகளைக் கற்கவேண்டும்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நடக்கப் பழக வேண்டும். சாதாரணமாக அடக்கமான பெண் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப காளியாக மாறலாம். இதற்கு சான்ருக இராமகிருஷ்ண பரமஹம்சரின் துணைவி சாரதா தேவி எப்படி ஒரு சந்தர்ப்பத்தில் நடந்து கொண்டார் என்று பார்ப்போம். சாதாரணமாக அவர்கள் ஒரு பரமசாது. எல்லோரும் அவரை அன்னையென்றே அழைத்தார்கள். ஒருமுறை அவர் தனியாகவிருக்கும் பொழுது ஒருவன் மூளை மாருட்டமோ அல்லது வேறு காரணமோ தெரியாது தகாத முறையில் அணுக அன்னையார் ஓடத் தொடங்கினர். இருந்தவீட்டை சுற்றிச் சுற்றி ஓடினர். ஆனல் தப்ப முடியாமல் போய்விடவே திரும்பி அவனைத் தாக்கி கீழே விழுத்திவிட்டார். அப்பொழுது அவரைப்பார்த்தால் பத்திரகாளி போல் காட்சியளித்தாராம். இது பெண்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும்.

பொறுப்புணர்ச்சியுடன் இளைஞர்கள் நடந்துகொண்டால் ஒரு விதமான பிரச்சனையும் இராது. ஒரளவில் பெற்றோரே இதற்குப் பொறுப்பு. இதனுல், ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளை வளர்க்கும் பொழுது பெற்ருேர் பிரயாசை ~~எடுத்து~~ நல்ல பழக்கங்களையும் ~~பழக்க~~ பொறுப்புணர்ச்சியையும் வேண்டும். இராமாயணம், மகாபாரதம் இளமையில் கற்றல் நல்லது. தந்தைக்கு நேரமில்லாவிட்டால் தாய் பாலர்களாக பிள்ளைகள் இருக்கும் பொழுது இந்த இருபெரும் காவியங்களிலிருந்து சிறு கதைகள் சொல்லிக் கொடுக்கவேண்டும். நான் எனது பிள்ளைகளுக்கு ஐந்து ஆறு வயதில் நித்திரைக்கு முன் ஒவ்வொரு இரவும் ஒரு கதை சொல்லிக்கொடுப்பது வழக்கம். இது நல்ல பலனை பிற்காலத்தில் கொடுக்கும் இப்படிப்பட்ட நல்ல கதைகளை சிறுவயதில் கேட்டால் மரியாதையுடன் இளம் பெண்களுடன் நடக்கக் கூடிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்கமுடியும் நல்ல இளைஞர் பலர் இருக்கிருர்கள். ஒரு சிலரே அடங்காதமுறையில் நடக்கிருர்கள். ஆனல் ஒரு சமுதாயத்தை கெடுக்க சிலரே போதும். இந்த சிலரை நாம் திருத்த வேண்டும். இளமைக்கு தக்க சிறு குறும்புத்தனம் இயற்கையே. ஆனல் வரம்பு மீறி நடப்பதை சமுதாயம் பொறுக்க முடியாது. எங்கள் மனச்சாட்சியில் எல்லா பெண்களுடனும் முக்கியமாக இளம் பெண்களுடன் முறையாக நடக்க ஒரு இடம் கொடுங்கள். மற்றைய சமூகங்கள் எங்களைச் சரியாக நடத்தவில்லையென்று சொல்லுமுன் நாங்கள் எங்கள் சமுதாயத்தில் சரியாக நடக்கிருேமா வென்று சிந்தியுங்கள்.

அத்தியாயம் **18**

# சேர் ஒலிவர்—பழகும் கலைபடித்த ஓர் தலைவர்

1951ம் ஆண்டு அத்தனகல தேர்தல் தொகுதியில் ஒரு பெரிய கூட்டம் நடந்தது. மறைந்த பிரதமர் பண்டாரநாயகா தலைமை வகித்தார். நான் அப்பொழுது மேல்மாகாணத்து மேலதிக அரசாங்க அதிபர். உணவு உற்பத்தியைப் பற்றி என்னைப் பேசக் கேட்டார்கள். நான் சிங்கள மொழியில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது புதிய உள்நாட்டு அமைச்சர் சேர் ஒலிவர் குணதிலகா மேடையில் வந்து உட்கார்ந்தார். நான் பேச்சு முடிந்து மேடையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். சேர் ஒலிவர் லண்டனில் இலங்கைத் தூதுவராய்க் கடமையாற்றி சமீபத்தில் நாடு திரும்பியிருந்தார். அவரை நான் முன்பு சந்தித்ததில்லை. ஆகையால் அவரைக் கூட்டம் முடிந்ததும் சந்திக்கலாமென எண்ணிக் கொண்டிருக்க சேர் ஒலிவரே என்பக்கம் வந்துகொண்டிருந்தார். இவர் என்ன செய்யப்போகிறுர் என்று சிந்திப்பதற்கு முன் என் தோளைத் தட்டி, "தூய சிங்களத்தில் சிறப்பாகப் பேசினீர்கள். உங்கள் சிறந்த நாட்டுச் சேவையைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன் கூட்டம் முடிய என்னுடன் பேசவாருங்கள்" என்ருர். இதுதான் எனது முதல் சந்திப்பு. இதன் பின்பு ஏதாவது கொழும்புக் கச்சேரியில் வேலையிருந்தால் தொலைபேசிமூலம் என்னுடன் தொடர்பு கொள்வார்.

1952ம் ஆண்டு தேர்தல் நடந்தது. புது அரசாங்கத்தில் சேர் ஒலிவர் உணவு விவசாய அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

உணவு உற்பத்திக்கு ஒருதனி இலாகா வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது. சேர் ஒலிவர் என்னை இந்தப் புது இலாகாவின் அதிபராகப் பொறுப்பேற்கும்படி சொன்னார். பதினெட்டு மாதம் சேர் ஒலிவருடன் சேர்ந்து பல செயல்களைச் செய்யக் கூடியதாயிருந்தது. அதோடு அரசியல் நிர்வாகத்தில் ஒரு வசிட்டர் போன்ற அமைச்சருடன் கடமையாற்ற வாய்ப்புக் கிடைத்தது. இதை நான் நன்கு பயன்படுத்தினேன்.

நான் பல அமைச்சர்களுடன் கடமையாற்றினேன். இலங்கையில் மாத்திரமல்ல; வெளிநாடுகளிலும். ஆனால் சேர் ஒலிவருக்கு நிகரானவர்கள் மிகக்குறைவு. அவருக்கு நிகர் அவரே.

இந்தப் பெரியாருக்கு இனவித்தியாசம் கிடையாது. இவரின் கீழிருந்த இலாகாவில் பல இன அதிகாரிகள் கடமைபுரிந்தனர். தமிழ் அதிகாரிகளின் சிறந்த அம்சங்களைப் பற்றிப் பலமுறை என்னுடன் அவர் உரையாடினார். "ஒரு அலுவலைத் தமிழ் அதிகாரியிடம் பாரம் கொடுத்தால் அநேகமாகத் தாம் அவரை இடை இடையே எப்படி அந்த விஷயம் முன்னேறுகிறது, என்று கேட்கத் தேவையில்லை. ஏனென்றால் பொறுப்புணர்ச்சியோடு, பூர்த்தியாகும்வரை தொடர்ந்து அந்த அலுவலில் கண்ணும் கருத்துமாகக் கடமையாற்றுவார்" என்று பெருமைப்படுவார். எந்தவிடயத்திலும் தன்னுடைய நோக்கத்தைத் தெளிவாய் அதிகாரிகளுக்குக் கூறிவைப்பதால் அடிக்கடி அவரைச் சந்தித்து ஆலோசனை கேட்கத் தேவையில்லை. ஒருமுறை ஒரு விடயத்தைப்பற்றி என்னுடன் பேசியபின் அதையிட்டு ஒரு கடிதம் தயார் செய்துகொண்டு வரும்படி கூறினார். அதன் பிரகாரம் கடிதத்தை அவருடைய கையெழுத்துக்குக் கொண்டு போனேன். கடிதத்தை வாசியாமல் கையெழுத்திடப் பார்த்தார். அப்பொழுது நான் அவரிடம், "தயவு செய்து வாசித்துப் பார்த்துக் கையெழுத்திடுங்கள்" என்றேன். அவர் சிரித்துவிட்டு "உங்களில் எனக்கு முழு நம்பிக்கை அதோடு நான் வாசிக்காமல் கையெழுத்திடுவதானால் நீங்கள் அதிக கவனம் செலுத்திக் கடிதங்களைத் தயார் செய்வீர்கள்" என்று வாசிக்காமலே கையெழுத்திட்டுவிட்டுக் கூறினார்.

## தமிழர் முன்னேறக் காரணமென்ன?

ஓர் அமைச்சருடன் நெருங்கிப் பழகவேண்டுமாயின் சுற்றுப் பிரயாணத்தில் (circuit) நல்ல சந்தர்ப்பங்கள் வரும். எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டு இரவு தங்குமிடத்தில் சிலமணி

நேரம் பேசிவிட்டுத்தான் நித்திரைக்குச் செல்லுவோம். அப்பொழுது அமைச்சருடன் நெருங்கிப் பழகலாம். சேர் ஒலிவருடன் பழகுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மிகவும் சிறந்த அறிவாளியாயிருந்தபடியால் சம்பாஷணைகள் எதிர் காலத்திற்குப் பயன்தரக்கூடியதாயிருந்தன. ஒருமுறை என்னை அவர், ''ஏன் தமிழ் மக்கள் சாதாரணமாக மற்ற இனங்களிலும் பார்க்க முன்னேறுகிறார்கள்?'' எனக் கேட்டார். அவர்கள் பிரயாசை எடுப்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம்; இதைவிட வேறேதும் இருக்கிறதா என்று கேட்டார். அதற்கு நான் ஆங்கிலத்தில், Ambition (குறிக்கோள்) என்று கூறி ஒரு உதாரணத்தையும் சுட்டிக்காட்டினேன். எனது இனத்தவர் ஒருவர் இடைக்காட்டில் விவசாயம் செய்கிறவர். நான் படித்த கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தைப்பற்றி நுணுக்கமாக விசாரித்தார். ஏன் என்று கேட்ட பொழுது, தனது மகன் ஒருவன் படிப்பில் கெட்டிக்காரன் என்றும் அவனைக் கேம்பிறிட்ஜ் அனுப்பவேண்டுமென்று ஆசைப்படுவதாகவும் கூறினார். ஒரு சாதாரண விவசாயி ஆசைப்படக்கூடிய விடயமல்ல; இருந்தும் அவருக்கு இந்த ஆசை வந்தது. இப்படிப்பட்ட சிந்தனை எங்கள் இனத்தின் சிறந்த அம்சம் என்று கூறினேன்.

### *நாய் வாலை நிமிர்த்தமுடியுமா?*

ஒருமுறை ஒரு உத்தியோகத்தர் எவ்வளவோ புத்திமதி கூறியும் திருந்தவில்லை. சேர் ஒலிவர் இதற்கு என்ன செய்யலாம் எனக் கேட்டார். நாய்வாலை நிமிர்த்த முடியாதென்றேன். அது என்னவென்று கேட்க, நான் கதையைச் சொன்னேன் ''ஒருவன் தன் குருவைப் பார்த்து எனக்கு எல்லாம் செய்யக்கூடிய தொன்றைத் தாருங்கள் எனக் கேட்டான். அதற்குக் குரு, ''அது ஒரு கஷ்டமில்லை. நான் ஒரு பிசாசு தருகிறேன். ஆனால் அதற்குத் தொடர்ந்து வேலை கொடுத்துக்கொண்டேயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னையே கொன்றுவிடும். முடியுமா?'' என்று கேட்டார். அது மிகவும் சுலபம் என்றான் சீடன். சொற்பவேளையில் பிசாசு தோன்றி அம்மனிதனிடம் என்ன செய்யவேண்டும் என்று கேட்டது. ஏதோ பல வேலைகளைச் செய்யும்படி அவன் ஆணையிட்டான். சொற்பநேரத்தில் முடித்துவிட்டு, வேறென்ன செய்யவேண்டும் என்று கேட்டது பிசாசு. வேறும் பல வேலைகளைக் கொடுத்துவிட்டுக் குருவிடம் ஓடிப்போய், 'நான் என்ன செய்ய; அது எல்லாவற்றையும் சட்டென்று செய்கிறதே' என்றான் அவன். குரு அவனை அங்கே நின்ற நாயின் வாலை நிமிர்த்தச் சொல்லிப் பிசாசிடம் கொடுக்குமாறு கூறினார். சீட

லும் அப்படியே செய்தான். கதையின்படி இன்னும் பிசாசுவாலை நிமிர்த்திக்கொண்டிருக்கிறது'' என்று சேர் ஒலிவருக்குக் கூறினேன். அவர் விழுந்து விழுந்து சிரித்தார். இதன்பின் மிகவும் மோசமான அதிகாரி ஒருவரைப்பற்றிப் பேசும்பொழுது ''இது நாய் வாலா அல்லது திருத்தக் கூடியதா.'' என்று அவரே சொல்லுவார்.

## பெருங்குணம்

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல கூட்டங்கள் நடந்தன. இதிலொன்றில் நடந்ததைக் கூறினுல் சேர் ஒலிவர் எவ்வளவு பரந்த மனமுள்ள மனிதர் என்பது நன்கு தெரியவரும். உணவு இறக்குமதியைக் குறைப்பதற்கு ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது ஒருவர் இறைச்சிக்கு ஆடு இறக்குமதியைக் குறைக்க வேண்டுமென்ருர். அந்நேரத்தில் வேருெரு அமைச்சர், ''நாங்கள் எல்லோரும் உள்ளூர் மாட்டிறைச்சி சாப்பிடுகிருேம். மற்ற இனங்களும் இதைப் பழக வேண்டும். அப்படியாளுல் இறக்குமதியை முற்ருக நிற்பாட்டலாம்.'' என்ருர்: சேர் ஒலிவர் இதற்கு அந்த அமைச்சரைப் பார்த்து, ''அப்படிச் சொல்லாதீர்கள். ஒரு இனத்திற்கோ, ஒரு சமயத்திற்கோ விருப்பமில்லாததை நாங்கள் ஒருபொழுதும் வற்புறுத்தப்படாது'' என்று தமது வழக்கமான புன்சிரிப்புடன் கூறி அந்த விடயத்தை அவ்விடத்தில் வாதத்திற்கு விடாமல் நிற பாட்டிவிட்டார்.

அக்காலத்தில் சுமார் 55 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். ஏதாவது முக்கியமான உணவு, விவசாய விடயங்களைப் பற்றி அவர்களுக்கு எழுதவேண்டியிருந்தால் பிரதிபோடாமல் 55 முறை தட்டெழுத்துச் செய்து தமது கையெழுத்துடன் கொண்டுவரும்படி கூறுவார். ஏனென்று வினவியதும் அவர், ''ஒரு கடிதத்தின் பிரதி (carbon copy) கிடைத்தால் எவரும் விடயத்திற்கு அவ்வளவு கவனம் செலுத்த மாட்டார்கள். அதனுல் ஒவ்வொருவருக்கும் தனிக் கடிதம் அனுப்பவேண்டும்'' என்று கூறினுர். இதில் எவ்வளவோ உண்மையுண்டு. ஒரு அமைச்சர் இதுபோன்ற விடயங்களிலும் தன் மனதைச் செலுத்தி அதிகாரிகளுக்கு வழிகாட்டுவது மிக மிக அரிது. இதுபோன்ற சில முறைகளே சேர் ஒலிவரை ஒரு சிறந்த நிர்வாகியாக்கியது இதற்கு 'ஒலிவர் முறை (Oliver Technique) என்றும் கூறலாம். இவற்றுள் சிலவற்றைக் கூறுகிறேன்.

*ஒலிவர் முறை*

காலி மாவட்டத்தில் விவசாய முன்னேற்றத்தைப் பற்றிய கூட்டத்திற்கு அமைச்சரும் நானும் போனோம். போகும் வழியில், எப்படி உணவுற்பத்தி காலி மாவட்டத்தில் என்று அமைச்சர் கேட்டார். ஏனைய காரிய அதிகாரிகள் (A. G. A) ஒத்துழைக்கிறார்கள். ஆனால் இருவர் அவ்வளவு கவனமெடுக்கிறார்களில்லை யென்று கூறினேன். சரி இவர்களை நான் வளைத்துத் தருகிறேன் என்றார் அமைச்சர். அந்த அதிகாரிகளை அமைச்சருக்குத் தெரியாததால் கூட்டம் முடிந்ததும் இந்த இருவரையும் தனியே கூப்பிட்டு என்னைப் பேசிக்கொண்டிருக்கச் சொன்னார். அப்பொழுது தனக்கு இன்னாரெனத் தெரிந்து விடுமென்றார். அப்படியே ஏதோ சாட்டைச் சொல்லி இந்த இருவரையும் ஒருபுறம் நான் கூட்டிக்கொண்டு ஏதோ முக்கியமான விடயம் பேசுவதுபோல் நடந்தேன். இதைக் கண்டதும் அமைச்சர் எங்கள் பக்கம் வந்து, இரண்டு அதிகாரிகளின் நடுவில் நுழைந்து இருவரின் தோள்களிலும் தன் கைகளைப் போட்டுக்கொண்டு, 'உங்கள் இருவரையும் தான் இம் மாவட்ட உணவுப் பெருக்கத்திற்கு நம்பியிருக்கிறேன்'' என்றார். அதிகாரிகளுக்கோ சந்தோஷம் தாங்கவில்லை. அமைச்சர் தோளில் கைபோட்டு அவர்களின் உதவியை நம்பியிருப்பதாகக் கூறியதும் அவர்கள் அமைச்சரிடம் சரண் அடைந்தார்கள் இதன் பின் இவர்களின் முழு ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைத்தது. இது வெல்லாம்ஒரு 'ஒலிவர் முறை'.

இதுபோல் புத்தளம் கச்சேரியில் ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது ஒரு முக்கிய விவசாயி அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளை மிகவும் கண்டித்து இடையிடையே பேசினார். அமைச்சருக்குப் பின்னால் இப்படிப்பட்ட கூட்டங்களில் நான் உட்கார்ந்திருப்பேன். அமைச்சர் மிகவும் மெதுவாக என்னிடம் விவசாயியின் பெயரைக் கேட்டார். நான் ஒரு சிறு கடுதாசியில் பெயரைக் குறித்துக் கொடுத்தேன். உடனே ஒன்றும் செய்யாமல் சில நிமிடங்களுக்குப் பின் விவசாயியை அவர் பெயரால் குறிப்பிட்டு பல விடயங்களைப் பேசினார். அமைச்சருக்கு தன்னை இன்னாரெனத் தெரிந்து விட்டதே என்ற மகிழ்ச்சியால் இந்த விவசாயி அரசாங்கத்திற்குச் சாதகமாகப் பேசத் தொடங்கினார். இதுவும் ஒரு ஒலிவர் முறை. இன்னுமொருமுறை அமைச்சு அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வந்தவர்களில் ஒருவர் நீர்ப்பாசன இலாகா அதிபர். சேர் ஒலிவருச்கு இவரைத் தெரியாது. ஏதோ விவாதித்துக்கொண்டிருக்கும் பொழுது அமைச்சர் கூறியதற்கு இந்த அதிபர் இணங்கவில்லைப்போல்

எனக்குத் தோன்றிற்று. இவர் சாதாரண பொறியியலாளரென்று நினைத்தே அமைச்சர் பேசினார். இந்த அதிகாரி முரட்டுச் சுபாவமுள்ளவர். ஏதாவது தகராறு வந்துவிடுமென்று பயந்து நான் ஒரு சிறு கடதாசியில் ''உங்களுக்கு முன் உட்கார்ந்திருப்பவர் நீர்ப்பாசன இலாகா அதிபர். பெயர் ......'' என்று குறித்து ஏதோ வேறு விடயமாகக் கடுதாசி கொடுப்பது போல் அமைச்சரிடம் கொடுத்தேன். உடனே ஒன்றும் செய்யாமல் சில நிமிடங்களுக்குப்பின் அந்த இலாகா அதிபரின் பெயரைச் சொல்லி ''நீங்கள் இந்த இலாகாவிற்கு அதிபராயிருக்கும் வரைக்கும் எங்களுக்கு உதவி ஒத்தாசை கிடைக்கும்'' என்று சேர் ஒலிவர் மிகவும் கவர்ச்சியாகக் கூறினார். அதிகாரி மகிழ்ச்சி வெள்ளத்தில் ''ஆம் சேர்'' என்றார். கூட்டம் முடிந்தது எல்லோரும் போய்விட்டார்கள். அமைச்சரும் நானும் தனியே இருந்தோம். அப்பொழுது அமைச்சர் நான் செய்த காரியத்தை மெச்சி இன்று ஒரு முரட்டு அதிகாரியையும் எங்கள் பக்கத்துக்கு வளைத்துவிட்டோமென்றார்.

## சண்முகம் சொன்ன சோதிடம் பலித்தது

உணவு விவசாய அமைச்சராய்ப் பதவியேற்றுச் சில மாதங்களில் ஒருநாள் சேர் ஒலிவர், இப்பதவியில் பல ஆண்டுகள் சேவை செய்வதாயிருந்தால் இலங்கை முழுவதும் பிரயாணம் செய்து பல விவசாயிகளைச் சந்தித்துப் பலவிடயங்களை அறிந்து சிறப்பாகக் கடமையாற்றலாம்; ஆனால் குறுகிய காலம்தான் இப்பதவியிலிருப்பதாயின் இது தேவையில்லையென்று கூறி என்ன விதமாக எதிர்காலத்தை அறியலாமென வினவினார். அதற்கு நான், எனக்கு தபால் அதிபர் ஒருவர் நண்பராக இருப்பதாகவும் அவருடைய சோதிட பலனில் எனக்கு நம்பிக்கையுண்டென்றும் கூறினேன் பிறந்தநேரம், இடம் குறித்துக் கொடுத்தார். இவர் திருமலையில் தந்தையார் தபால் அதிபராயிருக்கும் பொழுது பிறந்தாரென்று அறிய வந்தது. ஒரு குறிப்பிட்ட தினம் அமைச்சர் வாசஸ்தலத்திற்கு எனது நண்பரை (சமீபத்தில் மறைந்த சுன்னாகம் சண்முகம்) அழைத்துச்சென்றேன். நான் வெளியே நாற்காலியில் உட்காரப்போக அமைச்சர் என்னையும் உள்ளே அழைத்துப் பலன் சொல்லும் பொழுது கேட்கச் சொன்னார். இருக்கும் பதவியில் ஒரு ஆண்டு அல்லது 18 மாதம் தான் கடமையாற்றுவாரென்றும் பிறகு இன்னும் முக்கிய மந்திரிப் பதவி வகிப்பாரென்றும் அதற்குப் பிறகு ஒரு இலங்கையரும் இவ்வளவு காலமும் வகிக்காத பெரிய பதவியிலிருப்பாரென்றும் நண்பன் சண்முகம் கூறினார். அப்பொழுது நான் கேட்டேன், இப்பதவி

தேசாதிபதியாயிருக்குமோவென்று. சேர் ஒலிவர் இப்படி ஏதாவது கூறினல் குறும்புத்தனத்தை நிற்பாட்டென்று கூறி ஒரு விரலைக் காட்டுவார். ஆனல் இம்முறை பேசாமலிருந்தார். ஆகையால் தேசாதிபதி பதவி அவர் மனதிலிருந்திருக்க வேண்டும். நண்பர் சண்முகம் கூறியது போல் 8 மாதத்திற்குப் பிறகு நிதிஅமைச்சராகவும் பிறகு ஒரு ஆண்டின் பின் மகாதேசாதிபதியாகவும் ஆனர் ஒலிவர். தேசாதிபதி ஆகியதும் எனக்குத் தொலைபேசியில் சண்முகம் சொன்னது சரியாகிவிட்டதென்றும் தன் சார்பில் அவருக்கு நன்றி கூறும்படியும் கோரினர். இது போன்ற செயல்களால்தான் இவர் பல அதிகாரிகளின் மனதையும் கொள்ளை கொண்டார். இதன் விளைவாக அதிகாரிகள் இவருக்கு விசுவாசமாய் முழு ஒத்துழைப்பைக் கொடுத்தார்கள். இதனல் இன்னும் பெரியவரானர்.

## 58 கலவரத்தில்

உணவு விவசாய அமைச்சர் பதவியிலிருந்து மாறிய பிறகு சேர் ஒலிவருடன் நெருங்கிய தொடர்பு மீண்டுமொருமுறை 1958 ம் ஆண்டு இனக்கலவரத்துடன் ஆரம்பமாயிற்று. அப்பொழுது அவர் மகா தேசாதிபதி. தமது பிரத்தியேக தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து வெள்ளவத்தையில் ஏதாவது ஆபத்திருந்தால் தன்னுடன் நேரடித் தொடர்பு கொள்ளும்படி சொன்னர். அதோடு ஒவ்வொரு காலையும் ஐந்து மணிக்கு வெள்ளவத்தையில் நடக்கிறதெல்லாவற்றையும் கூறுமாறு கேட்டிருந்தார். அந்த நாட்களில் 41 வது ஒழுங்கையில் சில காடையர்கள் ஒரு வீட்டைத் தாக்க வீட்டுக்காரர் என்னிடன் அறிவிக்க நான் உடனே தொலைபேசியில் சேர் ஒலிவருக்கு முறையிட்டேன். என்னைத் தொலைபேசியை விடாமல் இரண்டு நிமிடம் பொறுக்கச் சொல்லிவிட்டு வேறு தொலைபேசியில் அவர் ஒரு தளபதியுடன் பேசுவது எனக்குக் கேட்கக் கூடியதாயிருந்தது. இந்நிலையில் 42வது ஒழுங்கையிலுள்ள எங்கள் வீட்டிற்கு துருப்புகள் 41 வது ஒழுங்கைக்கு வரும் சத்தம் கேட்டது. சேர் ஒலிவர் தொலைபேசிக்கு வந்து ‘இப்போது துருப்புக்கள் வந்த சத்தம் உங்களுக்குக் கேட்டிருக்குமே. எனவே எல்லாம் சரியா’ என்ருர். கலவரம் முடிந்ததும் ஒருநாள் இராணிமாளிகைக்கு அழைத்துக் கலவரத்தைப்பற்றிப் பேசினர். அவர் சொன்னதைக் கேட்டதும் இவர் அறிவில் ஒரு வசிட்டரா என்று யோசிக்க நேர்ந்தது.

## விருந்தில் நன்றி தெரிவித்தார்

உணவு உற்பத்தி அதிபர் வேலையால் மாறி சனத்தொகைப் புள்ளிவிபர அதிபராகக் கடமையாற்றினேன். இடையிடையே தனக்குத் தேவையான புள்ளிவிபரங்களுக்குத் தேசாதிபதி நேரே தொலைபேசியில் என்னிடம் கேட்பார். ஒருமுறை தொலைபேசியில் மத்தியானம் பன்னிரண்டு மணியளவில் கூப்பிட்டுதான் நாலு மணிக்கு ஒரு கூட்டத்தில் பேசவிருப்பதாயும் சில புள்ளி விபரங்களைச் சேர்த்து மூன்று மணிக்கு அனுப்ப முடியுமோ வென்றும் கேட்டார். முடியுமென்று கூறிவிட்டு இரண்டு மூன்று உத்தியோகத்தருடன் சேர்ந்து புள்ளி விபரங்களைச் சேகரித்து மூன்று மணிக்கு முன்னரே கையில் சேரும்படி அனுப்பிவைத்தேன். அன்று இரவு ஒரு பெரிய ஹோட்டலில் விருந்தொன்றுக்கு நானும் என் மனைவியும் சென்றிருந்தோம். பிரதமவிருந்தினராக சேர் ஒலிவர் வருகிறாரெனக் கூறினார்கள். அவர் வந்ததும் எல்லோரும் எழுந்து நின்றோம். சேர் ஒலிவருக்கு வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். எங்களுக் கருகாமையில் வருமுன் நான் எனது மனைவியாருக்கு 'இன்று மகாதேசாதிபதி புள்ளிவிபரம் ஏதோ சடுதியாகத் தேவையென்று கேட்டு நான் கொடுத்தேன். இவரை எனக்கு நல்லாய்த் தெரியும். இப்போது அதற்கு நன்றி கூறுவார்' என்று கூறினேன். எங்களுக்கு அருகே வந்ததும் எனக்கருகில் வந்து மெதுவாக எனது காதில் 'இவ்வளவு சிக்கிரமாகப் புள்ளி விபரம் சேர்த்துத்தந்ததற்கு மிக்க நன்றியென்று கூறினார். இது போன்ற நல்ல கருமங்களை மெச்சி நடந்ததால் இவருக்கு நாங்கள் எல்லோரும் அக்காலத்தில் முழு ஒத்துழைப்பைக் கொடுத்தோம்.

## பாகுபாடு காட்டாதவர்

சாதி, மதம் இனமென்ற பாகுபாடின்றி சமீபத்தில் இலங்கையில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்தவர்களில் சேர் ஒலிவரும் ஒருவர். இவரது உருவச்சிலையைச் சமீபத்தில் திரை நீக்கம் செய்திருந்தார்கள். இவருக்கு எதிரிகள் இல்லாமலில்லை. ஆனால் எதிரிகள் இவரைச் சந்தித்துப் பழகினால் நண்பர்களாகிவிடுவார்கள்.

## ஒலிவரிடம் சேர் ஜோன் பெட்டிப் பாம்பானார்

சேர் ஒலிவரும் மறைந்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையும் இரத்மலானை விமான நிலையத்தில் ஒரு விடயமாக அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்க நேரிட்டது. சேர் ஒலிவர் வீட்டில் பலபேர் வந்து அவருடன் பேசிக்கொண்டிருந்தபடியால் கூட்

டத்திற்குச் சமுகமழிக்கப் பத்து நிமிடம் பிந்திப் போய்விட்டது. இதற்கிடையில் சேர் ஜோன் பொறுமை இழந்து ''வரட்டும் ஒலிவர்' நான் நல்லாய் ஏசப்போகிறேன்'' என்ருர். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது சேர் ஒலிவர் வந்துகொண்டிருந்தார். என்ன நடக்கப்போகிறதென்று நாமெல்லோரும் ஆவலுடன் பார்த்திருந்தோம். சேர் ஒலிவர் சேர் ஜோனிடம் போய் தான் தாமதித்து வந்ததற்கு மன்னிக்குமாறு கூறி, சேர் ஜோனின் தோழில் ஒருகையைப் போட்டு மற்றக்கையால் அவர் நாடியைத் தடவிஞர். சேர் ஜோன் படமெடுத்து ஆடிய பாம்பு அடங்கிப் பெட்டிக்குள் போவதுபோல சிரித்துவிட்டு மௌனமாயிருந்தார்.

இந்தப் பெரியாருடன் சேர்ந்து கடமை செய்ய கிடைத்த வாய்ப்புக்கு நான் கடவுளை வணங்குகின்றேன். சிலர் கூறும் சேர் ஒலிவரின் குறை குற்றங்களைத் தவிர்த்து இவரின் சிறந்த குணங்களை மதித்து இலங்கை அரசியல் வானில் உதித்துப் பிரகாசித்து அழியாப் புகழுடன், இன்றும் பலர் மனதில் வாழும் சேர் ஒலிவருக்கு எனது அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

அத்தியாயம் 19

# தாய்க் குலத்தின் பொறுப்பு

கல்லடி வேலுப்பிள்ளையின் மகன் கே. வி. நடராசா பதுளையில் பெயர்பெற்ற சட்டத்தரணியாயிருந்தார். நான் பதுளையில் உப அரசாங்க அதிபராயிருக்கும் காலத்தில் எனது நெருங்கிய நண்பராஞர். ஒருநாள் திரு. நடராசா என்னை சட்டத்தரணி பின்ரோ வீட்டுக்குப் போயிருக்கிறீர்கள்; அவர் வீட்டைப் பார்த்தால் எப்படியிருக்கிறது?'' என்று கேட்டார். எனக்குக் கேள்வி முதலில் விளங்கவில்லை. அவர் விளங்கப்படுத்திய பின் அந்த வீட்டைப் பார்த்தால் ஒரு பறங்கியர் வீடுபோல் இருக்கிறது என்றேன். திரு. நடராசா சிரித்துவிட்டு, நான் சொன்னது சரி என்முர். தான் எதற்காகக் கேட்டதென்று விளங்கப்படுத்திஞர். ''பின்ரோ ஒரு சிங்களவர். மனைவி ஒரு பறங்கியர், வீடு நடத்துகிறமுறை பறங்கியர் முறை. அதாவது, தாய்க்குலம் தான், வரும் சந்ததியினர் எப்படி வாழப் போகிருர்கள் என்று நிச்சயிப்பார்கள்.'' மேலும் அவர் கூறிஞர்:- ''கண்டி அரசரில் சிலர் மதுரை அரசகுடும்பத்தில் பெண் எடுத்தார்கள். இதன் விளைவாய்ச் சில இளவரசர்கள் தமிழ் முறையிலே பாண்டியத் தாய்மாரால் வளர்க்கப்பட்டார்கள். அரண்மனைப் பெண்கள் வணங்குவதற்கு விகாரைகளின் ஒரு பக்கத்தில் இந்துத் தேவாலயங்கள் அரசர்களால் கட்டப்பட்டன.

ஆழ்ந்து பார்க்குமிடத்து தாய்க்குலமே எதிர்காலச் சந்ததியினருக்கு முக்கியம், தாய்மொழியென்றே கூறுவோம்; தாய் நாடென்றே கூறுவோம். ஆகையால் தாய்க்குலத்திற்கு மிகவும்

பொறுப்புண்டு. ஓர் இனத்தைத் தாய்க்குலமே தூக்கிவிடும், அவர்களால் கவிழ்க்கவும் முடியும். தந்தை காகம்போல் வயிற்றுப் பிழைப்புக்கு அதிகாலை சென்ருல் அந்திக்குத் திரும்பிவருவான். தாயே வீட்டில் இருப்பாள். இவளே நாளுக்கு நாள் பிள்ளைகளின் வளர்ப்பில் பொறுப்புள்ளவள். பிள்ளைகள் எதற்கும் தாயிடமே செல்வார்கள். பெரும் முனிவர்கள் கூடத் தாய்ப் பாசத்தை விடவில்லை. சங்கராச்சாரியார் தொட்டுப் பட்டினத்தார்வரை தாய் உத்தரவுடன்தான் சந்நியாசிகளுைர்கள். இவர்கள் தாயின் இறுதி மரியாதைக்கு எவ்விடமிருந்தும் வந்து சேர்ந்தார்கள். நாரத முனிவர் தாயின் மறைவுக்குப் பின்தான் ஆரண்யம் சென்ருர். இதனுல் நாம் அறியக்கூடியது; தனது பாசத்தால் தாய் பிள்ளைகளைக் காந்தம் போலக் கட்டுப்படுத்துகிருள். இதனுல் இவள் சொல்வதைப் பிள்ளைகள் கேட்பார்கள். இதை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும். அப்பொழுது எதிர்காலத்தில் நல்ல சமூகம் ஒன்றைத் தோற்றுவிக்கலாம்.

*தாயின் முக்கிய கடன்*

பிள்ளைகள் பிறந்ததும் தாயின் முக்கிய கடன்களில் ஒன்று தாய்ப் பால் கொடுப்பதே. தாய்ப்பாலுக்கு நிகர் வேறு ஒன்றுமில்லையென்று எல்லா வைத்தியர்களும் ஏகமனதாகக் கூறுகிருர்கள். பிள்ளையின் ஆரோக்கியத்திற்கும், பலத்திற்கும், சத்துணவுக்கும் தாய்ப்பாலுக்கு நிகர் தாய்ப்பாலே. பால் கொடுக்கிற தாய்க்கும் பிள்ளைக்கும் இருக்கும் அந்நியோன்ய பாசம் தாய்ப் பால் கொடாத தாய்க்கும் பிள்ளைக்கும் இருப்பதிலும் பார்க்கக் கூடவென்று கூறுவதில் சந்தேகமில்லை. அதோடு தாய்ப் பால் கொடாவிட்டால் இருக்கும் பாலைக் கொடாததால் விரயமுண்டு; மற்றது வேறு பால் கொடுப்பதற்குப் பணம் வேண்டும்

பிள்ளைக்கு நாலு ஐந்து வயதிலே தாய் சிறு சிறு கதைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இராமாயணம், மகாபாரதம், இதோபதேசம், பஞ்சதந்திரத்திலிருந்து சிறுகதைகள் கூறலாம். பாரதி பாடல் சிலவற்றைச் சொல்லிக் கொடுக்கலாம். இப்படிச் செய்தால் நல்ல எண்ணங்கள் வரும்; கெட்ட எண்ணங்கள் வரா. நல்லதைச் செய்ய விருப்பம் வரும்; கெட்டதைச் செய்ய எண்ணம் வரா. உண்மை சொல்லப் பழக்கலாம். எங்கள் பண்பைப் பேணலாமென்று பல நல்லவற்றைப் பிஞ்சு வயதில் பிள்ளையின் மனதில் பதியச் செய்யலாம். சிவாஜி ஒரு பெரிய வீரனுய் வந்ததற்குத் தாய் இளம் வயதில் வீரியம் நிறைந்த கதைகள் சொன்னதாலேயேயென்று சில சரித்திர

ஆசிரியர்கள் கூறுகின்றனர். நல்லகதைகளைக் கேட்டால் முக்கிய மாகப் பெண்பிள்ளைகள் எங்கள் பண்பில் பெருமை கொண்டு தாங்கள் தாய்மாராய் வரும்பொழுது அடுத்த சந்ததியினருக்கு எங்கள் பண்பு, சமயம், உடை, நடையைப் பேண வழிவகுப் பார்கள்.

## பிள்ளைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும்

'சோற்றுக்கும் சேலைக்கும் செல்லம்' என்பதை நாம் எப் பொழுதும் கேட்கிறோம். அதாவது, பிள்ளைகளை மறுவிடயங் களில் கட்டுப்பாட்டுடன் வளர்க்கவேண்டும். எங்கே ஒரு பிள்ளை பிழை செய்கிறதோ தாயோ, தந்தையோ உடனே கண்டிக்க வேண்டும். இந்த இடத்திலே ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வரு கிறது. நான் சிறுவனுயிருக்கும்பொழுது அத்தியடிக்குப் போவது வழக்கம். அங்கே எனக்கு பல உறவினர் உண்டு. ஒருமுறை ஒழுங்கையில் ஒரே கூட்டம். என்னவென்று எட்டிப்பார்த்தால், என் உறவினர் ஒருவர் (நடேசு அண்ணை) ஒருவனை அடித்துக் கொண்டிருக்கிறூர். சண்டையை நிறுத்துமாறு அங்கே நின்றவர் கள் சொல்லவும் நடேசு அண்ணை கேட்கவில்லை. யாருக்கோ ஒரு நல்ல எண்ணம் உதித்தது. ஓடிப்போய் தாயாரை (பிள்ளை யக்கா) கூட்டிக்கொண்டு வந்தார். பிள்ளையக்கா கிட்டவந்து ''எடேய் நடேசு இங்கே வா'' வென்முர். ஒரு ஆட்டுக் குட்டி யைப்போல் நடேசு அண்ணை தாயின் பின்னுல் போனுர். நான் திகைத்துப் போனேன் இது தான் தாயின் பெருமை. இந்தத் தாய் பிள்ளையை கட்டுப்பாட்டுடன் வளர்த்திருக்கிறூர். எங் களுக்கு இது ஒரு வழிகாட்டியாயிருக்கட்டும்.

சமீபத்தில் சிங்கப்பூரில் சாராதாதேவியின் பிறந்த தினத் தில் இராமகிருஷ்ண மடத்தில் நடந்த கூட்டத்திற்கு சமூகமளித் தேன். தாய்மார் பிள்ளைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டு மென்பதற்கு சுவாமிஜி ஒரு கதை சொன்னுர். ஒரு தாய் தந் தையருக்கு ஒரே ஒரு பிள்ளை. மிகவும் செல்லமாக வளர்த்தார் கள். ஒரு நாள் அந்தப் பிள்ளையை கோவிலுக்குக் கொண்டு போகும் பொழுது தாய் தோளில் சுமந்து சென்முள். யாரோ அந்த வழியால் வரும் பொழுது கூடையில் ஏதோ பொருள் கொண்டு வந்தான். தாயின் தோளிலிருந்து சுலபமாக கூடையி லிருந்த ஒரு பொருளைப் பையன் எடுத்துவிட்டான். தாய்க்கு உடனே தெரியவில்லை. வீடுவந்ததும் களவை அறிந்தும் பிள் ளையை கண்டிக்கவில்லை. படிப்படியாக இவன் ஒரு பெரிய கள்வ ஞனன். கடைசியில் பிடிபட்ட வழக்கில் நீதிபதி மரண தண்

டனை விதித்தார். கொலையிலிடுமுன் இவனின் ஒரே ஆசை என்று தாயை கூப்பிட்டார்கள். அப்பொழுது அவளின் காதை தன் வாயால் கடித்து விழுத்தி அன்று சிறு பையனுயிருக்கும்பொழுது தொடங்கிய களவை கண்டித்திருந்தால் இப்பொழுது தூக்கிலிட மாட்டார்களே, உன் பிழையால் இன்று தூக்கிலிடப்போகிறார் கள் என்றான். இக் கதையிலிருந்து தாய் தனது பொறுப்பைச் சரியாக நிறை வேற்றவில்லையென்பதை நாம் அறிகிறோம்.

## தாயை மரியாதை செய்ய வேண்டும்

சிலவிடங்களில் தாய் தந்தை பிள்ளைக்குப் பயந்து நடப்பதை பார்த்திருக்கிறேன். அநேகமாக படிப்புக்குறைந்த பெற்றோர், படித்து முன்னேறிய பிள்ளைகளுக்கு எல்லாம் தெரியுமென்ற எண்ணத்திலோ அல்லது வேறு காரணமோ தெரியவில்லை. பிள்ளைகளுக்குப்பயந்து நடக்கிறார்கள். இவர்களுக்கு எனது தாயாரின் உதாரணத்தை கூற விரும்புகின்றேன். எனது தாயார் நான்படித்துப் பட்ட தாரியாகி இலங்கை சிவில் சேவிசில் கடமையாற்றும் பொழுது கூறினார், ''நீ அரசாங்க அதிபராயிருந்தாலென்ன அல்லது நீதவானுகை யிருந்தாலென்ன அல்லது ஒரு இலாகாவின் தலைவராயிருந்தாலென்ன எனக்கு நீ மகன் ஆகையால், குடும்பவிடயங்களில் நான் சொல்வதை நீ கேட்கவேண்டும்'' இதில் எவ்வளவோ அர்த்தமுண்டு. தனயனின் பதவிக்கும் படிப்புக்கும் தாயுடன் நடக்கவேண்டிய முறைக்கும் ஒரு வித முரணும் இல்லை. அதாவது கூடப்படித்தால் தாயைக் குறைவாக நடத்தவேண்டும் என்ற அர்த்தமில்லை. உற்று யோசித்தால், கூடப்படித்தா கூட தாயை மரியாதை செய்யவேண்டும். இதை இளைஞர் அறியவேண்டும். இளைஞர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்கலாம். ஆனால் பெற்றோர் உலக அனுபவம் என்னும் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் படிப்புக்கு வெளியேயுள்ள எல்லா விடயங்களிலும் பெற்றோர் அறிவு இளைஞர் அறிவிலும் பார்க்கப் பலபடி உயரம் என்பது எனது கருத்து.

ஒரு பிள்ளையை வளர்க்க பெற்றோர் பல கஷ்டங்களுக்குள்ளாவர். பலவித இன்னல்களை அனுபவிப்பர். சில சுகங்களை விட்டுக்கொடுப்பர். எனதும், எனது மனைவியாரினதும் ஒரு அனுபவத்தைக் கூறுகிறேன். பிள்ளைகள் படிக்கும் வயதில் நாங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர மற்ற நாட்கள் மாலையில் வீட்டை விட்டுப் போவதில்லை. நாங்கள் வீட்டிலிருந்தால் பிள்ளைகள் பயபக்தியுடன் படிப்பார்கள். இதுவே காரணம். இங்கே

எங்கள் சில சுகங்களைப் பிள்ளைகளுக்காக விட்டுக்கொடுத்தோம். இப்படிப் பெற்றோர் கஷ்டப்படாமல் பிள்ளைகள் முன்னேறும் என்று எதிர்பார்க்கக்கூடாது. தாய் தந்தையர் மாலையில் வெளியில் விருந்து (Party) என்று சொல்லி வெளியேசென்றால் இதன் விளைவு என்னவாய் முடியுமென்று அறியவேண்டும். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைபோல் முடியும். பிள்ளைகள் பெற்றோர் கஷ்டப்பட்டுத் தங்களை வளர்த்தார்கள் என்ற எண்ணம் மனதில் வரவும் நல்ல பொறுப்புள்ளவர்களாய் வருவார்கள்.

வேலைக்குப் போகும் தாய்மார்களுக்கு பல சங்கடம் உண்டு. எவ்வளவு ஒழுங்குகளைச் செய்தாலும் தாய் வீட்டிலிருந்து பிள்ளைகளைப் பார்க்குமாப்போலிருக்காது. கணவனும் மனைவியும் சேர்ந்து உழைக்காவிட்டால் இப்போதைய நிலைமையில் பல குடும்பங்கள் போதிய வருவயில்லாமல் கஷ்டப்படுவார்கள். ஆகையால் தாய்மார் வேலைக்குப் போகப்படாதென்று கூற முடியாது. எனினும் அதற்கு ஒரு விலையுண்டு. வருவாய் குடும்பத்தைப் பணக்கஷ்டத்திலிருந்து நீக்கும். ஆனால் இப் பணத்தைப் பெறுவதற்குத் தேவையான நேரத்தில் தாயில்லாமல் பிள்ளைகள் வளர்வார்கள். இதனால் வரும் நஷ்டம் உடனே தெரியாது. காலம் போகப்போகத் தெரியவரும். இதற்குப் பரிகாரமும் கிடையாது. ஏதோ சமாளிக்கவேண்டியதுதான்.

தாய்குலத்தின் பொறுப்பைப்பற்றி பேசினால் தாய்க்குலத்திற்கு தக்க மரியாதை சமூகம் கொடுக்கிறதா வென்ற கேள்வி எழுகிறது. ஏற்கனவே இளம் பெண்களின் பாதுகாப்பைப் பற்றி எழுதியிருக்கிறேன். மற்றப்பெண்களின் நிலைமை எப்படியிருக்கிறது? தமிழ்நாட்டில் வழியிலோ தெருவிலோ எந்த வயதுப்பெண்ணைக் கண்டாலும் அம்மாவென்று அழைக்கிறார்கள், மரியாதை கொடுக்கிறார்கள். இது தமிழ்நாட்டின் வாழ்க்கையில் ஒரு சிறந்த அம்சம். நாங்கள் எப்படித் தாய்க் குலத்தை நடத்துகிறோமென்று எங்கள் மனச்சாட்சியைக் கேட்க வேண்டும். இவ்வழியில் நாம் பல மைல்தூரம் நடக்கஇன்னும் இடம் இருக்கிறதென்று. எனது மனச்சாட்சி கூறுகிறது. பல விடயங்களில் எங்கள் இனம் விவேகத்தை உபயோகித்து முன்னேறுகின்றது. இந்த விடயத்திலும் எங்கள் விவேகத்தை உபயோகித்து தாய்க்குலத்திற்குத் தகுந்த மரியாதையைக் கொடுத்து வாழுவோமாக! அப்பொழுது அவர்கள் தங்கள் கடமைகளைப் பொறுப்புணர்ச்சியுடனும், ஊக்கத்துடனும் செய்து ஒரு சிறந்த சமூகத்தைச் சிருஷ்டிப்பார்கள்.

அத்தியாயம் **20**

# மலேசியா சிங்கப்பூர் விஜயம்

ஒரு ஜெர்மன் அறியவாளி இந்தியாவைப்பற்றி ஒரு நூல் எழுதினர். அதைப்பிரசுரிக்கு முன் தான் எழுதியதில் ஏதாவது திருத்தங்கள் செய்ய வேண்டுமோவென்று பார்ப்பதற்கு இந்தியா சென்ருர். மூன்று மாதம் தங்கினுல் போதுமென்றெண்ணினுர். இந்தியாவைப் பார்க்கப்பார்க்க இன்னும் காலம் தேவைபோல் தோன்றியது. இப்படியே இரு ஆண்டுகள் ஓடி மறைந்தன.

இரண்டு ஆண்டுகளின் பின் ஜெர்மனி திரும்பிய அவர் அந் நூலைப் பிரசுரிக்கவில்லை. காரணம் இந்தியாவைப்பற்றி அறிந்து கொள்வதற்கு முழு வாழ்நாளே வேண்டும் போல் தோற்றியது. அவருக்கு நடந்தது போன்று மலேசியா, சிங்கப்பூரில் சில வாரங் கள் தங்கி ஒரு கட்டுரை எழுதுவதிலும் கஷ்டமுண்டு. ஆயினும் இந்த நாடுகளுக்கு இருபத்தைந்து முறைகளாவது சென்றிருக்கி றேன். அத்தோடு இரு ஆண்டுகள் தொடர்ந்து வசித்திருக்கிறேன். ஆகையால் 25 ஆண்டுகளில் இந்த நாடுகளில் நடந்த மாறுதல் களையும் முன்னேற்றங்களையும் ஓரளவு அறியக்கூடியதாயிருக்கின்ற காரணத்தால் இக்கட்டுரையை எழுதலாம் என்ற துணிவு ஏற் பட்டது.

*மலேசியாவில்*
*இந்தியர்*

மலேசியாவில் நூற்றுக்குச் சுமார் பத்து வீதம் இந்திய வம்சாவளியினர் வசிக்கிருர்கள். சிங்கப்பூரில் இந்த வீதத்திற்குக் குறைவாயிருக்கும். சிங்கப்பூர் என்ற பெயரை சிங்கபுரமென்று

இராசேந்திர சோழன் கொடுத்ததாக ஒரு அரசாங்க பிரசுரத்தில் கவனித்தேன். இந்த இரு நாடுகளிலும் பல இன மக்கள் இருக்கிறார்கள். மலேசியாவில் மலாய் மக்களும், சிங்கப்பூரில் சீன மக்களும் ஆகக்கூடுதலாக வாழ்கிறார்கள். இலங்கை மக்கள் மிகக் குறைவே, இரு நாடுகளிலும் சேர்ந்து ஒரு இலட்சத்துக்குட் பட்டவர்களே இருக்கலாம் என மதிப்பிட முடிகிறது. அதாவது நூற்றுக்கு ஒரு வீதத்திற்கும் குறைவாகக் காணப்படுகிறது. இந்திய, இலங்கை மக்களுக்குப் பல இந்து கோவில்களும் மொழி கலாசார தாபனங்களும உண்டு. இவற்றில் முக்கியமானவை தமிழருக்கே இருக்கின்றன.

தென், ஆசிய நாடுகளையும், தென்கிழக்கு ஆசிய நாடுகளாகிய மலேசியா சிங்கப்பூரையும் பார்க்குமிடத்து பல வித்தியாசங்கள் உண்டு. எங்களுக்கு குறைவாக சில விஷயங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றன. அவை அவர்கள் பிரச்சனை. எங்களிலும் பார்க்க சில விஷயங்களில் அவர்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். இவையாவன யாது, என்ன காரணங்களால், என்ன சூழ்நிலைகளால் என்று பார்த்தால் அவை எங்களுக்கு பயன்தருவன. வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையில் தான் முக்கிய வித்தியாசமுண்டு. எப்படி வருவாயைக் கூட்டிக்கொண்டு போவதென்பது முக்கியமாக சிங்கப்பூர் மக்களின் அடிப்படைக் கொள்கை. இதனால் ஆக்க பூர்வ கருமங்களில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். பணநோக்கத்துடன் பார்த்தால் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்களெனத் தெரிகிறது. பல ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூர் ஒரு வெள்ளிக்கு (Dollar), எங்கள் ஒரு ரூபா அறுபது சதம் பெறுமதியாயிருந்தது. இன்று பதினொன்றரை ரூபா-வாயிருக்கிறது. இப்படி ரூபாயின் பெறுமதி விழுவதற்கு எங்கள் நாட்டில் என்ன பிழை போனது! யாரின் பிழை என்று கூறுவது! யாராயிருந்தாலென்ன. எப்படி எதிர்காலத்தில் நிவர்த்தி செய்வதென்பதே எங்கள் நோக்கமாயிருக்க வேண்டும்.

*பிறநாடுகளுக்கு*
*முன்மாதிரி*

மொழி, சமயம், கலாசாரம் என்று கூறி கூடிய கவனத்தை இவற்றில் செலுத்துவதால் ஆக்கபூர்வ வேலைகளில் போதிய கவனத்தைச் செலுத்தாமல் விட்டுவிட்டோம். ஆங்கிலத்தில் கூறுவதென்றால் எங்கள் (Priority) முன்னுரிமையில் தவறுண்டு. மொழி, சமயம், சலாசாரத்தைக் கவனிக்கப்படாதென்று அர்த்தமல்ல. ஆனால் இதற்கும் வரம்புண்டு என்பதே சிங்கப்பூர் மக்களின்

கொள்கை. தங்கள் மேம்பாட்டுக்கு எந்த எந்த நாட்டிலே எந்த ஆக்கபூர்வ வேலைகள் பயன்தருகின்றனவோ இவைகளை சிங்கப்பூர் மக்கள் தங்கள் சிறு தீவுக்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். அதோடு மிகவும் மூளை வலிமை கூடிய சிலர் ஆழ்ந்து யோசித்து மறுதேசங்களிலில்லாத சில கருமங்களையும் தொடக்கியிருக்கிறார் கள். உதாரணமாக சிங்கப்பூர் தபால் இலாகா சேமிப்பு வங்கி உலகிற்கே ஒரு வழிகாட்டியாயிருக்கிறது. 25 இலட்சம் மக்களுக்கு சுமார் பத்து இலட்சம் கணக்குப் புத்தகங்களுண்டு. சிறுதீவு ஆகை யால் எல்லாத் தபால் கந்தோர்களும் ஒரு கொம்பியூற்றர் (Computer) மூலம் ஒருவருக்கு எவ்வளவு கணக்கில் இருக்கிறதென்று உடனே எந்தக் கந்தோரிலும் அறிந்துகொள்ளலாம். வங்கிகளை விட்டுவிட்டு பலர் தங்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தபால் கந்தோர் மூலம் பணத்தை உபயோகிக்கிறார்கள். வங்கிகளில் நாளுக்கு நாள் கையிலிருக்கும் (Current) கணக்குக்கு வட்டி கிடையாது. ஆனால் தபால் கந்தோர் சேமிப்பு வங்கியிலுண்டு. மற்றது ஐந்து நிமிடத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சில வருடங்களுக்கு முன் நான் சிங்கப்பூர் சென்றபொழுது துணை உபபிரதமர் திரு. இராசரெத்தினத்தின் மனைவியை ஒரு தபால் கந்தோரில் கண்டேன். எனது சினேகிதனுக்கு இவரைத் தெரியு மாதலால் என்ன இங்கே செய்கிறீர்களென கேட்க, அவர், தான் வங்கியில் கணக்கு வைக்காமல் தபால் கந்தோரிலே வைத்திருப் பதாகச் சொன்னார். நான் ஒரு சினேகிதன் வீட்டில் இம்முறை தங்கியிருந்தபொழுது "எப்ப வங்கிக்குப் போகிறீர்கள். எனக்கும் சொற்ப வேலையிருக்கிறதுவருகிறேனென்" என்றேன். அவர் அதற்கு வங்கிக்கு அடிக்கடி போவது கிடையாது. தேவையான பணத்தை தபால் கந்தோர் மூலம் பெற்றுக்கொள்கிறேனென்றார். தபால் கந்தோர் மக்களுக்கு ஒரு பெரிய சேவை செய்கிறது. அத்தோடு போதிய பணம் சேமித்து வைப்பதால் அரசாங்கம் இப்பணத்தை ஆக்கபூர்வ வேலைகளுக்கு உபயோகித்து நாட்டை முன்னேற்று கிறது.

இயற்கை வசதி குறைந்த இந்தச் சிறுதீவு பலவித வாணி பத்தில் ஈடுபட்டிருக்கிறது. தாய்லாந்து, பிலிப்பீன்ஸ், இந்தோ னீஷயா, மலேசியாப் பொருள்களை வாங்கி உலகிற்கு சிங்கப்பூர் விற்கிறது. நேரே, தாய்லாந்து மற்ற ஆசியன் (Asean) நாடுக ளில் வாங்க தாமதமிருப்பதால் உலக நாடுகள் சிங்கப்பூர் மூலம் வாங்குகின்றன. இதேபோல் விற்பனையும் நடைபெறுகிறது. உதா ரணமாக சில ஆண்டுகளுக்கு முன் சுமத்திரா தலைநகர் மெதா னில் நான் கண்ட சம்பவத்தை கூறுகிறேன். இந்தோனீஷிய தோட்ட சொந்தக்காரன் ஒருவன் தனது றப்பரை ஒரு சீன

வியாபாரிக்கு கொடுக்கும்பொழுது நான் அவரை கேட்டேன் ஏன் நீங்கள் இந்தோனிஷிய அரசாங்க றப்பர் வாங்கும் தாபனத்திற்குக் கொடாமல் சீன வியாபாரிக்கு கொடுக்கிறீர்களென்று. அதற்கு அவர் அரசாங்க தாபனத்திற்கு கொடுத்தால் பணம் கிடைக்க இரண்டு வாரம் செல்லும். மற்றது அரசாங்க உத்தியோகஸ்தருக்கு (Store Keeper) ஏதாவது சந்தோசமும் கொடுக்க வேண்டும். ஆனல் சீன வியாபாரிக்கு கொடுத்தால் உடனே பாதிப் பணமும் அன்று பின்னேரம் சிங்கப்பூருக்குப் போகும் கப்பலில் றப்பரை ஏற்றினதும் மிகுதியையும் கொடுத்து விடுவார் என்றூர். இந்த உதாரணமே போதும், ஏன் சிங்கப்பூரில் வாணிபம் முன்னேறுகிறதென்பதற்கு.

துறைமுகத்தை எடுத்துக் கொண்டால் கடந்த சில ஆண்டுகளில் உலகில் ஐந்தாவது துறைமுகமாகி நாலாவதாகி மூன்றுவதாகி இப்பொழுது இரண்டாவதாகிவிட்டது என்று கேள்வி. றெட்டர்டாம் (Rotterdam) க்கு இருக்கும் முதலிடத்தை பிடிக்க வேண்டுமென்று சிங்கப்பூர் துறைமுக அதிகாரிகள் பாடுபடுகிறுர்கள். இதேபோல் வங்கியிலும், கடைகளிலும், அரசாங்க அலுவலகங்களிலும் எல்லோரும் சுறுசுறுப்பாக கடமையாற்றுகிறுர்கள்.

ஏதாவது அலுவலில் தொழில் நுட்பம் குறைவாகக் காணப்பட்டால் எந்த நாடாயிருந்தாலென்ன அங்கிருந்து தொழில் நுட்ப வல்லுநரை வரவழைக்கிறுர்கள். அவர்கள் கடமையை செவ்வனே செய்தால் அவர்களுக்கு சிங்கப்பூர் பிரஜா உரிமையை வழங்கி தங்கவைத்து விடுகிறுர்கள் இதனுல் இந்த சிறு நாட்டில் மூளை வலிமை கூடியவர்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. மூன்றுவது மண்டல நாடுகளிலிருந்து வரும் வல்லுநர்கள் சிங்கப்பூரில் உள்ள வசதிகளை கண்டு மோகம் கொண்டு பிரஜா உரிமை கொடுத்தவுடன் ஏற்றுகொள்கிறுர்கள். இப்படி சிங்கப்பூர் தனது தராதரத்தை உயர்த்திக் கொள்கிறது.

*மலேசியா*

மலேசியாவில் சிங்கப்பூரைப்போல் முன்னேற்றமில்லை. ஆனலும் தென் ஆசிய நாடுகளிலும் பார்க்க முன்னேறியிருக்கிறது. 25 வருடத்திற்கு முன் மலேசியா றப்பரையும், சுயத்தையுமே நம்பி வாழ்ந்தது. இப்பொழுது பாம்மரம் (Oil Palm) றப்பரிலும் பார்க்க முன்னேறிவிட்டது. மற்றது நிறைய கைத்தொழில்கள் வளர்ந்து விட்டன. விவசாயம் முன்னேறி நெல்லு சுயதேவையைப் பூர்த்தியாக்கிவிட்டது. இந்த நாட்டில் முக்கியமாக இங்கே

வாழும் சீன, இந்திய மக்களின் கடும் உழைப்பால் நாட்டின் வருவாய் கூடிக்கொண்டு போகிறது.

சிங்கப்பூரைப்போல் நாங்களும் வாணிபத்தில் ஈடுபட முடியாதா என்று யோசிக்க வேண்டும். இதைப்பற்றி ஒரு பெரியார் கூறியதை இங்கே குறிப்பிடுகிறேன். பலகாலம் இலங்கைக்கு தேவையான உணவை அரசாங்கச் சார்பில் வரவழைத்த மறைந்த சிவில் சேவிஸ் உயர் அதிகாரி ஆழ்வாப்பிள்ளை, குடா நாட்டில் உள்ள நாங்கள் வங்காள விரிகுடாவை சூழ்ந்திருக்கும் நாடுகளுடன் வாணிபம் செய்து எங்களுக்குத் தேவையான பொருளை சம்பாதிக்கலாமேயென்று கூறுவார். இதை நாங்கள் ஆழ்ந்து யோசித்து மத்திய கிழக்கிலிருந்து வரும் பணத்தை உபயோகித்து மத்திய கிழக்கிலிருந்து தாயகம் திரும்பும் இளைஞர்களை இந்தத் திசைக்கு ஊக்குவிக்கலாம். இதற்கு வாணிபத்தில் முதிர்ந்தவர்கள் ஆக்கபூர்வ எண்ணங்களை எடுத்துரைக்க வேண்டும். தொடர்ந்து வைத்தியத்திற்கும் பொறியியலுக்கும் கணக்கு பரிசோதனைக்கும் இளைஞர்களை தேர்ந்தெடுத்து கல்வி கொடுப்பதோடு நின்று விடாமல் புது எண்ணங்களையும் கருமங்களையும் தொடக்கவேண்டும். தனித்தனியே எங்களிடம் போதிய வல்லுநர் உண்டு. ஆனால் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல கருமத்தை நம் இனத்திற்கு செய்வதற்கு தக்க இயல்பு எங்களிடம் குறைவாய் தான் இருக்கிறது. இதை உணர்ந்து நிவர்த்தி செய்து, சமூகத்தை முன்னுக்கு கொண்டு செல்வதே எமது கடன்.

*சீனமக்கள்*

சீன மக்களைப் பார்க்குமிடத்து அவர்கள் எங்கிருந்தாலும் எவ்வித அரசியல் அமைப்புக்குள் வாழ்ந்தாலும் வாழ்க்கையில் சித்தியடைகிறார்கள். பொதுவுடமை நாடு சீனா, மக்கள் மூலம் ஆட்சி தைவான், சிங்கப்பூர் இப்படி பலவித அரசியலிலும் சீன மக்கள் முன்னேறி விடுகிறார்கள். ஆகையால் அரசியல் அமைப்புத்தான் காரணம் என்று கூறிவிட முடியாது. காரணம் அம்மக்களின் பிரயாசையும் புத்திக் கூர்மையான அறிவுமென்றே கூறலாம். தமிழ் மக்கள் ஆகிய நாம் சீனமக்களுக்கு ஒரு விதத்திலும் குறைந்தவர்களல்ல. எங்கள் அபிவிருத்தியில் பல இடைவெளியுண்டு. இதைத்தான் நிரப்பவேண்டும். பழைய பெருமைகளை யோசித்துக்கொண்டு இருக்காமல் எதிர்காலத்திற்கு என்ன செய்யலாம் என்று யோசித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய கிழக்கிலிருந்து வரும் பணத்தை முக்கியமாக வீடுகட்டுவதில் செலவழிக்காமல் ஆக்கபூர்வ கருமங்களில் முதலீடு செய்தால் செய்கிறவருக்கும் பயன் உண்டு. சமூகத்திற்கும் பயன் உண்டு.

உலகிலே எந்த நாட்டிலும் எல்லா வசதிகளும் கிடைப்ப தில்லை. மலேசியா, சிங்கப்பூரில் வாழும் எங்கள் மக்களுக்கு போதிய பணமும் வாழ்க்கை வசதிகளுமுண்டு. ஆனால் மொழி, சமயம் கலாசாரத்தில் ஒரு இக்கட்டான எதிர்காலத்தை சமா ளிக்க வேண்டிவரும். எங்களுக்கு இது விடயங்களில் அவர்களிலும் பார்க்க நல்ல சூழ்நிலையிருந்தாலும் எங்கள் கஷ்டத்தில் முக்கிய மானது பொருளாதார பலவீனம். இதை சமாளிப்பதற்கு மலே சியா, சிங்கப்பூர் ஓர் எடுத்துக்காட்டாயிருக்கட்டும். மொழி, சமயம், கலாச்சாரத்தை பேணுவது போல் பொருளாதார முன் னேற்றத்திற்கும் பாடுபடுவோமாக.

அத்தியாயம் 21

# பொறாமை பொல்லாதது

''நாம் நன்ருய் இருந்தால் மற்றையோரும் நம்மைப்போல நன்ருக இருக்கவேண்டும் என்று எண்ணுதல் நல்லது.''

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் பருத்தித்துறை பாராளு மன்ற அங்கத்தவராயிருந்தார் எனது நண்பர் கந்தையா. பாராளு மன்றத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நண்பர் கந்தையா எனக் குக் கூறியது நினைவிருக்கிறது.

பாராளுமன்றத்தில் அவருக்கு அருகிலிருந்த ஆசனம் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் தலைவருக்கு உரியது. ஒருநாள் ஏதோ விவாதம் நடந்துகொண்டிருக்கும்போது இத்தலைவர் ''கந்தையா எனக்கு இன்னுமொரு ஆசையிருக்கிறது. அது நிறைவேறினல் நாளைக்கும் சாக ஆயத்தம்'' என்ருர்.

''அது என்ன'' என்று வினவியதும் அத்தலைவர் என்று கூறி ஞர். ''தமக்கு எதிரியாக இருக்கும் மற்ற தமிழ்க் கட்சியை பூண் டோடு களைந்துவிட்டால் சாகலாம்''. அமரர் கந்தையா அதற்கு ''இவ்வளவு காலமும் உங்கள் மேல் எனக்கு ஒரு மதிப்பு இருந்தது. இன்றுடன் அது போய்விட்டது. ஏதாவது நல்ல காரியத்தை செய்வதாயிருந்தால் யாரும் ஏற் றுக் கொள்வார்கள். இது ஒரு ஆசையல்ல. இது மற்றைய கட்சியின் மேலுள்ள பொருமை'' என்று கூறிஞராம்.

இன்னுமொரு சம்பவத்தை கூறுகிறேன். யாழ்ப்பாணத்தி லிருந்து கொழும்பு செல்லும் புகையிரத வண்டியில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பிரயாணம் செய்தபொழுது என்னுடன் பிரயாணம் செய்த சிலருடன் பேசிக்கொண்டிருந்தேன். அக்காலத்தில் முதல் முறையாக தமிழர் ஒருவர் அரசாங்க அதிபராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினர். அவர் ஒரு நல்ல மனிதர். அவரைப்பற்றியும் அவருடைய கருமங்களைப்பற்றியும் ஒவ்வொருவரும் சிறப்பாகச் சொல்லிக்கொண்டிருந்தோம். அப்பொழுது ஒருவர் முகத்தைச் சுழித்துக்கொண்டு ''எப்படிப்பட்ட பெரியவராயிருந்தாலென்ன பெண்சாதிக்குப் பயந்தவர்தானே'' என்று கூறினர். நான் குறுக்கிட்டு ''இப்படியாக ஏதாவது ஒரு குறை கூறுவது எங்கள் இனத்தின் பெரிய பலவீனம். இது முக்கியமாக சிறுவயதில் எங்கள் சூழலில் விதைக்கப்பட்ட வித்தால் வளர்ந்து கொண்டுவருகிறது. யார் இதை அகற்றியெறிகிறுனோ அவன்தான் பண்புள்ளவன்'' என்று கூறினேன். பேச்சை அவ்வளவுடன் நிறுத்திக் கொண்டோம்.

## போட்டா போட்டி

அனாவசிய போட்டா போட்டியின் விளைவால் வரும் பொருமையால் நேரும் கஷ்டத்தை எனது வவுனியா நண்பன் அமரர் முகாந்திரம் தர்மலிங்கம் மிகவும் சுவாரஷ்யமாக எனக்கு கூறினர். தானும் அமரர் முல்லைத்தீவு சபாரத்தினமும் போட்டா போட்டியாக மாங்குளத்திற்கும் முல்லைத்தீவுக்குமிடையே பஸ்வண்டிச் சேவை நடாத்தினர்கள். போட்டியும் பொருமையும் கூட, பயணத்திற்கு 50சதத்திலிருந்து 25 சதமாக்கினர்கள். இதிலும் வெற்றி தோல்வி காணமுடியவில்லை. பின்பு ஒருவர் பணமில்லாமல் ஆட்களை ஏற்றிச்சென்ருர். உடனே மற்றவரும் இதனையே நடைமுறைப்படுத்தினர். இதிலும் வெற்றி தோல்வி கிடைக்கவில்லை. இறுதியாக பிரயாணிகளுக்கு சாப்பிட வாழைக்குலையைப் பஸ்சினுள் கட்டித்தூக்கினர் ஒருவர். மற்றவரும் அப்படியே செய்தார். கடைசியாக இருவரும் நஷ்டத்தினுல் பஸ் சேவையை நிறுத்தி அமரர் சபாரத்தினம் முல்லைத்தீவு சென்ருர். முகாந்திரம் வவுனியா சென்ருர்.

## பெருமைப்படலாம்

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்ததற்கு நான் பெருமைப் படுகிறேன். உலகில் எப்பகுதியிலும் யாழ்ப்பாணம் என்ருல் தெரியும். நல்ல மூளைசாலிகளை படைக்கும் பூமி என்று கருது

வார்கள். எங்களுக்கு பல நல்ல குணங்கள் உண்டு. ஆனல் மற்றச் சமுதாயத்திலும் கூட எங்களுக்கு பொருமை உண்டு. எங்கள் முன்னேர் ஏதோ இந்த குறையை எங்களுக்கு விட்டுச் சென்று விட்டார்கள். எங்களில் பலர் இப்படிப்பட்ட ஒரு குறை எங்களிடத்திலிருப்பதை அறியமாட்டோம். ஆனல் என் அனுபவத்தில் இக்குறை சமூகத்திலும், ஏன் அரசியலிலும் கூட உண்டு. இங்கே கூறிய முதலாவது சம்பவம் அரசியல் சம்பந் தப்பட்டது. மற்றைய இரண்டும் சமூகத்துடன் சம்பந்தப்பட் டவை. நாம் இந்த குறையை உணர்ந்து எதிர்காலத்திலாவது இதை நிவர்த்திசெய்யவேண்டும்.

## அதிருப்தியும் பொருமையும்

பொருமை ஒரளவில் வாழ்க்கையில் அதிருப்தியால் வருவது. கடவுள் எனக்கு கொடுத்ததுடன் நான் திருப்தியுற்றல் மற்ற வன் என்னிலும் கூடிய வசதியுடையவனுய் இருந்தாலும் நான் கவனிப்பதில்லே எனக்கு அதிருப்தியிருந்தால் பொருமை வந்து விடும். ஆகையால் முதலில் நாங்கள் திருப்தி அடைய வேண் டும். அதேசமயத்தில் ஏற்கனவே இருக்கும் வசதிகளுடன் திருப்தி யாக இருக்க பழகவேண்டும். ஏன் நாம் எங்களிலும் வசதி கூடியவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்? எங்களிலும் வசதி குறைந்தவர்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்போமானல் கடவுள் எங்களுக்கு அளித்த வசதிகளுக்கு நன்றி கூறி திருப்தி அடை வோம். எனது பிள்ளேகள் சிறுபிள்ளேகளாக இருக்கும் காலத் தில் சில வேளேகளில் கல்லூரியிலின்றும் வந்ததும் தனவந்தர் களின் பிள்ளேகள் எப்படி நிறைய பணம் கொண்டுவந்து செல வழிக்கிருர்கள் என்று கூறுவார்கள். அக்காலங்களில் பிள்ளேகளே மோட்டார் வண்டியில் வறியவர்கள் இருக்கும் சில பகுதிகளுக்கு ஊடாக கூட்டிக்கொண்டு போவேன். இப்படியும் வறியவர்கள் இருக்கிருர்களாவென்று வினவுவர். இதைப்பார்த்ததும் தாங்கள் நல்ல வசதியுடன் சீவிக்கிறேமென்ற எண்ணம் வந்துவிடும்.

## நிம்மதியில்லே

சிலவேளேகளில் எங்களுக்கு பொருமை வந்தால், சந்தர்ப் பத்தை அலசிப்பார்த்தால் காரணம் ஒன்றுமில்லே என்று தோன் றும். சிங்கப்பூரில் நான் தங்குமிடம் ஒரு நீதியரசரின் இல்லம்.

ஒருநாள் அவருடன் அவரின் மோட்டார்வண்டியில் போகும் பொழுது ஒரு பெரிய வீட்டையும், தோட்டத்தையும் காட்டினார். சொந்தக்காரன் ஒரு பெரிய சீன தனவந்தன். அந்த வீட்டுக்கு 46 அறைகளுண்டு வீட்டைக் காட்டிவிட்டு எனது நண்பன் கூறினார் தனக்கு இவர்மேல் பொறாமையில்லை. ஏனெனில் இவ்வளவு பணவசதியிருந்தும் ஒரு நாளாவது இந்த தனவந்தன் சரியாக நித்திரை செய்வதில்லையாம். அவர் உயிருக்கு எப்பொழுதும் ஆபத்து. இன்று நித்திரை செய்யும் அறையில் நாளை படுப்பதில்லை. ஏதாவது ஒரு பெரிய விருந்துக்கு போய் விட்டு வீடு திரும்ப நடுச்சாமம் ஆனால் பயத்தில் வழியில் ஓர் ஹோட்டலில் தங்கிவிடுவார். இந்த உதாரணத்தைப் பார்த்ததும் இங்கு பொறாமைக்கு இடமில்லையென்று அறிகிறோம். ஏனென்றால் வசதியுள்ளவர் என்று ஒருவரைப் பார்க்கும் இடத்து வேறுவழிகளில் அவருக்கு வசதிகள் குறைவாயிருக்கும். இந்த மனிதனுக்கு எவ்வளவு பணமிருந்தும் நிம்மதி கிடைப்பதில்லை. இதில் பொறாமைப்பட ஒன்றுமில்லை.

இன்னுமொரு உதாரணம் கூறுகிறேன். பல ஆண்டுகளுக்கு முன் விகடனில் வாசித்தேன். ஓர் ஏழை, செட்டியார் மடத்தில் தான் உணவு பெற்றான். மடத்தில் மணி அடித்ததும் ஓடிப்போய் கொடுக்கிறதை வாங்கிச் சாப்பிடுவான். ஒருநாள் கடற்கரைக்கு காற்று வாங்க ஒரு பெரிய மோட்டார் வண்டியில் ஒரு தனவந்தர் வந்தார். வண்டியினின்றும் இறங்கி கடற்கரையில் நடந்தார். இவரைப் பார்த்ததும் ஏழைக்குப் பொறாமை வந்துவிட்டது. தான் மடத்து மணிக்கு உணவிற்கு ஓட வேண்டியிருக்கிறது. ஆனால் மற்ற மனிதனுக்கோ எல்லா வசதியுமிருக்கிற தென்று யோசித்தான். துணிந்து அப்பெரிய மனிதரை அணுகி, ஏன் ஐயா இப்படி நெடுக நடந்து திரிகிறீர்கள் என ஏழை கேட்டான். அதற்கு அந்த மனிதர் "இதை யாருக்கப்பா சொல்வது. மத்தியானம் ஒரு பிடி சோறு கூட உண்ணவில்லை. அது தொண்டைக்குக் கீழே இறங்கமாட்டாதாம். இதற்காகத் தான் இப்படி நடந்து பார்க்கிறேன்" என்றார். அப்பொழுது மடத்து மணி கேட்கிறது ஏழை ஒரே ஓட்டமாக ஓடிக்கொண்டு தனது சீவியம் மிகவும் திருப்திகரமானது, செட்டியார் மடத்து

எந்த உணவும் தனக்கு ஒத்துக்கொள்கிறது என்று நினைத்து பொருமையைவிட்டு மனத்திருப்தியடைந்தான். இதனுல் நாம் அறிவது என்ன வென்ருல் நாம் மற்றவருடன் ஒத்துப்பார்க்கும் பொழுது ஒரு அம்சத்தைமட்டும் பார்த்து இதனுல் பொருமை கொள்ளக் கூடாது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் பொருமை கொள்வதற்கு அதிகமாக இடம்வராது.

நாம் நன்ருக இருந்தால் மற்றையோரும் நம்மைப்போல் நன்ருக இருக்கவேண்டும் என்று எண்ணுதல் நல்லது. நாம் நல்ல நிலையில் இல்லாவிட்டால் எங்கள் நிலையைத் திருத்துவதற்கு எல்லாவற்றையும் செய்து கொண்டு மற்றவர்களுக்கு எமக்கு வந்த கஷ்டம் வரவே வேண்டாம் என்று எண்ணினுல் நாம் பெரிய மனிதராகிவிடுவோம், சமுகம் முன்னேறும். பொல்லாத பொருமை இடம் தெரியாது உருக்குலைந்துவிடும்.

→0←

அத்தியாயம் 22

# அருச்சுனனும், பிராட்மனும்

ஒரு மனிதன் ஒரு வாவியில் மீன்பிடிக்கச் சென்றான். சிறிது நேரத்திற்குப்பின் மிதக்கும் சிறு கட்டை ஆடத்தொடங்குகிறது. ஆகையால் ஏதோ மீன், வைத்த தீனை உண்ண எத்தனிக்கிற தென்று தெரியவந்தது. அந்த நேரத்தில் ஒரு வழிப்போக்கன் இன்னார் வீடு எங்கே என வினவினான். மீன்பிடிப்பவரிடமிருந்து ஒரு வித மறுமொழியும் வராததால் அவன் கிராமப்பக்கமாக நடந்தான். சொற்பநேரத்தில் மிதக்கும் கட்டை கீழேபோக ஒரே மூச்சுடன் மீனை வெளியே இழுத்தான் அந்த மனிதன். அப் பொழுது தன்னை யாரோ சற்றுமுன் ஏதோ கேட்ட மாதிரி தெரிந் தது. நிமிர்ந்து பார்க்க, வழிப்போக்கனைக் கண்டதும் கையைத் தட்டிக்கூப்பிட்டு ஏதாவது கேட்டீராவென்றான். ''ஆம், நான் இன்னார் வீடு எங்கே என்று கேட்டேன். நீங்கள் ஒரு பதிலும் சொல்லவில்லையே'' என்றான் வழிப்போக்கன். அதற்கு அம்மனி தன் அந்த நேரத்தில் எனது முழுமனமும் மீன்பிடிப்பதிலிருந்த தால் உலகில் என்ன நடந்ததென்று அந்நேரம் தெரியவில்லை யென்றான். முழுமனதுடனும் ஒரு மனதுடனும் இறைவனை தியா னிப்பதற்கு இதை உதாரணமாக இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறினார். இது உலக வாழ்க்கைக்கும் நல்ல உதாரணம்.

இன்னுமொரு உதாரணமும் கூறினார். ஒரு கிராமத்தில் தண்ணீர்ப் பஞ்சமிருந்தது. பயிர் வாடத் தொடங்கிவிட்டது. அணித்தே ஒரு சிறு ஆறு ஓடியது. ஒரு விவசாயி தன்னுடைய கமத்துக்கு ஆற்றிலிருந்து வாய்க்கால் வெட்டத் தொடங்கினான்.

மத்தியான நேரமாய் விட்டது. வேலைமுடியவில்லை. வீடு திரும் பாததால் மனைவி, மகளை அனுப்பி கூட்டிவரச்சொன்னாள். விவசாயி முடியாதென்றான். பின்னேரம் வரையும் ஒருமனதுடன் தொடர்ந்து வாய்க்காலை வெட்டி வயலுக்கு தண்ணீர் கொண்டு போய்ச் சேர்த்தான். தண்ணீர் வயலுக்குள் போகவே சந்தோஷப்பட்டு மனைவியாரிடம் குளிப்பதற்கு எல்லாம் தயார் செய்யும்படி சொல்லி அனுப்பினான். குளித்துச் சாப்பிட்டு அன்று இரவு ஒரே இன்பமயத்தில் நித்திரை கொண்டான். மற்றுமொரு விவசாயி இப்படியே வாய்க்காலை வெட்டத்தொடங்கினான். மத்தியானம் மனைவி வந்து கூப்பிடவும் "நீ கூப்பிட்டபடியால் வருகிறேன்" என்று கூறி வீடு சென்றான். இவனின் பயிர் தண்ணீர் இல்லாமல் அழிந்துவிட்டது. முழுமனதுடன் வேலை செய்வோரும் அரைகுறையாய் வேலைசெய்வோரும் அடையும் வெற்றியும் தோல்வியும் இவை போன்றவைதான்.

இவ்வுதாரணங்களிலிருந்து நாமறிவது எக்கருமத்தையும் மனதை ஒருமைப்படுத்தி (concentrate) செய்தால் கூடிய சித்தியடைவோமென்பதாகும். கடவுள் வழிபாட்டிலோ, கல்வியிலோ, தொழிலிலோ எந்தக் கருமத்திலோ முழுமனதுடன் கருமம் பார்க்கவேண்டும்.

எப்படிப் படிக்கவேண்டும் என்பதற்கு என் தந்தையார் ஒரு புத்திமதியைக் கூறினார். நான் கேம்பிரிட் ஜூனியர் (க. பொ. த சாதாரணத்திற்குச்சமன்) வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறேன். அப்பொழுது எனக்குப் பதின்மூன்று பதின்நான்கு வயதிருக்கும். ஓர் இரவு ஒன்பதரை மணியாகியும் படித்துக்கொண்டிருந்தேன். தந்தையார் கூப்பிட்டு, இந்தப் படிப்புக்கு இரவு ஒன்பதுக்கு மேல் படிப்பதாயிருந்தால் மேற்படிப்புப் படிக்கும்பொழுது இரவே காணமல் போய்விடும். உனது சிறிய தந்தையார் எந்தப் பட்டப் படிப்பிற்கும் இரவு பத்து மணிக்கு மேல் படிக்கவில்லையே என்றார். இதன்பின் நான் படிக்கிற நேரத்தைக் குறைத்து மனதை ஒருமைப்படுத்திப் படித்துவந்தேன். நான் படிப்பிலும் மற்றக் கருமங்களிலும் கண்ட சித்தி, முழுமனதுடன் கருமங்களைச் செய்ததால் என்று திடமாகக் கூறுகிறேன். இது மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவிருக்கட்டும்.

ஒரு கலையைக் கற்கும்பொழுது எப்படி ஒருமைப்படுத்திய மனதுடன் கற்க வேண்டுமென்று மகாபாரதத்தில் காண்கிறோம். துரோணர் அர்ச்சுனனுக்கு வில் வித்தையைக் கற்பிக்கும்

பொழுது ஒரு செயற்கைப் பறவையை மரக்கிளையில் கட்டி விட்டு அர்ச்சுனனைச் சரியாக இலக்குவைத்து அம்பைப் பறவை யின் கண்ணுக்கு எய்யச்சொல்கிறார். அப்பொழுது துரோணர், இந்தச் சபையில் உள்ளவர்களைத் தெரிகிறதாவென்று கேட்க, அர்ச்சுனன் இல்லை யென்றான். மரக்கிளை தெரிகிறதா; இல்லை என்றான் அர்ச்சுனன். பறவை தெரிகிறதா; இல்லை என்றான். கடைசியில் துரோணர் என்ன தெரிகிறது என்கிறார். அதற்கு அர்ச்சுனன் பறவையின் கண்மாத்திரம் தெரிகிறதென்றான். எய்து சரியாக அம்பைப் பறவையின் கண்ணில் ஏற்றிவிடுகின்றான். இது தான் ஒரு மனதுடன் ஒரு கருமத்தைத் திருப்திகரமாகச் செய் வது. கிரிக்கெட் வீரன் பிராட்மன் சிறிதுநேரம் ஆடத்தொடங் கியதும் தன் மனத்தை ஒருமைப்படுத்தப் பந்து கிரிக்கெட் பந்து மாதிரியில்லை; உதைப்பந்தாட்டப் பெரிய பந்துபோல் தெரியும் என்கிறார். மனதை ஒருமைப்படுத்த பெரிய காரியங்களைச் செய்து விடலாம். ஓரளவில் பிராட்மன் அனுபவத்தைப் பார்த்தால் எப்படி கிருஷ்ணனின் விசுவரூபத்தை மனதை ஒருமைப்படுத்திய தியானத்தால் அர்ச்சுனன் கண்டிருப்பாரென்று ஊகிக்கக்கூடிய தாயிருக்கின்றது.

பெற்றோருக்கு ஒரு வேண்டுகோள். பிள்ளைகள் படிக்கும் நேரத்தில் வேறு வேலைகள் கொடுக்கப்படாது. படியாத நேரங் களில் நிறைய வேலை கொடுக்கலாம். ஆனால் மனத்தை முழுப்படிப் பில் செலுத்துவதற்குப் படிக்கும் நேரத்தில் வேறுவேலை கொடாது விடுதல் நல்லது. எந்நேரங்களில் என்னவேலை செய்யவேண்டு மென்று பெற்றோரும் பிள்ளைகளும் ஒருங்கு சேர்ந்து நிர்ணயித் துக் கொள்ளலாம். அதன்பின் படிப்பு நேரத்தை முழு மூச் சுடன் படிப்பில் செலுத்தவேண்டும். பிள்ளைகள் ஆணோ பெண்ணோ எல்லா வேலைகளையும் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு வேலையும் தங்களுக்குக் குறைந்த தென்று நினைக்கக் கூடாது. பிள்ளைகள் படிக்கிற நேரத்தைவிட்டு மறுநேரங்களில் தாய் தந் தையருக்குக் குடும்பத்தை நடத்துவதற்கு உதவிசெய்யவேண்டும்.

வேலையின் பெறுமதி அதன் தரம். துப்பரவான வேலை செய் தால் தரம் உயரும். பொருளின் மதிப்பும் கூடும். ஏன் ஜப்பான் தேசத்தில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு கிராக்கி இருக்கி றது? காரணம் பொருளின் தரமே. ஜப்பானிய தொழிலாளி முழுமனதுடன் கருமத்தை செய்வதால் நல்ல தரமானபொருள் கிடைக்கிறது. அதேபோல் எங்கள் மக்களுக்கும் நல்ல தரமான வேலை செய்கிறவர்கள் என்றபெயருண்டு. வைத்தியரோ, பொறி

யியலாளரோ, அரசாங்க அதிகாரியோ, லிகிதரோ, தொழிலாளியோ தன்கடமையைச் செவ்வனே செய்வதால் நற்பெயர் வருகிறது. இதை நாம் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும்.

முழுமனதுடன் கடமைசெய்வதற்கு ஒவ்வொருவரும் தத்தமக்கு விரும்பிய தொழிலை செய்வதுதான் உசிதம். ஆனால் இவ்வுலகில் எல்லோருக்கும் இது கிடைப்பதில்லை. விரும்பிய தொழில் கிடையாவிட்டால் அடுத்தபடியாக செய்யும் தொழிலை விரும்பிப் பழகவேண்டும். கல்வியைப் பார்க்குமிடத்து ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏதோ ஒன்றோ இரண்டோ பாடங்களில் கூட கவர்ச்சி இயல்பாக இருக்கும். பெற்றோர் இதை கவனித்து மேற்படிப்புக்கு இந்தப்பாடத்தையோ, பாடங்களையோ கற்கவழிவிட வேண்டும். இதை விட்டு விட்டு ஒரு பிள்ளைக்கு விருப்பமில்லாத பாடத்தை மேற்படிப்புக்கு படிக்கச்சொன்னால் பிள்ளைக்கு தீங்கு விளைவிக்கிறதாய் முடியும். ஜப்பானுக்கு நான் போயிருந்த பொழுது ஜப்பானிய நண்பன் இல்லத்திற்கு சென்றேன். அந்நேரம் அவரது மகனுக்கு பத்துபதினொரு வயதிருக்கும். அவ்விடம் வந்தான். அப்பொழுது மகன் என்னத்திற்குப் படிக்கப்போகிறார் என்று தந்தையிடம் விசாரிக்க அவர் தனக்கு இன்னமும் தெரியாது அவனையே கேளுங்களென்றார். இது ஒரு சிறந்த கொள்கை. எதிர்காலத்தில் விரும்பிய படிப்பைப் படிப்பதற்கும், விரும்பிய தொழிலைச் செய்வதற்கும் ஒவ்வொருவரும் தான் தான் நிச்சயிக்கவேண்டும். சந்தேகமிருந்தால் தாய் தந்தையரைக் கேட்கலாம்.

ஒரு கட்டுப்புல்லைக்கொண்டு வரச் சொல்ல ஒருவர் ஒரு புல்லை எடுத்துக் கட்டிக் கொண்டுவந்து கொடுத்ததுபோல் அரைகுறையாக ஒரு கருமத்தையும் செய்யப்படாது. முழுமனதுடன் செய்தால், செய்கிறவருக்கும் நல்லது சமூகத்திற்கும் நல்லது. இப்படிச் செய்ய எத்தனிப்போமாக!

அத்தியாயம் 23

# விவசாயத்தில் அமரர் "தும்" காட்டிய முன்மாதிரி

1925ம் ஆண்டிற்கும் 1930ம் ஆண்டிற்குமிடையில் எனது தந்தையாரை வெள்ளைச் சேலையணிந்த ஒரு இளம்பெண் அடிக்கடி வந்து காண்பார். தனது சோகக்கதை சொல்வதற்கும் எதிர்காலத்தில் என்னசெய்வதென்று புத்திமதி கேட்கவுமே இவர் வந்து சென்றார். தந்தையார் இவரைப்பற்றிக் கூறியதன் சுருக்கம் பின்வருமாறு:—

முருகர் என்றொரு இடைக்காட்டு வாசி (எங்கள் உறவினர்) சாவகச்சேரியில் குடியேறி அங்கே சிறப்பாக வாழ்ந்தார். அவருடைய பரம்பரையில் வந்தவர் தம்பு நீதிமான். தம்பு நீதிமான் மகள் நல்லம்மாவை சட்டத்தரணி வேலுப்பிள்ளைக்கு (இவரும் ஒரு இனத்தவர்) விவாகம் செய்தார்கள். ஏதோ கலியாணம் சரிவராமல் கலியாண எழுத்து ரத்துச் செய்யப்பட்டது. அக்காலத்தில் விசனத்துடன் திரு. வேலுப்பிள்ளை எனது தந்தையாரை அணுகி, தனக்குத் தகுதியான ஒரு பெண்ணை இரண்டாம் விவாகம் செய்து தருமாறு கேட்டார். எனது தந்தையார் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து இவருக்கு விவாகம் செய்து வைத்தார். ஐந்து பிள்ளைகள் பிறந்தபிறகு வேலுப்பிள்ளை மரணமானார். இந்தப் பெண்தான் எங்கள் வண்ணார்பண்ணை வீட்டுக்கு அடிக்கடி வருகிறவர். வேலுப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது ஆண்பிள்ளை குமாரசுவாமி. இவரைச் சின்னத்தம்பி என்று

இனத்தவர் கூப்பிடுவார்கள். இளம் வயதில் எனக்குக் குமார சாமியிலும் பார்க்க அவரது தமையன் நமசிவாயத்தைக் கூடத் தெரியும்.

இவர்களைப் பிறகு வண்ணார்பண்ணையில் காணவில்லை. ஒரு முறை எனது இனத்தவர்களைப் பார்க்கச் சங்கத்தானைக்குப் போனபொழுது இக்குடும்பத்தை அங்கே சந்தித்தேன். அவர்கள் சங்கத்தானையில் குடியிருக்கிறார்களென அப்பொழுது தெரிய வந்தது. முதல் சாவகச்சேரியிலும் பிறகு யாழ்மத்திய கல்லூரியிலும் குமாரசுவாமி படித்ததாக எனக்கு ஞாபகம். 1937ம் ஆண்டு எனது ஒன்றுவிட்ட சகோதரியின் விவாகத்திற்கு சங்கத்தானை சென்றேன். மணமகள் இல்லம் மீசாலையில். மணமகனை அழைக்க நான் சென்றபொழுது குமாரசுவாமியும் வந்திருந்தார். அக்காலத்தில் நான் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் மாணவனாயிருந்தபடியால் இக்கல்லூரியைப் பற்றி குமாரசுவாமி நாங்கள் மீசாலைக்கும் சங்கத்தானைக்குமிடையில் நடந்து கொண்டு போனபொழுது விபரமாகக் கேட்டார். தானும் இன்னும் ஒரு வருடத்தில் இக்கல்லூரியில் சேர்வதால் பலதைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்றார். பின்பு மேற்படிப்புக்கு நான் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாய்த் திரும்பிவந்து பல்கலைக்கழகக் கல்லூரியில் ஒரு வருடம் விரிவுரையாளராயிருந்தேன். அப்பொழுது குமாரசாமி மாணவனாயிருந்தார். எப்பொழுதும் என்னைக் கண்டால், ''ஏதாவது செய்து இன்னாரென்று பிறர் கூறுமாறு நான் வரவேண்டும்'' என்று கூறுவார். நான் உற்சாகப்படுத்திவந்தேன்.

## அபிவிருத்தித் திட்டங்கள்

அவர் மனதிலிருந்ததற்கு அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் சந்தர்ப்பம் கொடுத்தார். 1947ம் ஆண்டு சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினரானார். அக்காலத்தில் பாராளுமன்றத்தில் ஆக வயது குறைந்தவர் குமாரசுவாமியென்று பலர் பேசுவர். 1948ம் ஆண்டு நான் வவனியாவுக்கு அரசாங்க அதிபராகக் கடமையாற்றத் தொடங்கினேன். வவனியா பாராளுமன்ற உறுப்பினர்

பெரியார் சுந்தரலிங்கத்துடன் சேர்ந்து பல முன்னேற்றத் திட்டங்களை உருவாக்கினோம். வவனியாவுக்கு வடக்கே குமாரசுவாமியின் பகுதியில் (முக்கியமாக துணுக்காய் பூநகரி) குமாரசுவாமி பல அரிய சேவைகள் செய்தார். இப்பகுதியில் விவசாய அபிவிருத்திக்கு இவரே வித்திட்டார். ஆனையிறவுக்கு வடக்கேயும் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றினார்.

1952ம் ஆண்டு குமாரசுவாமி உணவு விவசாய அமைச்சுக்கு பாராளுமன்ற செயலாளராக (இப்பொழுது பிரதி அமைச்சர் என்று கூறுகிறார்கள்.) நியமிக்கப்பட்டார். அமைச்சராக சேர் ஒலிவர்குணதிலகா கடமையாற்றினார். சேர் ஒலிவர் செனற் சபையிலிருந்ததால் பாராளுமன்றத்தில் இந்த அமைச்சை குமாரசுவாமி பார்வையிட்டார். அக்காலத்தில் இந்த அமைச்சில் நான் உணவு உற்பத்தி இலாகா தலைவராய் கடமையாற்றியதால் குமாரசுவாமியின் செயல்களை அவதானிக்கக்கூடியதாயிருந்தது. சேர் ஒலிவர் பிற ஊர்போன சந்தர்ப்பத்தில் குமாரசுவாமி சிலவாரங்களாக பதில் அமைச்சராயிருந்தார். அந்த நாட்களில் என்னைக் கூட்டிக்கொண்டு பூநகரி துணுக்காய் பகுதிகளை பார்வையிட்டார். அப்பொழுது பொதுமக்களுடன் பழகுதலும் அவர்கள் தேவைகளை விசாரிப்பதும் அவைகளை பூர்த்தி செய்வதிலும் வல்லமை காட்டினார்.

இவருடைய முக்கிய வல்லமை lobbying அதாவது பாராளுமன்றத்திற்கு வெளியே அமைச்சரை சிநேகமுறையில் சந்தித்து தன் பகுதிக்கு தேவையான உதவியை பெறுதல். நான் இந்த முறையில் நம்பிக்கை உள்ளவன். பாராளுமன்றத்தில் ஒரு சலுகை கேட்டால் சிலவேளைகளில் அமைச்சருக்கு சம்மதிக்க கஷ்டமிருக்கலாம். ஆனால் விஷயம் மிகப்பெரியதாயில்லாவிட்டால் பிரத்தியேகமாக அமைச்சரை அவர் கந்தோரிலோ வேறு எந்த இடத்திலோ சந்தித்து பரிவாகக் கேட்டால் பெறக்கூடிய வாய்ப்பிருந்தது. குமாரசுவாமி இதை நன்றாய் பயன்படுத்தினார். இவரைப்போல் ஊர்காவற்துறை அங்கத்தவர்களாயிருந்த தம்பி ஐயா பிறகு கந்தையாவும் இம்முறையை சிறப்பாக கையாண்டார்கள். தம்பிஐயா இதை ஒரு கலையாக்கிவிட்டார்.

தன்னுடைய பகுதிக்கு ஒரு தேவையிருந்தால் ஏதோ விதத்தில் குமாரசுவாமி பெற்று விடுவார். முதலில் மிகவும் சிநேக முறையில் அணுகிப் பெறப்பார்ப்பார். சரிவராவிட்டால் அந்த அமைச்சருக்கு கொடுக்கும் தொந்தரவை தாங்கமுடியாமல் கொடுத்து விடுவார். இது எல்லோராலும் செய்யக்கூடிய விஷயமல்ல. ஒன்பதாண்டுகள் தொடர்ந்து தன் பகுதியிலே பல தேவைகளை பூர்த்திசெய்தார். தீர்க்கதரிசியாய் குடாநாட்டுக்கு வெளியே நாம் குடியேறி விவசாயம் செய்ய வேண்டுமென்று ஆயிரக்கணக்கான விவசாயிகளை குடியேற்றினர்.

ஓர் அரசியல் வாதியைப் பற்றி குற்றம் சொல்லாமல் மக்கள் விடுவதில்லை. இதற்கு அமரர் குமாரசுவாமியும் விதிவிலக்கல்ல. 'அப்பன் அருமை அப்பன் மறைந்த பிறகுதான் தெரியும்' என்பார்கள். அமரர் குமாரசுவாமியின் செயல்களைப்பற்றி இவர் மறைவுக்குப் பின் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். இவரது பாராளுமன்ற ஒன்பது ஆண்டு வாழ்க்கையில் உண்மையாகவே அரிய பெரிய கருமங்களை செய்து முடித்தார். விவசாயத்தில் இவரின் ஈடுபாடு மிகவும் முக்கியமானது. இவர் விவசாய முன்னேற்றத்திற்கு காட்டிய வழியை பின்பற்றினல் நம் இனம் மிகவும் பலன் அடையும். இவர் தொடங்கிய பல கருமங்களை தொடர்ந்து செய்வதே. இவருக்கு நாம் செய்யும் கைமாறு. இவருடைய அரிய பெரிய சாதனைகள் எங்கள் எதிர்கால சந்ததியினருக்கு உற்சாகம் கொடுத்து பல குமாரசுவாமிகளை உருவாக்க உதவட்டும். இன்று இவர் அமரத்துவம் அடைந்த தினம். இன்று இந்தப் பெருமகனுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

அத்தியாயம் 24

# நம்பிக்கையின் வல்லமை

ஒருவர் ஒரு சிறு கடலைக் கடக்கவேண்டியிருந்தது. அவரது நண்பன் ஒரு இராமபக்தன். ஏதோ ஒரு சிறு ஓலையை அவரிடம் கொடுத்து "இதை வேட்டித் தலைப்பில் கட்டிக்கொண்டு போனால் தண்ணீரில் நடக்கக்கூடியதாயிருக்கும். ஆனால் அதற்குள் என்ன இருக்கிறதென்று பார்த்துவிடாதே, பார்த்தால் தண்ணீரில் மூழ்கி விடுவாய்" என்று எச்சரிக்கை செய்தான். அப்படியே அவர் மிகவும் சுலபமாக தண்ணீரில் நடந்து செல்லும்பொழுது அந்த ஓலை என்னவாயிருக்குமென்று யோசித்து வேட்டித்தலைப்பை அவிழ்த்துப் பார்த்தார். அதில் 'ராமா' என்று எழுதியிருந்தது 'ஆக, இது தானே இந்த ஓலையிலிருக்கிறதென்று' யோசித்தவுடன் நம்பிக்கை இழந்து நீரில் மூழ்கிவிட்டார். இக்கதையை இராமகிருஷ்ண பரமஹம்சர் நம்பிக்கையின் வல்லமையை வற்புறுத்துவதற்கு எடுத்துக்காட்டினார். எவ்வளவு தியானமும் பிரயாசையும் நம்பிக்கை இல்லாமல் சித்தி கிட்டாது என்றார் பரமஹம்சர்.

இன்னுமொரு உதாரணமும் கூறுகிறார். ஒரு சிறுவன் பாடசாலைக்கு போகும் வழியில் காடு இருந்தது தனக்கு சில சமயங்களில் காட்டுக்கூடாக போகும்பொழுது பயமாயிருக்கிறதென்று தாயிடம் கூறினான். தாய் அதற்கு பயப்பட்டால் 'மது சூதனா' என்று கூப்பிடு என்றாள். மதுசூதனன் யார் என்று கேட்க தாயார் அது கிருஷ்ணனின் ஒரு பெயர் என்று கூறாமல் அவன் உன் அண்ணனென்றாள். ஒருநாள் வீடுதிரும்பும் பொழுது சிறுவனுக்கு பயம்வந்துவிட்டது. மதுசூதனா என்று முழுநம்பிக்கையுடன்

பலதடவை அழுதுகொண்டு கூப்பிட்டான். கடவுளுக்கு இந்த பரிதாபக்குரலை கேட்க தாங்கமுடியவில்லை உடனே அச்சிறுவன் முன் தோன்றி வீடு கொண்டு போய்ச்சேர்த்தார். கடவுள் மறையுமுன் சிறுவனிடம் "எப்போதாவது பயந்தால், கூப்பிடு நான் வருவேன்" என்று அருளினர். இச்சிறுவனின் நம்பிக்கைக் குரலே கடவுளை அவ்விடம் அழைத்தது.

இதுபோல் நம்பியாண்டார் நம்பியின் நம்பிக்கை. தந்தையார் கூறிச்சென்றதை முழுதும் நம்பி, கடவுள் சந்நிதானத்தில் நைவேத்தியம் வைத்து ஒருவிதமாகவும் கடவுள் உண்ண வில்லை என்று கண்டு, ஒரே மனதுடனும் முழுநம்பிக்கையுடனும்—கடவுளை வேண்ட கடவுள் இரங்கி படைத்த உணவை உண்டார் என்பது பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. நம்பிக்கை இருந்தால் முடியாதது யாதொன்றுமில்லை. நெப்போலியன் முடியாதது (impossible) என்ற சொல் அகராதியில் இருக்கப்படாதென்று கூறியிருக்கிறுர்.

*சாதாரண வாழ்க்கையில்*

மேலே கூறிய சம்பவங்கள் சமயத்தோடு சரித்திரத்தோடு சம்பந்தப்பட்டவை. சாதாரண வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணம் கூறுகிறேன்.

எனக்கு இரண்டு ஆண்டுக்கு முன் பி. எஸ். சி. பட்டம் பெற்றவர் எனது நண்பன் அமரர் அருளானந்தம். பி. எஸ். ஸி சிறப்பு பட்டம் (B. Sc Honours) சோதனைக்கு படித்துக்கொண்டிருந்தார். விவேகமிருந்தும் அதிகம் பிரயாசை எடுக்கவில்லை. சோதனைக்கு பத்து வாரத்திற்கு முன் அக்காலத்து கணித பேராசிரியர் பெரியார் சுந்தரலிங்கத்திடம் சென்று "ஐயா எனக்கு முதலாம் பிரிவுக்கு குறையப்பெற விருப்பமில்லை எனக்கு இதைப் பெற இடமிருக்கிறதா" என்று கேட்டார். அதற்கு பேராசிரியர் "சுமாரான இடமுண்டு (Sporting Chance) அதற்கு ஒரு நாளைக்கு பதினுறுமணி நேரம் நம்பிக்கையுடன் படிக்கவேண்டும்" என்றுர். அருளானந்தம் முழு நம்பிக்கையுடன் பேராசிரியர் கூறியபடி படித்தார். அந்நாட்களில் இவரை நான் சந்தித்திருக்

கிறேன். ஏற்கனவே மெல்லிய உடம்புள்ளவர் அக்காலத்தில் மிக வும் மெலிந்திருந்தார்.

படிப்பதும் சாப்பிடுவதும்தான் அவரது வேலை அரை மணி நேரம் பின்னேரத்தில் வீச்சாக நடப்பார். இரவில் ஆறு மணிநேரம் நித்திரைகொள்ளுவார். மறுமொழி வந்துவிட்டது. முதலாம் வகுப்பில் சித்தியடைந்தார். பேராசிரியர் கட்டிப் பிடித்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். நம்பிக்கையுடனும், பிரயாசையுடனும் மனதை ஒருமைப்படுத்திப் படித்ததால் அருளானந்தம் மாபெரும் வெற்றிபெற்ருர். இளம் சந்ததியினருக்கு இதுபோன்ற செயல்கள் உற்சாகம் ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

பலவித நம்பிக்கைகளுண்டு. முக்கியமானவை கடவுள் நம்பிக்கை, தன்னம்பிக்கை, உலக மனித சமுதாயத்தில் நம்பிக்கை. மாசற்ற மனமும் பரந்தமனமும் கடவுள் நம்பிக்கைக்குத் தேவை. இந்த அத்திவாரத்தில் சமயவளர்ச்சியைக் கட்டிஎழுப்ப வேண்டும். கடவுள் நம்பிக்கை உண்டானல் வாழ்க்கையில் எந்த இன்னல்களையும் மனம் சளைக்காமல் சமாளிக்க கூடியதாயிருக்கும்.

வாழ்க்கையில் நம்பிக்கை இருக்கிறபடியால்தான் மனிதன் வாழ்கிருன். தன் நம்பிக்கை சிலவேளைகளில் குறைவாயிருக்கும். இதை இப்படி விட்டுவிடப்படாது. இப்படிப்பட்ட மனிதனுக்கு கடவுள் நம்பிக்கையிருந்தால் எங்களுக்கப்பால் ஒரு சக்தியிருக்கிறது, ஆதலால் ஒரு கருமத்தில் தோல்வியடைந்தால் இது எங்களுக்கப்பால் பட்டதென்று மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கை இல்லாத ஒருவன் தோல்வியடைந்தால் ஏதோ தருணம் வாய்க்கவில்லை அதனுல் தோற்றுவிட்டேன். மறுமுறை பார்ப்போமென்று வரும் கருமங்களில் நம்பிக்கையுடன் நடக்கவேண்டும். எப்படியிருந்தாலும் தன் நம்பிக்கையைக் கைவிடப்படாது.

## மூன்று குணங்கள்

உலகத்தில் பல கஷ்டங்களை அனுபவிக்கிருேம். சில வேளையில் இயற்கை அன்னை கஷ்டங்கள் கொடுக்கிருர். மற்றவேளை

களில் மனிதனே மனிதனுக்கு கஷ்டம் கொடுக்கிறான். அப்படிப் பட்ட சூழ்நிலையில் கூட மனிதசமூகத்தில் நம்பிக்கையை இழக்கக்கூடாது. ஏனென்றால் தீமை செய்பவர்கள் சிலர்; தீமை செய்யாதவர்கள் பலர் என்பதை அறியவேண்டும்.

மனிதரில் மூன்று குணங்களுண்டு. முதலாவது மிருககுணம், அடுத்தது மனிதகுணம், அதற்கு அடுத்தது தெய்வகுணம். யாரும் எங்களுக்கு கோபம் வரக்கூடிய முறையில் நடந்தால் மிருககுணம் உடனே வந்துவிடும். இதை அடக்கவேண்டும். கோபம் வந்தவுடன் ஒன்று, இரண்டு, மூன்று என்று மனதில் எண்ணிக்கொண்டு போக கோபம் குறைந்துவிடும். அத்தருணத்தில் மனிதகுணம் திரும்பிவரும். அதன்பின் நிதானமாக நடப்போம். மனிதன் மனிதனாய் வாழவேண்டும். இப்படி வாழ்ந்து வந்தால் படிப்படியாய் எங்களுக்குள் இருக்கும் தெய்வ குணம் சிறிது சிறிதாக தோன்றி கடைசியில் மற்றவர்களுக்காக வாழப் பழகிக்கொள்வோம். அந்த உயர் இடத்திற்கு வந்ததும் தன் நம்பிக்கையோடு தெய்வநம்பிக்கையும் வந்துவிடும்.

⊰0⊱

அத்தியாயம் 25

# வள்ளுவரும் புற நானூறும் வலியுறுத்தும் பண்பு

சுமார் அரை நூற்ருண்டுக்கு முன் தமிழ் நாட்டிலே ஒரு சிறு கிராமத்தில் ஓர் ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஊர்வலத்தில் அழகிய குதிரைகள் பூட்டிய வண்டியில், ஓர் இளைஞன் பவனிவருகிருர். இவர் இந்த கிராமத்தை சேர்ந்தவர். மேல்நாடு சென்று பல பட்டங்கள் பெற்று ஆங்கில மொழியில் ஒரு பெரிய பேச்சாளராகி தாயகம் திரும்பினுர். பூரணகும்பம் வைத்து தெருத்தெருவாய் மக்கள் வரவேற்ருர்கள். மக்கள் கூட்டத்தில் ஒரு வயோதிபர் ஒரு விதமாக சனக் கூட்டத்தில் நுழைந்து குதிரை வண்டியை எட்டிப் பார்த்தார். உடனே இளைஞன் வண்டியை நிறுத்தி கீழே இறங்கி வந்து இந்த வயோதிபருக்கு வணக்கம் செலுத்தி தனது வயிற்றைத் தட்டி ''உங்கள் உணவு இன்னும் இந்த வயிற்றில் இருக்கிறது'' உன்று கூறி அவரை தன்னுடன் வருமாறு வண்டியில் கூட்டிச் சென்ருர்.

வள்ளுவர் பெருமானின் ''எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு'' என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம் இந்தக் கதையை நான் சிறுவனுயிருக்கும் பொழுது வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் ஒரு பெரியார் கூறியது எனக்கு இன்னும் ஞாபகமாயிருக்கிறது. வண்டியில் வந்த இளைஞன் எனது ஞாபகத்திற்கு எட்டிய அளவில்

நாவலர் (Silver tongued orator) என்ற சிறப்புப் பெயர் பெற்ற வரும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அக்காலத்தில் ஒரு சிறந்த பேச்சாளரான வருமாகிய அமரர் ஸ்ரீ நிவாச சாஸ்திரிகள், இள மையில் வறுமையில் வாழ்ந்தவர். குறிப்பிட்ட வயோதிபர் உண வும் மற்ற வசதிகளும் கொடுத்து சாஸ்திரி அவர்களுக்கு உதவி செய்தார். பெரியவராகியும் சாஸ்திரி அவர்கள் வள்ளுவர் முறை யில் வாழும் தமிழ் மக்களின் பண்புக்கிணங்க இந்த நன்றியை மறக்கவில்லை. அவர் பெற்ற உதவியை பகிரங்கமாகக்கூறக் கூச வில்லை வள்ளுவர் பெருமான் எங்களுள் ஒருவராக உதிக்காவிட் டால் எங்கள் பண்புக்கு இவ்வளவு உன்னத நிலை வந்திருக்குமோ வென்று சந்தேகம் எழலாம். செய்நன்றி கொன்றவர்க்கு உய் வில்லை என்பதை புறநானூறும் வலியுறுத்தும்.

என் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தையும் கூறுகிறேன். நான் புள்ளி விபர இலாகா அதிகாரியாக விருக்கும் காலத்தில் பல அதிகாரிகளை உயர் கல்விக்கு பிறநாடுகளுக்கு அனுப்பியிருக் கிறேன். அவர்களில் ஒருவர் ஒரு நல்ல தமிழ் அதிகாரி. அவருக்கு கிடைத்த புலமைப் பரிசில் பட்டத்திற்கு அல்ல. அமெரிக்காவி லுள்ள பிரபல தாபனத்தில் ஒரு ஆண்டு குடிசன கணக்கீடு முறையை கற்று வருவதற்கு புலமை பரிசில் கொடுக்கப்பட்டது. இதனால் இந்த அதிகாரிக்கு நல்ல அனுபவம் கிடைத்தாலும் உயர் பதவிகளுக்கு தேவையான பட்டமில்லை என்ற குறையிருந்தது. இதை நிவர்த்தி செய்ய இவர் அமெரிக்கா செல்லுமுன் நான் ஒரு புத்திமதியை கூறினேன். இவர் வசிக்கும் இடத்திற்கு சமீ பத்தில் பின்னேரங்களில் படித்து, எம். ஏ. பட்டம் பெறக்கூடிய பல்கலைக்கழகத்தை தேர்ந்தெடுத்து பிரத்தியேகமாக படிக்கப்புத்தி மதி கூறினேன். மேலும் இது மிகவும் கஷ்டம் ஏனென்றால் இரண்டு தாபனத்தில் படிக்க வேண்டும், என்று நான் கூறினேன். அதோடு வீட்டிற்கு சென்று இரண்டு இடத்தில் கொடுக்கும் வீட்டுப் படிப்பும் (Home work) படிக்க வேண்டும். ஆனாலும் இது செய் யக் கூடிய காரியமென்றேன். நான் கூறிய புத்திமதியின்படி படித்து அமெரிக்காவில் கிடைத்த எம். ஏ. பட்டம் தான் தனக்கு இந்த உத்தியோகத்தை கிடைக்கச் செய்ததென்று என்னை வாழ்த்தினர். இவருடைய குடும்பத்திலிருந்து யாரையும் கண்டால் முதல் அவர்கள் குறிப்பிடுவார்கள். ''உங்கள் உதவியால் தான் இந்த நிலையில் இவர் இருக்கிறார்'' என்று இப்பொழுதும் லீவில் இலங்கை வந்ததும் என்னையும் மனைவியையும் சந்தித்து தானும் குடும்பமும் இவ்வளவு நல்லாயிருப்பது எங்கள் உதவியால் என்று கூறுவார். இந்த அதிகாரி நடப்பதைப் பார்த்தால் எவ்வளவு

குறள் எங்கள் பரம்பரையில் சொக்கியிருக்கிறதென்று தெரிகிறது. சாஸ்திரி அவர்களின் நன்றி மறவாமைக்கு இந்த அதிகாரியின் பண்பு ஒரு விதத்திலும் குறைவில்லை,

இங்கே கூறிய நன்றி மறவாத இரு உதாரணங்களை விட இன்னுமொரு சந்தர்ப்பத்தை கூறவிரும்புகிறேன். இப்பொழுது கூறுவது நன்றி மறந்த ஒரு அதிகாரியைப் பற்றி. 1956ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி சேர் ஜோன் கொத்தலாவலையின் தலைமையில் தேர்தலில் தோற்றது. சம்பிரதாய முறைப்படி சேர் ஜோன் புதுப் பிரதமர் அமரர் பண்டார நாயகாவுக்கு பிரதமர் பதவியில் உள்ள கடமைகளை பாரம் கொடுக்கிறார். இது அலரி மாளிகையில் நடந்தது. அத்தருணம் இவர்கள் இருவரையும் விட அங்கிருந்தார் ஒரு அரசாங்க உயர் அதிகாரி. இவரை சேர் ஜோன் இரண்டு ஆண்டுகளுக்கு முன் நியமித்தார். இந்த நேரத்தில் இந்த அதிகாரி சேர் ஜோனைப் பார்க்காமல் புதுப் பிரதமரை மாத்திரம் பார்த்து ''ஆம்சேர், ஆம்சேர்'' என்று பலதடவை கூறிக்கொண்டிருந்தார். சேர். ஜோன் கோபத்துடன் தனது கந்தாவலை வாசஸ்தலத்திற்கு திரும்பினார். அந்நேரம் ஆறு நண்பர்கள் மட்டுமே இவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். வந்ததும் இந்த நண்பர்களுக்கு நடந்ததை கூறினார். அவர் கூறிய எல்லாவற்றையும் எழுத கூசுகிறேன். சேர் ஜோன் பச்சைப்படியாகப் பேசுகிறவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சுருங்கச் சொன்னால் அந்த அதிகாரியைப்பற்றி அவர் கூறியது. யாதெனில் ''இந்தக் குட்டி நாய் நான் பண்டாரநாயக்காவுக்கு பாரம் கொடுக்கும் பொழுது இருந்தான். வாலை ஆட்டிக் கொண்டு எனக்கு முன்னும் பின்னும் திரிந்தவன் என்னைத் திருப்பிப் பார்க்கவில்லை. இவனுக்கு நான் கொடுத்த உத்தியோகத்திற்கு இதுவா இவன் நன்றி.'' இப்படி கூறும்பொழுது கேட்டவர்களில் ஒருவர் எனது நண்பர். அவர் இந்த சம்பவத்தை எனக்கு கூறினார். இது நன்றி இல்லாத ஒருவரின் தாழ்ந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. இம்மனிதனுக்கு தகுந்த தண்டனை சில மாதங்களில் நடந்தது. இவ்வதிகாரிக்கு வயது வந்ததும் அமரர் பண்டாரநாயகா தொடர்ந்தும் இவர் தனக்கு தேவையில்லை என்று கூற, இவரின் அதிகார வாழ்வு முடிந்தது. நன்றி இல்லாதவனுக்கு தகுந்த தண்டனை கிடைத்தது.

ஒரு ஆங்கிலேயர் ஒரு சமயத்தில் என்னை மேல்நாட்டு புலவர்களுக்கும் தென் ஆசிய புலவர்களுக்கும், வித்தியாசம்

உண்டாவென்று கேட்டார். நான் அடக்கத்துடன், இலக்கியத்தைப்பற்றி போதிய அறிவு எனக்கு இல்லை என்றாலும் எனக்கு தெரிந்தளவில் எங்கள் பழம் பெரும் புலவர்கள், புலவர்கள் மாத்திரமில்லை; அவர்கள் ஞானிகள் கூட. இதுதான் வித்தியாசம் என்றேன். எங்கள் பழம் நூல்கள் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டவை. ஒரு சிறு குறளில் எவ்வளவு கருத்துக்கள் உண்டு. எவ்வளவு தத்துவமும் ஞானமும் உண்டு. செய் நன்றி பற்றி வள்ளுவர் பெருமான் சொன்னதை ஆழ்ந்து யோசித்தால் பல எண்ணங்கள் உதிக்கின்றன. செய்நன்றி மறவாமல் இருப்பது ஒரு பெரிய குணம். பொய் சொல்லாமை, இது மனிதனின் முக்கிய நல்ல குணங்களில் ஒன்று. இன்னுமொரு விதமாகப் பார்க்கையில் செய்நன்றி மறத்தல், பொய் சொல்லுதல் ஒருவருக்கு இருந்தால் இவை புற்றுநோய் போல் அம்மனிதனின் மற்றக் குணங்களுக்கும் பரவி அம்மனிதனை ஒரு துட்டனாக மாற்றிவிடும். இதை மனதில் வைத்து உய்வில்லை (செய் நன்றி கொன்ற மகற்கு) என்று வள்ளுவர் பெருமான் கூறினரோ வென்று யோசிக்க இடமுண்டு. குறளுக்கு உயிர்கொடுத்த மக்கள் நாம் என்று பெருமைப்படுகிறோம். எதிர்காலத்தில் இதைப் பேண எம் இளஞ்சந்ததியார் உறுதிகொள்ள வேண்டும். இதில் செய்நன்றி மறவாமல் இருப்பதற்குத் தகுந்த இடம் கொடுப்போமாக.

CHITRA ACHCHAKAM

சித்திரா அச்சகம்
310, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.